உ

சிவமயம்.

தில்லையம்பூர்ச்

# சந்திரசேகரகவிராஜ பண்டிதரால்

நூதனமாக வியற்றப்பட்ட

# வருஷாதி நூற்சித்தாந்த

விளக்கமும்;

இடைக்காட ரருளிச்செய்த

# அறுபது வருஷ பலனும்.

இவை

அமரந்தம்

பொன்னுசாமிசெட்டியா ரவர்களால்

சென்னை வண்ணாரப்பேட்டை

இலக்ஷ்மீவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

யுவ௵ சித்திரை மீ

(Registered Copy Right.)

1875

# விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம்
ரத்துநாயகன்பேட்டை நயினியப்பநாயகன்தெருவில்
கஎ) வது. கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும் அமாந்
ப - பொன்னுசாமிசெட்டியாரிடத்திலும், மீஞ்சூர்-அ
ராவுமுதலியார்தெருவில் (கூ) வது. கதவிலக்கமுள்ள
ட்டிலிருக்கும் தி. சிவகுருநாத முதலியாரிடத்திலும்,
ற்றூரில் தில்லையம்பூர்ச் சந்திரசேகரகவிராஜபண்டித
_த்திலும் கிரயத்துக்கு வாங்கிக்கொள்ளலாம்.

அச்சிட்டுமுடிந்த புத்தகங்கள்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| மஞ்சரி | புத்தகம்-க-க்கு | 0 | 1 | 0 |
| ஷப்பிரதிவிஷத்திரட்டு | ,, | 0 | 2 | 0 |
| வேகசிந்தாமணி | ,, | 2 | 0 | 0 |
| பிராமியந்தாதிப்பதவுரை | ,, | 0 | 3 | 0 |
| ருஷாதிநூற்சித்தாந்தவிளக்கம் | ,, | 0 | 6 | 0 |

அச்சிட்டுவரும் புத்தகங்கள்.

வருணகுலாதித்தன்மடல்.
வைத்திய அட்டவணை.
பரதசாஸ்திரம் உரையுடன்.
பிரசங்கரத்திநாகரம்.
ஆசாரக்கோவை உரையுடன்.
நூதன தனிப்பாடற்றிரட்டு.

# பொருளடக்க அகராதி.


| | பக்கம். |
|---|---|
| அகருகணிக்க | ௭ |
| அக்கினிநாள் | ௪௭ |
| அக்கினியோகம் | ௩௮ |
| அடியளந்தநாழிகை | ௬௩ |
| அஷ்டமராசிக்கூறு | ௪௭ |
| அஷ்டகவர்க்கம் | ௧௬௪ |
| ஷை பலன் | ௧௭௦ |
| அதியுச்சம், நீச்சம் | ௮௪ |
| அந்தரம்பிரிக்க | ௧௬௦ |
| அபிசித்து | ௪௭ |
| அமங்கலநாள் | ௨௭ |
| அமுதாதியோகம் | ௩௩ |
| அமுதசித்தயோகம் | ௩௫ |
| அம்மானுக்கரிஷ்டம் | ௧௦௮ |
| அயனம் | ௧௪ |
| அரசராபதம் | ௧௩ |
| அருக்கனிலை | ௧௨௯ |
| அரைநாண்பூட்ட | ௧௧௪ |
| அர்க்கபலன் | ௧௪௭ |
| அர்த்தமூலம் | ௪௭ |
| அர்த்தோதயம் | ௨௧௨ |
| அலிக்கிரகம் | ௭௪ |
| அலிநாள் | ௨௭ |
| அவச்சாயை | ௬௨ |
| அவமாகம் | ௪௬ |

| | பக்கம். |
|---|---|
| அறுபதுவருஷபலன் | ௨௩௩ |
| அனந்தாதியோகம் | ௩௯ |
| அன்நயநக்ஷத்திரமறிய | ௧௫௬ |
| அன்னப்பிராசனம் | ௧௧௩ |
| ஆகாதமாதம் | ௧௩௪ |
| ஆருலம் | ௪௬ |
| ஆடித்திதிக்குறி | ௧௪௯ |
| ஆடிப்பஞ்சமிக்குறி | ஷை |
| ஆடியுத்திராடக்காற்று | ஷை |
| ஆடிஐந்தாந்தெய்திபலன் | ௧௪௮ |
| ஆண்கிரகம் | ௭௪ |
| ஆண்பெண்ணறிய | ௧௫௬ |
| ஆண்டுமிச்சம் | ௨௩௧ |
| ஆண்ராசி | ௭௨ |
| ஆதாயஞ்செலவு | ௧௧ |
| ஆதித்தபார்வை | ௪௨ |
| ஆந்தைக்கூதல் | ௧௮௫ |
| ஆபரணமிட | ௧௧௮ |
| ஆயுட்சோதனைப்பொருத்தம் | ௧௩௯ |
| ஆயுதம்பிடிக்க | ௧௧௮ |
| ஆருடம், ஆருடராசி | ௧௫௭ |
| ஆவணிமுழக்கம் | ௧௪௭ |
| ஆவணிமூலபலன் | ஷை |
| ஆழ்வாராதிகள்வரலாறு | ௨௩௦ |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| இடவிபரம் | அசு | கரணம் | ருச |
| இடைநிலைநாள் | உசு | கரிநாள | கஅ |
| இருகால்ராசி | எஉ | கனாசட்ட | சஉரு |
| உக்கிரநாள் | உரு | கர்த்தாரியோகம் | சஅ |
| உச்சநிலைநாள் | உசு | கர்ப்பச்சடங்கு | உகூஉ |
| உச்சவீடு | அ0 | கர்ப்போட்டம் | சரு0 |
| உடலற்றநாள் | கூ0 | கலப்பைச்சூலம் | ககூ |
| உடலுதயராசி | எகூ | கலிதினங்கணிக்க | உ |
| உஷ்ணம் | சஅ | கலைஞானபாதம் | சஎ |
| உதயகாலமணியறிய | சுச | கவிப்புராசி | கருஎ |
| உதயராசி | கருஎ | காக்கைக்காதல் | கஅகூ |
| உபநயனஞ்செய்ய | ககசு | காதுகுத்த | ககஉ |
| உபயகிரகம் | எரு | காரகன் | கூஎ |
| உபயராசி | எஉ | காரககிரகம் | அஎ |
| உழவுசெய்ய | ககஅ | காலசக்கரபுக்தி | கூச |
| ஊமைராசி | எக | காலவோரை | ருரு |
| எண்ணெயிட | ககூரு | காலற்றநாள் | கூ0 |
| எழுத்தாணிநூல் | கஅகூ | காலுதயராசி | எஉ |
| ஏகாதிபத்தியசோதனை | கசுஎ | கிணறுவிழும்இடமறிய | சஉரு |
| ஏசார்க்களம் | ருகூ | கிணறுவெட்ட | ௱ |
| ஐசிரசு | ருச | கிரகங்கள் | எகூ |
| ஓதாதகாலம் | ககசு | கிரகுணம் | எரு |
| ஓலையெழுதவரிகணக்கு | ௱ | கிரககுணாகாரம் | ககூஅ |
| கஜரயோகம் | ச0 | கிரகசமயம் | கஅஉ |
| கணம் | உஅ | கிரகசமன் | அக |
| கண்டாந்தம் | சஎ | கிரகசமித்து | எஅ |
| கதிரறுக்க | கஉஉ | கிரகராசி | எரு |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| கிரகசுவை | ௭௮ | கிராணதோஷம் | ௪௮ |
| கிரகதானியம் | ௭௭ | கிராந்தம் | ௫௦ |
| கிரகதிக்கு | ௭௬ | கிழமைபிறந்தநாள் | ௪௨ |
| கிரகதேசம் | ௭௯ | கீழ்நிலைநாள் | ௨௬ |
| கிரகதேவதை | ஷை | கீழ்நோக்குநாள் | ௨௬ |
| கிரகநட்பு | ௮௧ | குணசமூகம் | ௧௬௯ |
| கிரகநட்புவீடு | ௮௮ | குளிககாலம் | ௨௨ |
| கிரகநித்தியசத்தி | ௯௧ | கூகைதோஷம் | ௪௮ |
| கிரகநிறம் | ௭௪ | கூடாதநாள | ௫௨ |
| கிரகபகை | ௮௧ | கோசாரபலன் | ௯௮ |
| கிரகபகைவீடு | ௮௯ | ஷை பார்வைகாலம் | ௯௭ |
| கிரகபலகாலம் | ௯௧ | கோசாரவேதை | ௧௦௬ |
| கிரகபாஷை | ௭௫ | கோடியுடுக்க | ௧௧௭ |
| கிரகபார்வை | ௮௫ | கௌரிபஞ்சாங்கம் | ௧௯௭ |
| கிரகபுஷ்பம் | ௭௭ | சகடயோகம் | ௪[illegible] |
| கிரகபுத்திரர் | ௭௩ | சகுனம் | ௧௮௫ |
| கிரகப்பிரவேசம் | ௧௧௨ | ஷை பரிகாரம் | ௧௮௭ |
| கிரகரத்தினம் | ௭௭ | சங்கிரமங்கணிக்க | ௩ |
| கிரகலோகம் | ஷை | சதாஜீவநாள் | ௨௮ |
| கிரகவடிவம் | ௭௪ | சத்தசிலாசக்கரம் | ௨௦௦ |
| கிரகவலிகாலம் | ௮௮ | சத்தவருஷம் | ௧௩ |
| கிரகவாகனம் | ௭௮ | சந்திரபலன் | ௧௪௬ |
| கிரகவூண் | ஷை | சந்திரபார்வை | ௪௩ |
| கிரகாங்கம் | ௮௫ | சமனோக்குநாள் | ௨௭ |
| கிரகாசனம் | ௭௬ | சரக்கிரகம் | ௭௫ |
| கிரகாட்சிவீடு | ௮௦ | சரநாள் | ௨௬ |
| கிரகாவஸ்தை | ௧௮௨ | சராசி | ௭௧ |

| | பக்கம். |
|---|---|
| சலநாள் | உஎ |
| சரராசி | எங |
| சன்மானுஜன்மம் | உஅ |
| சாதகமுதலிய 18-பொருத்தம் | கஙரு |
| சித்திரைமீனபிறப்புகணிக்க | ங |
| சேஷ்ட பலன் | கசஎ |
| சிறுபொழுது | கரு |
| சீதாசக்கரம் | ககூo |
| சீமந்தம் | ககக |
| சுட்கநாள் | உஎ |
| சுட்கராசி | எங |
| சுபமாசாதி | உகக |
| சுபயோகம் | ஙசு |
| சூபாவநாள் | உசு |
| சூரியஸ்புடம் | ச |
| சூரியவீதி | கரு |
| சூக்ஷமம்பிரிக்க | கசுக |
| செவிட்டுராசி | எக |
| சென்றமாதநாள்நாழிகை | கஎ |
| சோதிமின்னல் | கருங |
| தக்தயோகம் | ஙஅ |
| தசவர்க்கம் | கஎசு |
| தனியனாள் | உஙக |
| தலையற்றநாள் | ஙo |
| தலையுதயராசி | எஉ |
| தற்காலகிரகவேதை | ருக |

| | பக்கம். |
|---|---|
| தனிஷ்டாபஞ்சமி | ஙஉ |
| தாராபலன் | கசரு |
| தானியமிட, எடுக்க | கஉஉ |
| திசாபுக்தி அந்தரம் | உகரு |
| திசாபுத்திபிரிக்க | கருக |
| திசையோனி | கஙo |
| திசைவிபரம் | கூஉ |
| திதி | ககூ |
| திதிச்சூலம் | உங |
| திதித்தியாச்சியம் | ருஎ |
| திதிகளின்தேவதை | உகo |
| திதியமுதயோகம் | ஙரு |
| திரகாணம் | உகக |
| திரக்கிரகம் | எரு |
| திரநாள் | உரு |
| திரராசி | எஉ |
| திரிகோணசோதனை | கசுஎ |
| திரிதினஸ்பிர்க் | சசு |
| திருத்தொண்டர் வரலாறு | உஉச |
| தினபலன் | கசரு |
| தும்மல் | கஅங |
| துரிதநாள் | உரு |
| துருவங்கள் | உஙஉ |
| துவாதசலக்னம் | கஎகூ |
| தூமாதிகிரகம் | எங |
| தூமாதியுச்சம் | அங |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| தேங்காய்சகுனம் | ௧௮௮ | நித்தியமகாதிசை | ௧௪௪ |
| தேதிமழை | ௧௫௩ | நித்தியயோகினி | ௧௪௨ |
| தோஷநிவாரணம் | ௫௩ | நிலைச்சூலம் | ௧௩௫ |
| நட்பாட்சியுச்சபலன் | ௯௨ | நீசபங்கம் | ௮௩ |
| நட்சத்திரம் | ௨௫ | பகல்நாழிகை | ௬௧ |
| மேற்படி தேவதை | ௩௦ | பகல்விழிப்புராசி | ௭௧ |
| மேற்படி ஆதாயம் | ௧௨ | பஞ்சசம்பார்க்க | ௧௫௩ |
| மேற்படி உச்சநாழிகை | ௬௮ | பஞ்சகோள்தோஷம் | ௪௫ |
| மேற்படி கந்தாயம் | ௧௫௬ | பஞ்சசகுனம் | ௧௮௭ |
| மேற்படி தியாச்சியம் | ௫௭ | பஞ்சசிலாசக்கரம் | ௧௯௯ |
| மேற்படி சூலம் | ௨௩ | பஞ்சபக்ஷி | ௧௯௧ |
| மேற்படி பக்ஷி | ௨௮ | பஞ்சபூதக்கிரகம் | ௭௯ |
| மேற்படி பா | ௩௧ | பக்ஷம் | ௧௯ |
| மேற்படி மரம் | ௨௮ | படுபக்ஷி | ௧௯௩ |
| மேற்படி மிருகம் | ௨௯ | பணிச்சக்கரம் | ௧௧௯ |
| மேற்படி வாமாதிவேதை | ௫௧ | பயநாள் | ௨௫ |
| மேற்படி விழுமாதபலன் | ௧௪௮ | பரிவேடக்குறி | ௧௫௦ |
| நந்தையாதிகள் | ௧௯ | பலகால்ராசி | ௭௨ |
| நவநாயகர் | ௯ | பல்லிக்காதல் | ௧௮௩ |
| நாசயோகம் | ௩௬ | பல்லிவிழும்பலன் | ௧௬௫ |
| நாமகரணஞ்செய்ய | ௧௧௨ | பறக்கும்ராசி | ௭௨ |
| நாமநக்ஷத்திரஎழுத்து | ௬௦ | பாசகன் | ௬௭ |
| நால்வர்முத்திநாள் | ௧௯௦ | பாடாவாரி | ௪௮ |
| நாளின்பகற்கூறு | ௨௧ | பாட்டனுக்கரிஷ்டநாள் | ௧௦௮ |
| நாள்விழிப்பு | ௨௪ | பாவகவிபரம் | ௪௬ |
| நாற்கால்ராசி | ௭௨ | பிரதிஷ்டைபண்ண | ௧௨௨ |
| நிஷேகம் | ௧௧௧ | புதிதுண்ண | ௧௨௩ |

| | பக்கம். |
|---|---|
| பருஷநாள் | உஎ |
| பூமிவசியநாள் | க0அ |
| பெண்கிரகம் | எச |
| பெண்ணாள் | உஎ |
| பெண்ராசி | எஉ |
| பெரும்பொழுது | சரு |
| பொழுதுகட்டுங்குறி | சசஅ |
| போதகன் | கூஎ |
| மகவோட்டம் | கருக |
| மகோதயம் | உசஉ |
| மடசுத்தம் | கஉகூ |
| மயிர்கழிக்க | ககச |
| மருந்துண்ண | கஉச |
| மலமாதம் | சகூ |
| மழைக்குறி | கருங |
| மழைமரக்கால் | கூ |
| மறுமையிலடையுமிடம் | கூ0 |
| மணகோல | கஉச |
| மனைநூல் | கஙக |
| மாதங்கள் — X — 15 | கசு |
| மாதசூனியம் | கஎ |
| மாததெய்திநாழிகை | சசு |
| மாதபகல்நாழிகை | சுஉ |
| மாதபலன் | கசச |
| மாதமகாதிசை | கசங |
| மாதமழை | க0 |
| மாதாபிதாவரிஷ்டம் | ச0எ |

| | பக்கம். |
|---|---|
| மிருதவேளை | சஅ |
| மிருதுநாள் | உரு |
| முகூர்த்ததோஷம் | சகூ |
| முகூர்த்தவயது | ரு0 |
| முக்குணக்கிரகம் | எசு |
| முடிசூட்ட,பாகைபோட | ககசு |
| முப்பிணிக்கிரகம் | எசு |
| முழுநக்ஷத்திரம் | உக0 |
| மூலத்திரிகோணம் | அக |
| மூன்றாம்பிறை | கருஉ |
| மேசமறிய | கூ |
| மேகோற்பத்தியிடம் | க0 |
| மேஷெக்குநாள் | உசு |
| யாத்திரைசெய்ய | கஉசு |
| யாத்திரைச்சூலம் | கஉஎ |
| யுகம் | கஉ |
| யுகம்கணிக்க | க |
| யோகம் | ருச |
| யோகினிநிலை | ருகூ |
| ராகுகாலம் | உக |
| ராசிகள் | சுகூ |
| ராசிகளில்கிரகநிலைநாள் | அஎ |
| ராசிகிரகபுலன் | கூ0 |
| ராசிகுணாகாரம் | கசுஅ |
| ராசிசாதி | எ0 |
| ராசிதிக்கு | ஞை |
| ராசிநக்ஷத்திரநிலை | ஙக |

| | பக்கம். |
|---|---|
| ராசிநாழிகை | ௬௯ |
| ராசிசிறம் | ௭௧ |
| ராசிமாதம் | ௬௯ |
| ராசிமானசங்கை | ௭ |
| ராசியாங்கம் | ௭௦ |
| ராசியாதாயம் | ௧௧ |
| ராசியுருவம் | ௭௦ |
| ராசிவிசேஷம் | ௧௨௯ |
| ராநாழிகை | ௬௫ |
| ராமசக்கரம் | ௧௯௧ |
| ராவிழிப்புராசி | ௭௧ |
| ருதுதிதி | ௧௬௩ |
| ,, நக்ஷத்திரம் | ௧௬௧ |
| ருதுபாவம் | ௧௬௩ |
| ருதுலக்கினஇடம் | ௧௬௨ |
| ருதுவாரம் | ௧௬௧ |
| லக்கினஸ்புடம் | ௫ |
| லக்கினதியாச்சியம் | ௫௭ |
| லதை | ௫௧ |
| லாடம் | ௪௯ |
| வணக்கவிதி | ௧௯௦ |
| வயற்சூலம் | ௧௧௯ |
| வருஷங்கணிக்க | ௨ |
| வருஷம் — 13 | ௪௫ |
| வருஷமகாதிசை | ௧௪௩ |
| வருஷாதாயம் | ௧௧ |
| வலவோட்டாதிகள் | ௯௪ |
| வாகனமேற | ௧௧௮ |
| வாசக்கால்வைக்க | ௧௩௬ |
| வாஸ்துதுயிலெழல் | ௨௧௨ |
| வாரங்கள் | ௨௦ |
| வாரசூலமாதி | ௨௧ |
| வாரசூனியம் | ௪௧ |
| வாரத்தியாச்சியம் | ௫௬ |
| வாரமிச்சம் | ௨௩௧ |
| வாரமுக்குணம் | ௨௪ |
| வாரவிசேஷம் | [illegible] |
| வானவில் | ௧௫௨ |
| விஷசூனியம் | ௨௦ |
| விஷ்டிதோஷம் | ௪௪ |
| விதைவிதைக்க | ௧௨௦ |
| வித்தியாரம்பம் | ௧௧௫ |
| விபரீதவேதை | ௧௦௭ |
| வியாதிச்சக்கரம் | ௧௫௮ |
| வியாதிதீராதநாள் | [illegible] |
| விருந்துபரிகாரம் | ௧௨௩ |
| விவாகநாள் | ௧௦௪ |
| விவாகசக்கரம் | ௧௧௦ |
| வேதகள் | ௯௭ |
| வேதைநாள் | ௫௦ |
| வைதிருதி | ௪௯ |
| வைநாசிகம் | ௪௭ |


பொருளடக்க அகராதி முற்றிற்று.

உ

கணபதிதுணை.

# வருஷாதிநூற்சித்தாந்த விளக்கம்.

காப்பு

வெண்பா.

சீருண்வருஷாதிச்சித்தாந்தநூலதனை
ஆருமறியவறைதற்கு - மேரு
விமலவினாகனார் மெய்ப்புதல்வனை
கமலவினாயகனார் காபபு.

யுகங்கணிக்க.

இராசி - கஉ - ஐயும் - கூஅால் பெருக்கின தொகை துருவமாம். இத்துருவத்தை - அ௲ல் - பெருக்கினதொகை - கிரேதாயுகம் - கூ௲ல் - பெருக்கினதொகை. திரேதாயுகம்- ச௲ல் - பெருக்கினதொகை துவாபரயுகம்- உ௲ல் - பெருக்கினதொகை- கலியுகமாம்.

## வருஷங்கள்கணிக்க.

சூஎஅகூ- இத்தொகையாகிய துருவத்தில்பிரபவாதி சென்றவருஷங்கூட்டச் சாலீவாகனவருஷமாம்.

## சாலீவாகனவருஷத்தொகையோடு.

ஙதாஎகூ - கூட்ட - கலியாப்தமாம்.
ஙதாஅ௰ - கூட்ட - பாண்டவாப்தமாம்.
ங௰அ - கூட்ட - போஜராஜாப்தமாம்.
௱உ௰அ - கூட்ட - விக்கிரமாதித்தாப்தமாம்.
எ௱சு௰எ - கழிக்க - கொல்லமாண்டாம்.
சூசுருக - கழிக்க - கிருஷ்ணராயாப்தமாம்.
சூஉ௱௰ - கழிக்க- பிரதாபருத்திராப்தமாம்.
சூ௱அ௰ரு - கழிக்க - இராமதேவாப்தமாம்.

ஒருபிரபவாதிவட்டமாகிய அறுபதுவருஷம் சென்றால் சூஎ௱அ௰கூ ஆகிய முன்துருவத்தொடு- சு௰- கூட்டி வேறுதுருவத்தொகை ஏற்படுத்திக்கொள்ளவும்.

## கலிதினங்கணிக்க.

சாலிவாகனவருஷத்தில் சூரு௱எ௰எ- வாங்கினசேடம்- கலிபுத்தியாம். வருஷப்பிரமாணமான - ங௱சுரு நாள்- கரு - நாழிகை - ஙக - விநாடி - கரு- விகலைகளைக் கலிபுத்தியினால்.இனமினமாகப்பெருக்கி விகலை-சு௰க்கு ஒன்றுவிநாடியாகவும். விநாடி-சு௰க்கு- ஒன்றுநாழிகையாகவும். நாழிகை- சு௰ க்கு- ஒன்று நாளாகவும் கணக்கிட்டுக்கூடிய நாள்நாழிகைவிநாடிவிகலைகளுடன். மூல

த்துருவமாகிய ௰௭ கூஷத்து ௩௰௭தாகூ௰அ நாளும்-அ - நாழிகையும் - ௰௩ - விநாடியும் ௪௰௫ - விகலையும் கூட்டி முன்போலக் கணக்கிட்டுக்கூட்டிய - நாள்நாழிகை விநாடிவிகலைகளேகலி சென்றநாளாதியாம்.

சித்திரைமாதப் பிறப்புக்கணிக்க:

கலிசென்றதினத்தையே-எல்-கொடுத்துநின்ற நாள்நாழிகைவிநாடி விகலைகளில். நின்றநாளைச் சுக்கிர வாரமுதலாகவெண்ணிச் சேடநாழிகை என்னவாரமாமோ அந்தவாரத்தில் நின்றநாழிகை விநாடிவிகலைகளே சித்திரைமாதப்பிறப்பென்றறிவது - எல் - கழித்துநின்ற சேடமே சங்கிரமதுருவமாம் இந்தச்சங்கிரமதுருவத்துடன் அந்தந்தமாதச்சங்கிரமத்தொகையைக் கூட்ட அந்தந்தமாதப்பிறப்பாம். சங்கிரமதுருவத்துடன் வைகாசிமாத சங்கிரமவாக்கியமுதலாகக்கூட்டவும்பங்குனிமாதத்தின்பின்சித்திரைமாத சங்கிரமவாக்கியங்கூட்டினல்- மறுவருஷப்பிறப்பாம். பகலில்மாதம்பிறந்தால் அன்றுமுதல்தெய்தியாகவும் இரவில்மதம்பிறந்தான் மறுநாள் முதல்தெய்தியாகவும் கொள்ளவேண்டும்.

சங்கிரமவாக்கியம்.

| | நாள். | நாழிகை. | விநாடி |
|---|---|---|---|
| வைகாசி | ௨ | ௫௫ | ௩௨ |
| ஆனி | ௬ | ௧௬ | ௪௪ |
| ஆடி | ௨ | ௫௬ | ௨௨ |
| ஆவணி | ௬ | ௨௪ | ௩௪ |

| | | | |
|---|---|---|---|
| புரட்டாசி | உ | உகூ | சுசு |
| ஐப்பசி | ச | ருச | கூ |
| கார்த்திகை | கூ | சகூ | கஙு |
| மார்கழி | க | கஅ | ஙுஎ |
| தை | உ | ஙுகூ | ஙுW |
| மாசி | ச | கூ | சகூ |
| பங்குனி | ரு | ருரு | W |
| சித்திரை | க | கரு | ஙு.க |

## சூரிய துருவம்.

சென்றமாதத்தை இராசியாகவும், சென்றதேதிய்தியைப்பாகையாகவும், முதனாள்இரவில் மாதம்பிறந்தால் பின்னின்றநாழிகையை நாழிகை க-க்கு ஒருகலைவிழுக்காடுகலையாகவும் வைப்பது. பகலில் மாதம்பிறந்தால் முன்னின்றநாழிகையைத்தள்ளிநாழிகை- கூW- ல் முன்தள்ளுண்டநாழிகைபோக மற்றநாழிகைகளை முன்போலநாழிகை- க - க்கு ஒருகலைவிழுக்காடுகலையாகவும் வைப்பது சூரிய துருவமாம்.

## சூரியஸ்புடம்.

இச்சூரிய துருவத்தில் அந்தந்தமாதங்களுக்குச்சொல்லிய யோக்கியாதிவாக்கியத் தொகைகளைக் கூட்டவேண்டிய மாதங்களுக்குக்கூட்டியும், கழிக்கவேண்டியமாதங்களுக்குக்கழித்தும் நின்றது சுத்தசூரியஸ்புடமாம்.

## யோக்கியாதிவாக்கியம்.

| மாதம். | அ-தேதி. | கரு-தேதி. | உசு-தேதி. | ங உதே. |
|---|---|---|---|---|
| சித்திரை | கக | கசு | கரு | கஎ |
| வைகாசி | ககூ | உக | உஉ | உசு |
| ஆனி | உசு | உரு | உரு | உசு |
| ஆடி | உசு | உங | உஉ | உஉ |
| ஆவணி | ககூ | கஎ | கரு | கங |
| புரட்டாசி | கக | அ | ரு | ங |
| ஐப்பசி | உ | உ | ங | ரு |
| கார்த்திகை | ரு | அ | கூ | கஉ |
| மார்கழி | ய | கக | கக | கக |
| தை | ய | கூ | அ | எ |
| மாசி | ரு | சு | உ | ங |
| பங்குனி | உ | சு | ரு | அ |

இந்தயோக்கியாதிவாக்கியங்களை - அ - நாளைக்கு ஒருவாக்கியமாக ஒவ்வொருநாளுக்கும் வந்த ஈவுப்படி - பங்குனிமுதல் புரட்டாசிவரை சூரியதுருவத்தில்வாங்கவும் - ஐப்பசிமுதல் மாசிவரைகூட்டவும்.

## இலக்கினஸ்புடம்.

அன்றைய சூரியஸ்புடத்திலுள்ள ராசிகளைப் புறம்பாகவைத்து, மற்றயபாகை கலைகளை அந்தமாதராசிமான சங்கியைகலைகளாற் பெருக்கிக்கண்ட தொகையை அர்த்தாதிகத்தோடுகலை- ருய- க்கு ஒன்றுகப்பாகையில்

கூட்டி- அவ்வாறேபாகையை- கூ௰ க்கு ஒன்றுக்கிக்கண்டதுகலையாகும். இதற்கு உதயாபூர்வவிநாடியென்றுபெயர். இதைஅந்தமாதராசிமான சங்கியைகலையில்வாங்கின்றது உதயாபரவிநாடியென்றுபெயர்.

ஜநநகாலவரை உதயாதிநாழிகையை கூ௰- ல்பெருக்கிக் கலையாக்கி மேல்நின்றகலைகளையுங்கூட்டி அதில்உதயாபரவிநாடியைவாங்கி முன்புறம்பாகவைத்திருக்கும் சூரியஸ்புடராசியில் ஒன்றுகூட்டி மற்றக்கலைகளில்அடுத்த ராசிமானசங்கியைகள் எத்தனைஎடுபடுகிறதோ அத்தனையும் எடுத்து எடுபட்டராசி ஒவ்வொன்றுக்குஞ் சூரியஸ்புடராசியில் ஒவ்வொன்று கூட்டிக்கொண்டு ராசியில்எத்தனை-கஉ-எடுபடுகிறதோ அத்தனையுமெடுத்துநின்றதைஇராசியாகவைத்துஎடுபடாதகலைகளை-ருட௰-ல்பெருக்கிஅடுத்தராசிமானசங்கியைகலைகளுக்குக்கொடுத்துவந்த ஈவைப்பாகையாகவும், சேடத்தை- கூ௰- ல் பெருக்கி முன்போலக்கொடுத்துவந்த ஈவுடன் அர்த்தாதிகமுண்டானாற் கூட்டிக்கலையாகவைப்பது இலக்கினஸ்புடமாம்.

இலக்கினஸ்புடத்தைநிச்சயிக்க.

இலக்கினஸ்புடத்தை - அக - ல் பெருக்கிக் கலை கூ௰ க்கு- க- ம் பாகை ருட௰- க்கு- க- ம் ஆகமாற்றி ராசி- பாகை - கலைகளாகநிறுத்தி, இராசித்தானத்தில் எத்தனை - கஉ - இராசி எடுபடுகிறதோ அத்தனை ராசிகளையும் எடுத்து - நின்றஸ்புடத்தில் நக்ஷத்திரங்காண்க.

அது சாதகனுக்கு - ஜநநநக்ஷத்திரமாயாவது - திரிகோண நக்ஷத்திரமாயாவது ஜநநலக்கினமா யாவது திரிகோணலக்கினமாயாவது வருமாயின் லக்கினநிச்சயமாம். இல்லாவிடின் அவ்வாறுவரும்படி ஜநநநாழிகையில் கூட்டியாவது குறைத்தாவது வேறேலக்கின ஸ்புடஞ்செய்துகொள்ளவும். ஜநநநாழிகையில் ஒருவிநாடி குறைந்தால் (அக) ல் பெருக்கின ஸ்புடத்தில் - கூ - பாகையும் - ௩உ௯ - கலையுங்குறையும்.

இராசிமானசங்கியை.

| | | | |
|---|---|---|---|
| மேஷம் | மீனம் | உ௱௫கூ | |
| இடபம் | கும்பம் | உ௱அ௪ | ஆக |
| மிதுனம் | மகரம் | ௩௱கஎ | ௩தகூ௱ |
| கர்க்கடகம் | தனுசு | ௩௱உகூ | |
| சிங்கம் | விருச்சிகம் | ௩௱க௪ | |
| கன்னி | துலாம் | உ௱கூஎ | |

அகசுகணிக்க.

கலிசென்றவருஷத்தை- ௩- ல் பெருக்கி- உ௱-க்குக்கொடுத்துவந்த ஈவுபாகையாகவும், சேடத்தை- கூ௰ ல் பெருக்கி- உ௱ -க்குக் கொடுத்துவந்தஈவுடன் அர்த்தாதிகம்உண்டானாற்கூட்டிக்கலையாகவும் வைத்துப்பாகையில்-௫௪- வாங்கிக்கண்டது- அயன சலனமாகும். இது அந்தவருஷ முழுமைக்கும் ஆகும்.

கணிக்கும் அன்றையசூரியஸ்புடத்தோடு அயன சலனங்கூட்டி மேடாதிதனம்; துலாதிரணம்என்று குறி

யிட்டுக்கொண்டு- ௩- இராசிக்குள்ளிருந்தால்- புஜையெ ன்றும் ௬-இராசிக்குள்ளிருந்தால் கோடியென்றுமறிந்து இப்படிப் புஜைகோடி யெத்தனையெடுபடுகிறதோ அத்த னையுமெடுத்து, புஜையாகவரும்படி நிறுத்திக் கொள்வ து; கோடியாகவருமாயின் கோடியாகிய மூன்றுராசி வைத்து அதில்கீழ்க்கிடக்கிற ராசிபாகை கலைகளைவாங் கிநின்றது புஜையாகும்; புஜையில் ராசியில்லாவிட்டா ல். முதல்சரசாவாக்கியதந்நுல்கீழிருக்கும்பாகைகலைக ளைப்பெருக்கி, கலை-௬௰- க்கு- க- ம் பாகை-௩௰- க்கு க- ம்ஆகக்கண்டது விநாடியாம்-தனமானுல்- பகல்நாழிகை யாகிய - ௩௰ - ல் கூட்டவும். ரணமானுல் கழிக்கவும் இ ப்படிக்கழித்தாவது கூட்டியாவது நின்றது பகல்நாழி கையாம்.

புஜையில் - ஒரு - ராசியிருந்தால் அதைஎடுத்துநி ன்றபாகைகலைகளில்இரண்டாவது சரசாவாக்கியத்தால் முன்போற் கிரியைசெய்து முதற்சரசாவாக்கிய லக்கத் துடன்கூட்டி மேடாதிகூட்டி துலாதிகழிக்கவும்.

புஜையில் இரண்டுராசியிருந்தால் அவைகளையெடு த்துநின்ற பாகைகலைகளில் மூன்றும்வாக்கியத்தால் கிரி யைசெய்து முன்னெடுப்பட்ட- உ - வாக்கியலக்கங்களு டன்கூட்டி- மேடாதிகூட்டி துலாதிகழிக்கவும் இப்படி க்கண்டது பகல்நாழிகையாகும்.

காஞ்சிமண்டலசரசாவாக்கியம்.

க - வது- சஅ - உ-வது - ௩அ - ௩-வது - கசு.

## நவநாயகர்கணிக்க.

| | |
|---|---|
| பங்குனிமாதப்பூர்வபக்கப் பிரதமைவாராதிபதி | இராஜா |
| சித்திரைச்சங்கிரமவாராதிப்தி | மந்திரி |
| ஆனிச்சங்கிரமவாரர்திபதி | அர்க்காதிபதி |
| ஆடிச்சங்கிரமவாராதிபதி | சசியாதிபதி |
| ஆவணிச்சங்கிரமவாராதிபதி | சேநாதிபதி |
| ஐப்பசிச்சங்கிரமவாராதிபதி | இரசாதிபதி |
| மார்கழிச்சங்கிரமவாராதிபதி | தானியாதிபதி |
| திருவாதிரையில்ரவிவரும்வாரர்திபதி | மேகாதிபதி |
| தைச்சங்கிரமவாராதிபதி | நிரசாதிபதி |

மாதசங்கிரமம்- சரு- நாழிகைக்குள்ளானல் முதனளாகவும்மேற்படின் மறுநாளாகவும் கொள்ளவேண்டும்.

## மழைமரக்கால்.

குருசுக்கிரன் ராஜாவாயின் - ச - மரக்கால்-சந்திரன்புதன்ராஜாவாயின்- ந- மரக்கால்- சூரியன்-செவ்வாய்ராஜாவாயின்- உ- மரக்கால்- சனிராஜாவாயின்- க- மரக்கால்-மரக்காலே- உ௰-பங்குசெய்து. கடலில் -௰-ம்-கிரிகாணங்களில்- கூ-ம் பூமியில்- ச-மாகக்கொள்ளவேண்டும்-மரக்கால் பிரமாணந்தேவமானத்தால்- ௱- யோசனைஉயரமும்- கூ௰- யோசனை அகலமுமாம்.

## மேகமறிய.

சாலிவாகன வருஷத்தை- அ- ல் பெருக்கி- கூ- க்குக்கொடுத்தமிச்சம்-க-க்கு ஆவர்த்தம்-உ- க்கு சம்வர்த்தம்-

ந - க்கு புஷ்கலம்- ச - க்கு துரோணம்- ரு- க்குக்காளம்- சு- க்கு நீலம்- எ- க்கு வாருணம்- அ- க்கு வாயு- கூ- க்குத் தமோ என்றறிவது.

## மேகோற்பத்தியிடம்.

மேகாதிபதி சூரியனாயின்-கிழக்கிலும். சந்திரனாயின் தென்மேற்கிலும். செவ்வாயாயின் தெற்கிலும்- புதனாயின். வடக்கிலும் குருவாயின். வடகிழக்கிலும்- சுக்கிரனாயின் தென்கிழக்கிலும்- சனியாயின்மேற்கிலும். உற்பத்தியாம்.

## மாதமழையறிய.

குறுக்காக- எ-வரையும். நெடுக்காக- எ-வரையுங்கீறில்- உஅ- மூலையுண்டாகும் அவைகளுள்- ச- மூலைகளிலுமுள்ளமூலைகள்- அ- ம். மலைகள்- ச- பக்கங்களின் நடுவரி- ச-ம் சமுத்திரம் சமுத்திரத்தின் இருபக்கங்களிலுமுள்ளமூலை- அ- ம் நதிகள் மற்றயமூலை- அ - ம் குட்சியாகும். இதில்கார்த்திகையைக்கீழ்ப்பக்கச்சமுத்திரத்தில்வைத்து அபிசித்துடன் வலமாக மாதம்பிறந்த நக்ஷத்திரம்வரை யெண்ண மலைகளில்வருமாயின்மழையில்லை மனிதருக்குப்பீடை- சமுத்திரத்திலும்குட்சியிலும் வருமாயின்நல்லமழை மனிதருக்குச்சௌக்கியம்- நதிகளில்வருமாயின்- அற்பமழை- சிலர்- ஜலநாள்- கஉ-ல் மாதம்பிறந்தால் மழையுண்டென்பர்.

## வருஷாதாயம் செலவு.

எந்தக்கிரகம் இராஜாவாகிறதோ அந்தக்கிரகத்தின் துருவத்தையும் அவனவன் சந்திரலக்கினதிப்தி துருவத்தையுங் கூட்டி - ங - ல் பெருக்கி ரு - கூட்டி- கரு- ல் கொடுத்தமிச்சம் ஆதாயம் - கரு - ல் வந்தஈவை- ங- ல் பெருக்கி- ரு கூட்டி-கரு - ல் கொடுத்தமிச்சம் செலவு. முன்சொன்ன துருவங்களை- ங- ல் பெருக்கி- ங- கூட்டி எ- ல் கொடுத்தமிச்சம் ஆரோக்கியம்- எ- ல் வந்தஈவை ங - ல் பெருக்கி- ங - கூட்டி எ- ல் கொடுத்தமிச்சம் அநாரோக்கியம். எ ல் வந்த ஈவை முன்போலச்செய்தமிச்சம் இராஜபூசிதம். மறுபடியும் முன்போற்செய்தமிச்சம்; இராஜகோபம். மறுபடியும் முன்போற்செய்தமிச்சம்-சுகம். மறுபடியும்முன்போற்செய்தமிச்சம்-துக்கம்.

## ஆதாயம் செலவு துருவம்.

சூரியனுக்கு - சு - சந்திரனுக்கு- உ -செவ்வாய்க்கு அ- புதனுக்கு- கஎ - குருவுக்கு- ம்கூ-சுக்கிரனுக்கு- உக - சனிக்கு - ம - ஆக அங.

## இராசிகளின் ஆதாயம் செலவு.

எந்தக்கிரகம் ராஜாவாகிறதோ அந்தக்கிரகத்தின் துருவலக்கத்தையும், இராசிகளின் அதிபதியின் துருவலக்கத்தையும், கூட்டி - ங - ல் பெருக்கி - ரு - கூட்டி- கரு - ல் கொடுத்த மிச்சம் ஆதாயம்; கரு - ல் வந்தஈவை

ந - ல் பெருக்கி - ஞ - கூட்டி - கடு - ல் கொடுத்தமிச்ச ஞ் செலவு என்றறிவது.

## நக்ஷத்திர ஆதாயம்செலவு.

பங்குனிப் பூர்வபக்கப்பிரதமையும், நாயிறுமுதல் அன்றையவரையுள்ள வாரலக்கத்தையும், அசுபதிமுதல் அன்றையவரையுள்ள நக்ஷத்திரலக்கத்தையும், அசுபதிமுதல் அவனவன் ஜநநநக்ஷத்திரம்வரையுள்ள லக்கத்தையும் கூட்டி- சு - ல் பெருக்கி- அ- ல் கொடுத்தசேடம். ஆதாயம்- உ - ல் பெருக்கி - அ- ல் கொடுத்தசேடம். செலவு - ரு - ல் பெருக்கி- அ- ல் கொடுத்தசேடம். ஆரோககியம் - ந - ல் பெருக்கி - அ - ல் கொடுத்தசேடம். அநாரோக்கியம் - ச - ல் பெருக்கி - அ - ல் கொடுத்தசேடம், சுபம். ஒன்றில்பெருக்கி- அ- ல் கொடுத்தசேடம் - அசுபம் - சு - ல் பொருக்கி - அ - ல் கொடுத்தசேடம் - சலனம் - ஒன்றில்பெருக்கி - அ - ல் கொடுத்தசேடம் ஸ்திரம்.

## யுகம்.

கிரேதாயுகஞு கள லக்ஷத்து உ௰அத

திரேதாயுகஞு கஉ லக்ஷத்து கூ௰சுத

துவாபரயுகஞு அ லக்ஷத்து சு௰சத

கலியுக ஞு ச லக்ஷத்துந௰உத

| (சத்தவருஷங்கள்) | அரசர்களுடைய அப்தங்கள். |
|---|---|
| பாதவருஷம் | பாண்டவாப்தம் |
| கிம்புருஷவருஷம் | சாலீவாகனசகாப்தம் |
| அரிவருஷம் | விக்கிரமாதித்தாப்தம் |
| இளாவிருதவருஷம் | போஜராஜாப்தம் |
| ரம்மியகவருஷம் | கொல்லாப்தம் |
| ஐர்ண்வதவருஷம் | ராமதேவாப்தம் |
| குருவருஷம். ஆக, எ. | பிரதாபருத்திராப்தம் |
| | கிருஷ்ணராயாப்தம் |

## வருஷமாவன.

| | |
|---|---|
| க - பிரபவ | கங - பிரமாதி |
| உ - விபவ | கச - விக்கிரம |
| ங - சுக்கில | கரு - விஷு |
| ச - பிரமோதூத | கசா - சித்திரபானு |
| ரு - பிரசோற்பத்தி | கஎ - சுபானு |
| சா - ஆங்கீரச | கஅ - தாரண |
| எ - ஸ்ரீமுக | கக - பார்த்திப |
| அ - பவ | உய - விய |
| கூ - யுவ | உக - சர்வசித்து |
| ய - தாது | உஉ - சர்வதாரி |
| கக - ஈச்சுவர | உங - விரோதி |
| கஉ - வெகுதானிய | உச - விகிர்தி |

௨௫ - கர
௨௬ - நந்தன
௨௭ - விஜய
௨௮ - ஜய
௨௯ - மன்மத
௩௰ - துன்முகி
௩௧ - ஹேவிளம்பி
௩௨ - விளம்பி
௩௩ - விகாரி
௩௪ - சார்வரி
௩௫ - பிலவ
௩௬ - சுபகிருது
௩௭ - சோபகிருது
௩௮ - குரோதி
௩௯ - விசுவாவசு
௪௰ - பராபவ
௪௧ - பிலவங்க
௪௨ - கீலக
௪௩ - சௌமிய
௪௪ - சாதாரண
௪௫ - விரோதிகிருது
௪௬ - பரிதாபி
௪௭ - பிரமாதீச
௪௮ - ஆனந்த
௪௯ - ராக்ஷச
௫௰ - நள
௫௧ - பிங்கள
௫௨ - காலயுத்தி
௫௩ - சித்தார்த்தி
௫௪ - ரௌத்திரி
௫௫ - துன்மதி
௫௬ - துந்துமி
௫௭ - ருத்ரோற்காரி
௫௮ - ரத்தாக்ஷி
௫௯ - குரோதன
௬௰ - அக்ஷய

இவற்றுள்-முதல்-௨௰ (வரு) உத்தமம்
இடை- ௨௰ (வரு) மத்தியமம்
கடை-௨௰ (வரு) அதமமாம்

அயனம். உத்தராயணம் தக்ஷணாயனம். ஆக ௨.
தைமீ முதல். ஆறுமீ உத்தராயணம்.
ஆடிமீ முதல் ஆறுமீ தக்ஷணாயனம்

(சிறுபொழுது)

மாலே. யாமம். வைகறை. விடியல். நண்பகல். எற்பாடு. சு

(பெரும்பொழுது அல்லது இருதுகள்.)

சித்திரையும் - வைகாசியும் - இளவேனில் - வசந்தருது
ஆனியும் - ஆடியும் - முதுவேனில் - கிரீஷ்மருது
ஆவணியும் - புரட்டாசியும் - கார் - வருஷருது
ஐப்பசியும் - கார்த்திகையு - கூதிர் - சரருது
மார்கழியும் - தையும் - முன்பனி - ஏமந்தருது
மாசியும் - பங்குனியும் - பின்பனி - சசிருது
ஆக மீ ௧௨-க்கு பெரும்பொழுது அல்லது இருதுகள் - சு

சூரியன்வீதிமாதங்கள்

மேஷவீதி வைகாசி ஆனி ஆடி ஆவணி மீ வரை
ரிஷபவீதி சித்திரை புரட்டாசி ஐப்பசிபங்குனிமீ
மிதுனவீதி கார்த்திகை மார்கழிதை மாசிமீ வரை

மேஷவீதி உத்தராயணம் ரிஷபவீதி பூர்ணுயனம் மிதுனவீதி தக்ஷணுயனம்.

(மாதங்கள்.)

சித்திரை வைகாசி ஆனி ஆடி ஆவணி புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மார்கழி தை மாசி பங்குனி. ஆ ௧௨.

(சங்கற்பமாசம்.)

சைத்திரம் வைசாகம் ஜேஷ்டம் ஆஷாடம் சிராவணம் பாத்ரபதம் ஆஸ்வீஜம் கார்த்தீகம் மார்க்கசிரம் புஷ்யம் மாகம் பால்குணம். ஆக ௧௨.

(இங்கிலீஷ்மாசம்.)

ஜனவரி - ௩க - பிபர்வரி - உ அ - மார்ச்சி - ௩க
ஏப்பிரல் - ௩ய - மே - ௩க - சூன் - ௩ய
சூலை - ௩க - ஆகஸ்டு - ௩க - செப்டம்பர் - ௩ய
அக்டோபர் - ௩க - நவம்பர் - ௩ய - டிசம்பர் - ௩க
ஆகமீ கஉ க்கு நாள் ௩சுரு.

(துருக்கர் மாதம்)

மொகரம் சபர் ரப்பிலவல் ரப்பிசானி ஜமாதிலவல் ஜமாதிசானி ரஜப் ஷாபான் ரஞ்சான் ஷவ்வால் ஜிலஹாது ஜிலஹேது ஆக கஉ.

மாதமஒவ்வொன்றிற்குள்ளநாள்நாழிகைகள்.

| மாதம். | நாள். | நாழிகை. | மாதம். | நாள். | நாழிகை. |
|---|---|---|---|---|---|
| சித்திரை | ௩ய | ருசு | ஐப்பசி | உகூ | ருச |
| வைகாசி | ௩க | உச | கார்த்திகை | உகூ | ௩ய |
| ஆனி | ௩க | ௩அ | மார்கழி | உகூ | உக |
| ஆடி | ௩க | உஅ | தை | உகூ | உஎ |
| ஆவணி | ௩க | உ | மாசி | உகூ | சஅ |
| புரட்டாசி | ௩ய | உஎ | பங்குனி | ௩ய | உக |

கவி

ஆடுநண்டிடபங்கன்னி யரிமுப்பத்தொன்றதாகும்.
சேடில்கோல்தனுசுமாசி சிறந்தமுப்பானதாகும்.
தேடுறுமிதுனமுப்பானி ரண்டதாம்தேள்தைமாதம்.
நீடுறும்விழியிணுளேநீக்கு முப்பானிலொன்றே.

## சென்றமாதங்களின் மொத்தநாள்நாழிகை விநாடிவிகலைகள்.

| மாதம். | நாள். | நாழிகை. | விநாடி. | விகலை |
|---|---|---|---|---|
| சித்திரை | ௩௰ | ௫௫ | ௩௨. | |
| வைகாசி | ௬௨ | ௰௯ | ௪௪. | |
| ஆனி | ௯௩ | ௫௬ | ௨௨. | |
| ஆடி | ௱௨௫ | ௨௪ | ௩௪. | |
| ஆவணி | ௱௫௬ | ௨௬ | ௪௪. | |
| புரட்டாசி | ௱௮௬ | ௫௪ | ௬. | |
| ஐப்பசி | ௨௱௰௬ | ௪௮ | ௰௩. | |
| கார்த்திகை | ௨௱௪௬ | ௰௮ | ௩௭. | |
| மார்கழி | ௨௱௭௫ | ௩௯ | ௩௰. | |
| தை | ௩௱௫ | ௬ | ௪௯ | |
| மாசி | ௩௱௩௪ | ௫௫ | ௰. | |
| பங்குனி | ௩௱௬௫ | ௰௫ | ௩௧. | ௰௫. |

## மாதசூனியம்

சித்திரையில் - அஷ்டமி - ஏகாதசி-ரோகணி - கும்பம்
வைகாசியில்- துவாதசி- சித்திரை- சோதி- உத்திராடம்
ஆனியில் - திரயோதசி - புநர்பூசம் - ரிஷபம் [மீனம்
ஆடியில்- சஷ்டி- பூரம்- அவிட்டம்- மிதுனம்
ஆவணியில் அமாவாசியை- பூரணை- பூராடம்- மேஷம்
புரட்டாசியில்-சத்தமி-சதயம்-பூரட்டாதி-ரேவதி-கன்னி
ஐப்பசியில் - நவமி - பூரட்டாதி- விருச்சிகம் [தனுசு

கார்த்திகையில்- பஞ்சமி-கார்த்திகை- பூசம்-மகம்-துலா
மார்கழியில்- துதியை- நவமி அனுஷம்- உத்திரட்டா [ம்
[தி-விசாகம்-தனுசும்
தையில்-பிரதமை-அஸ்தம்-திருவாதிரை-ஆயிலியம்-கர்க்கடகம்- மாசியில்- சதுர்த்தி- தசமி-மூலம்-திருவோணம்-மகரம்.
பங்குனியில்-சதுர்த்தி-பரணி-கேட்டை-சிங்கம்
இப்படிவரின்சுபகாரியங்களுக்குவிலக்காம்.

(கரிநாள்)

| | |
|---|---|
| சித்திரை ௬- ௰௫. | ஐப்பசி-௬.*[மும்- க- ௰- ௰எ |
| வைகாசி-எ-௰௬-௰எ. | கார்த்திகைமுதற்சோமவார |
| ஆனி-க-௬- | மார்கழி-௬-௯-௰க. |
| ஆடி-உ-௰-உ௰. | தை-க-உ-ரு-௰க-௰எ. |
| ஆவணி-உ-௯-உஅ. | மாசி-௰௫-௰௬௰எ. |
| புரட்டாசி-௰௬-உ௯. | பங்குனி-௬-௰௫-௰௯. |

ஆக ஸ்ரீ ௰உ - க்கும். கரிநாள்- ரு௰ச.

* சிலர் கார்த்திகையில் முதற்சோமவாரநீக்கி ஐப்பசியில் - உஉ - தேதியாகக்கொள்வர்.

(கவி.)

இன்பமுறுமேடமதிலாறுபதினைந்தாம்
ஏறதனிலேழுபதினாறுபதினேழாம்
அன்புமிகுமானியொன்றுமாறலவன்ரெண்டோ
டையிரண்டுமைந்நான்குமாவணியிரண்டும்
ஒன்பதெழுநான்குகன்னியுற்றபதினாறோ
டொன்றேழிமுப்பான்றுலையிலோராறுதேளில்

முன்சோமவாரமொன்றுபத்துபதினேழாம்
முனியாறுமொன்பதும்பன்னொன்றுமுதவாநாள்
உதவாதநாள்கலையிலொன்றிரண்டுமூன்று
மொருபதுடனொன்றுபதினேழ்துவுமாகா
துதிபெருகுமாசிபதினைந்துபதினாறும்
சொல்லுபதி னேழுகடைமாதமதிலாறும்
பதினைந்து மொன்றெழியைந்நான்குமிகுதீதாம்
பகர்ந்தமாதந்தோறுந் தெய்தியெனக்கொண்டு
கதிதருநற்பொதியைவரை முனிவனுரைத்திட்ட
கரிநாண்முப்பானொன்குங் கண்டறிகுவீரே.

மலமாதம்.

ஒருமாதத்தில்இரண்டமாவாசியையாவதுஇரண்டு பௌர்ணிமியாவதுவருமாதங்கள்மலமாதம்.

பக்ஷமாவன.

பூர்வபக்ஷம்- அல்லது சுக்கிலபக்ஷம்- வளர்பிறை அமரபக்ஷம்-அல்லது கிருஷ்ணபக்ஷம்-தேய்பிறை.

(திதிகள்.)

பிரதமை விதியை- திரிதியை - சதுர்த்தி - பஞ்சமி சஷ்டி- சத்தமி - அஷ்டமி - நவமி - தசமி - ஏகாதசி- துவாதசி - திரையோதசி - சதுர்த்தசி - பௌர்ணிமி- அல்லது அமாவாசியை ஆ டுரு.

நந்தை—பிரதமை - சஷ்டி - ஏகாதசி.
பத்திரை—துதியை - சத்தமி - துவாதசி.

சயை—திரிதியை - அஷ்டமி - திரையோதசி.
இருத்தை—சதுர்த்தி- நவமி - சதுர்த்தசி.
பூரணை—பஞ்சமி - தசமி - பௌர்ணிமி.
இவற்றுள் - நந்தையும் - பத்திரையுஞ்
சுபகாரியத்துக்கு - ஆகாவாம்.

### விஷசூனியம்.

| | | |
|---|---|---|
| பிரதமையில். | துலாம். | மகரம் |
| துதியையில். | தனுசு. | மீனம் |
| திரிதியையில். | மகரம். | சிங்கம் |
| சதுர்த்தியில். | கும்பம். | ரிஷபம் |
| பஞ்சமியில். | கன்னி. | மிதுனம் |
| சஷ்டியில். | மேஷம். | சிங்கம் |
| சத்தமியில். | தனுசு. | கர்க்கடகம் |
| அஷ்டமியில். | கன்னி. | மிதுனம் |
| நவமிதசமிகளில் | சிங்கம் | விருச்சிகம் |
| ஏகாதசியில் | தனுசு | மீனம் |
| துவாதசியில் | துலாம் | மகரம் |
| திரயோதசியில் | ரிஷபம் | சிங்கம் |
| சதுர்த்தசியில் | மிதுனம்-கன்னிதனுசுமீனம் | |

(வாரமாவன.)

ஞாயிறு - திங்கள் - செவ்வாய் - புதன் - வியாழம் வெள்ளி - சனி - ஆ - எ.

(நாளின்பகற்கூறு.)

பூர்வான்னம் - பரான்னம் - மத்தியான்னம் - அபரான்னம்- சாயான்னம்- ஆ - ரு.

அன்னம்- க இ நாழிகை கூ.

(இராகுகாலம்.)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | உகூவ- | வியாழம் - | ௰அஅ |
| திங்கள் - | ௩அ | வெள்ளி | ௰கவ |
| செவ்வாய் - | உஉஉ | சனி - | எஉ |
| புதன் - | ௰ரு | | |

செ, ல, பூ, ௲, மு, டி, வா,

எ, க, கூ, ச, ௫, ௩, உ.

(இராகுகாலக்கவி.)

அரியிருபத்தாறேகா லம்புலிமூன்றேமுக்கால்
எரிவண்ணனிருபதோடு மிரண்டரைபுதன்மூவைந்து
குருபதினெட்டேமுக்கால் குளிர்வெள்ளிபதினொன்றே
கரியனேழரையிராகு காலமென்றறிந்துகொள்ளே.[கால்

(வாரசூலத்திக்கு.)

திங்கள் - சனி - கிழக்கு - செவ்வாய் - புதன் - வடக்கு- வெள்ளி- ஞாயிறு - மேற்கு - வியாழம்- தெற்கு.

திங்கள் - சனி - கிழக்கில் - அ - நாழிகையும்.வியாழம் - தெற்கில் - உ௰ - நாழிகையும் - வெள்ளி - நாயிறு மேற்கில் - ௰உ - நாழிகையும் - செவ்வாய் - வடக்கில்

௰உ - நாழிகையும் - புதன்வடக்கில் - ௰சு - நாழிகையும் ருத்திரமூர்த்தியின் - சூலமிருப்பதால் - அந்தந்நாழிகைக்குமேல் - சூலதோஷமில்லையாம்.

(வாரசூலநாழிகை.)

திங்களுஞ்சனியுமிந்திரன் றிசையிலோரெட்டதாகும்[ம்
பொங்குபொன்னிருபான்றெற்குப்புகர்கதிர்மேற்கீராறு
தங்குசேய்வடக்கீராறுஞ் சார்புதனதிலீரெட்டுச்
சங்கரன்கையிற்சூலந் தரணியில்வைக்குங்கன்னல்.

(சூலபரிகாரம்.)

சூலத்திசையிற் சொற்பயணம்போகவெனின்
சீலத்துடனுண்டு செல்வடக்குப்-பாலாம்
தயிர்கிழக்குத்தெற்குத் தயிலமாமேற்குச்
செயிர்தீர்ந்த வெல்லமெனச்செப்பு.

(வாரகுளிகன்.)

| (பகல்.) | | (இரா.) | |
|---|---|---|---|
| ஞாயிறு | உசுவ | ஞாயிறு | ௰கவ |
| திங்கள் | உஉ੦ | திங்கள் | எ੦ |
| செவ்வாய் | ௰அஜ | செவ்வா | ௩ஜ |
| புதன் | ௰ரு | புதன் | உசுவ |
| வியாழம் | ௰கவ | வியாழம் | உஉ੦ |
| வெள்ளி | எ੦ | வெள்ளி | ௰அஜ |
| சனி | ௩ஜ | சனி | ௰ரு |

(பகற்குளிகன்.)

ஞாயிறும்கூர்த்தமேழா நன்மதிக்காறுஞ்செவ்வாய்க்
கேயவைந்தாகும்புந்திக்கிரண்டாம்பொன்மூன்றும்
தூயநற்புகர்க்கிரண்டாஞ்சுன்னினுக்கொன்றதாகும்
ஆயவிம்முகூர்த்தத்தோடேயற்றிடுங்குளிகனெல்லில்.

(இராக்குளிகன்.)

கதிரவன்றனக்குமூன்றுங் கவின்மதிக்கிரண்டதாகும்
சதிர்பெறு செவ்வாய்க்கொன்றுஞ் சாற்றியபுதற்கேழா
மதிவளர்பொன்னுக்காறுமன்புகர்க்கைந்தாநான்கு [கும்
கதிர்மகற்காமுகூர்த்தங் காட்டியபகல்போற்கொள்ளே.

(இந்நாழிகைகளோடும் முடியும்.)

திதிச்சூலம்.

பிரதமை-நவமி- கிழக்கு- துதியை- சத்தமி- தென்கிழக்கு-திரிதியை-ஏகாதசி-தெற்கு-சதுர்த்தி-துவாதசி - தென்மேற்கு- சஷ்டி- அமாவாசியை- மேற்கு- சத்தமி- பௌர்ணிமி-வடமேற்கு-அஷ்டமி-சதுர்த்தசி- வடக்கு- பஞ்சமி- திரயோதசி-வடகிழக்கு- சூலமாகும்.

நக்ஷத்திரசூலம்.

அவிட்டங் கேட்டை கிழக்கு. அச்சுவனி திருவோணம் தெற்கு. பூசம் ரோகணி மேற்கு. உத்திரம் அஸ்தம்வடக்குச்சூலமாகும்

சிலர் நக்ஷத்திரம் - உ௪ இம் சூலமுண்டென்பர்.

(வாரவிசேஷம்)

ஞாயிறுஉத்தியோகஞ்செய்ய, திங்கள்விதைவிதைக்க, செவ்வாய்போர்செய்ய-புதன்வித்தியாரம்பஞ்செய்ய, வியாழம்விவாகஞ் செய்ய, வெள்ளிமயிர்கழிக்க, சனிதவஞ் செய்யஉத்தமம்.

(கவி)

சந்திரன்விதைசெய்பூசல் சனிதபங்கதிர்சேவித்தன்
மந்திரமணமால்கல்வி மயிர்வெள்ளிவாரநன்றும்
அந்தமில்ருடியேவித்தை யரும்பொருள்கன்னிதானம்
வந்துறுபகைநோய்தீர்க்கவருவதேகாலமாமே.

வாரமுக்குணவேளை.

திங்கள்-வியாழம்-சாத்துவீகம்- வெள்ளி-செவ்வாய -, இராசதம் - புதன் - நாயிறு - சனி - தாமதமாம்- உதயாதி நாலுநாழிகவைளாயிற்கொள்க.

நாள்விழிப்பு.

புதன்- வியாழம்- வெள்ளி- இருகண்ணு முள்ளநாள்கள் _ நாயிறு - திங்கள்-ஒருகண்ணுள்ளநாள்கள்- செவ்வாய்_ சனி - குருட்டுநாள்களாம்.

கவி

புந்திவியாழம்புகர்க்கிருகண்ணும்
இந்துவருக்கரிவர்க்கொருகண்ணும்
செந்துவர்வாயாய் சேய்சனிக்கில்லை
அந்தணரோதி யறைந்தனர்மாதோ.

## நக்ஷத்திரம்.

| | | |
|---|---|---|
| அச்சுவனி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் |
| உரோகணி | அஸ்தம் | திருவோணம் |
| மிருகசிரம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சோதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| ஆயிலியம் | கேட்டை | ரேவதி |

ஆ நக்ஷத்திரம்- உஎ.

### பயநாள்.

திருவாதிரை ஆயிலியம் கேட்டை மூலம்: ச

### மிருதுநாள்

மிருகசிரம் சித்திரை அனுஷம் ரேவதி ச

### துரிதநாள்

அசுபதி அஸ்தம் மூலம் ஙூ

### ஸ்திரநாள்

உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி ரேவதி. ச

### உக்கிரநாள்

பரணி மகம் பூரம் பூராடம் பூரட்டாதி ரு

சரநாள்

சோதி திருவோணம் புநர்பூசம் அவிட்டம் சதயம் - ரு

சுபாவநாள்

கார்த்திகை - விசாகம் உ ஆ உஎ

(உச்சநிலைநாள்)

மிருகசிரம் - சித்திரை - அவிட்டம் - ஆ ௩.

(கீழ்நிலைநாள்)

அச்சுவினி - பரணி - கார்த்திகை - மகம்- பூரம்- உத்திரம்- மூலம்-பூராடம்-உத்திராடம்- ஆ சு

(இடைநிலைநாள்)

உரோகணி - திருவாதிரை - புநர்பூசம் - பூசம் - ஆயிலியம்-அஸ்தம் சோதி - விசாகம் - அனுஷம்- கேட்டை திருவோணம்- சதயம்- பூரட்டாதி- உத்திரட்டாதி- ரேவதி ஆ ௰ரு.

(கீழ்நோக்குநாள்)

உரோகணி திருவாதிரை பூசம் உத்திரம் உத்திராடம் திருவோணம் அவிட்டம் சதயம்- உத்திரட்டாதி. ஆ சு

(மேனோக்கு நாள்

பரணி-கார்த்திகை- ஆயிலியம்-மகம்- பூரம் - விசாகம் மூலம் - பூராடம் - பூரட்டாதி- ஆ சு.

சமஞேக்குநாள்

அச்சுவினி- மிருகசிரம்- புநர்பூசம்- அஸ்தம்- சித்திரை - சோதி - அனுஷம் - கேட்டை - ரேவதி - ஆ கூ.

(ஜலநாள்)

உரோகணி - மிருகசிரம் - புநர்பூசம் - பூசம் - ஆயிலியம் அஸ்தம்- சித்திரை- சோதி - விசாகம் - கேட்டை- பூராடம்- திருவோணம் ஆ ௰உ.

(சுஷ்கநாள்)

அச்சுவினி - பரணி - கார்த்திகை- திருவாதிரை- மகம் - பூரம் - உத்திரம் - அனுஷம் - மூலம் - உத்திராடம் - அவிட்டம் - சதயம் - பூரட்டாதி - உத்திரட்டாதி - ரேவதி - ஆ ௰ரு.

(புருஷநாள்)

அச்சுவினி - பரணி - உரோகணி - ஆயிலியம் - மகம்- உத்திரம் - சித்திரை - சோதி - கேட்டை - மூலம் - பூராடம் - உத்திராடம் - பூரட்டாதி - ஆ ௰ங.

பெண்ணாள்

கார்த்திகை - திருவாதிரை - புநர்பூசம் - பூசம்- பூரம்- அஸ்த்தம்.- விசாகம்-அனுஷம் - திருவோணம் - அவிட்டம்- உத்திரட்டாதி - ரேவதி - ஆ ௰உ

அலிநாள்.—மிருகசிரம்- சதயம் உ.

அமங்கலநாள்.—புநர்பூசம்-பூசம் உ.

(சதர்ஜீவநாள்)

உரோகணி - பூசம் - உத்திரம்- அஸ்தம் - அனுஷம் - உத்திராடம்- திருவோணம் . உத்திரட்டாதி - ரேவதி - ஆ கூ.

(ஜன்மானுஜன்மநாள்.)

| | | |
|---|---|---|
| அச்சுவினி — | மகம் — | மூலம் |
| பரணி — | பூரம் — | பூராடம் |
| கார்த்திகை — | உத்திரம் — | உத்திராடம் |
| உரோகணி — | அஸ்தம் — | திருவோணம் |
| மிருகசிரம் — | சித்திரை — | அவிட்டம் |
| திருவாதிரை — | சோதி — | சதயம் |
| புனர்பூசம் — | விசாகம் — | பூரட்டாதி |
| பூசம் — | அனுஷம் — | உத்திரட்டாதி |
| ஆயிலியம் — | கேட்டை — | ரேவதி |

நக்ஷத்திர - மிருகம் - பக்ஷி - மரம் - கணம்)

| | | | | |
|---|---|---|---|---|
| (அச்சுவினி | குதிரை | இராசாளி | எட்டி | தேவகணம். |
| பரணி | யானை | காக்கை | நெல்லி | மனுஷகணம். |
| கார்த்திகை | ஆடு | மயில் | அத்தி | இராக்கதகணம். |
| உரோகணி | பாம்பு | ஆந்தை | நாவல் | மனு |
| மிருகசிரம் | சாரை | கோழி | கருங்காலி | தேவ |
| திருவாதிரை | நாய் | அன்றில் | செங்கருங்காலி | மனு |
| புனர்பூசம் | பெண்பூனை | அன்னம் | மூங்கில் | தேவ |
| பூசம் | கடா | நீர்க்காக்கை | அரசு. | தேவ |
| ஆயிலியம் | ஆண்பூனை | சிச்சிலி | புன்னை | இரா |

மகம் - ஆணெலி - ஆண்கழுகு - ஆல் இரா
பூரம் - பெருச்சாளி - பெண்கழுகு - பலாசு மனுஷ
உத்திரம் - எருது - சில்வண்டு - அலரி மனுஷ
அஸ்தம் - எருமை - பருந்து - ஆத்தி தேவ
சித்திரை - ஆண்புலி - மரங்கொத்தி - வில்வம் இரா
சோதி - கடா - ஈ - மருது தேவ
விசாகம் - பெண்புலி - செவ்வாற்குருவி - விளா இரா
அனுஷம் - பெண்மான் - வானம்பாடி - மகிழ் தேவ
கேட்டை - கலை - சக்கரவாகம் - பிராய் இரா
மூலம் - பெண்ணாய் - செம்போத்து - மரா இரா
பூராடம் - ஆண்குரங்கு - கவுதாரி - வஞ்சி மனுஷ
உத்திராடம் - மலட்டுப்பசு - வலியன் - பலா மனுஷ
திருவோணம் - பெண்குரங்கு - நாரை - எருக்கு தே
அவிட்டம் - காமதேனு - வண்டு - வன்னி இரா
சதயம் - பெண்குதிரை - அண்டங்காக்கை - கடம்பு இ
பூரட்டாதி - புருஷாமிருகம் - உள்ளான் - தேமா மனு
உத்திரட்டாதி - பாற்பசு - கோட்டான் - வேம்பு மனு
ரேவதி - பெண்யானை - வல்லூறு - இலுப்பை தேவ

## கணக்கலி.

தேரடுப்புத்திரங்கள் செங்கைமூப்பூரமக்கள்
பாரமான்றலைபூசங்கள் பனைவிளக்கோணந்தோணி
மூரிமாவத்தந்தேவர் முறங்கேட்டை பயறுமூலம்
ஆரல்பாம்பவிட்டஞ் செக்குமகங்கண மரக்கர்தாமே.

| (காலற்றநாள்.) | (உடலற்றநாள்.) | (தலையற்றநாள்.) |
|---|---|---|
| கார்த்திகை | மிருகசிரம் | புனர்பூசம் |
| உத்திரம் | சித்திரை | விசாகம் |
| உத்திராடம். ௩. | அவிட்டம். ௩. | பூரட்டாதி. ௩. |

இவ்வொன்பதுநாளும் புணர்ச்சிக்கும், மனைமுகூர்த்தத்துக்கும், யாத்திரைக்கும் ஆகாவாம்.

காலற்றன வுடலற்றன தலையற்றனநாளிற்
கோலக்குய மடவார்தமைக் கூடின்மலடாவார்
மாலுக்கொரு மனைமாளிகை கோலினது பாழாம்
ஞாலத்தவர் வழிபோகினு நலமெய்திடா ரவமே.

| நக்ஷத்திரங்கள் | அதிதேவதைகள் | | |
|---|---|---|---|
| | | அஸ்தம் | சாத்தா |
| | | சித்திரை | விஸ்வகர்மா |
| | | சோதி | வாயு |
| அச்சுவனி | சரஸ்வதி | விசாகம் | குமரன் |
| பரணி | துர்க்கை | அனுஷம் | இலக்குமி |
| கார்த்திகை | அக்கினி | கேட்டை | இந்திரன் |
| உரோகணி | பிரமன் | மூலம் | அசுரர் |
| மிருகசிரம் | சந்திரன் | பூராடம் | வருணன் |
| திருவாதிரை | பரமசிவன் | உத்திராடம் | கணபதி |
| புனர்பூசம் | அதிதி | திருவோணம் | விஷ்ணு |
| பூசம் | பிரகஸ்பதி | அவிட்டம் | வசுக்கள் |
| ஆயிலியம் | ஆதிசேஷன் | சதயம் | இயமன் |
| மகம் | சுக்கிரன் | பூரட்டாதி | குபேரன் |
| பூரம் | பார்வதி | உத்திரட்டாதி | காமதேனு |
| உத்திரம் | சூரியன் | ரேவதி | சனி |

## நக்ஷத்திரங்களின்பாக்கள்

கார்த்திகைமுதல் ஆயிலியம்வரை ஏழுநக்ஷத்திரங்ளுக்கும் வெண்பாவும் மகம் முதல் விசாகம்வரை ஏழு நக்ஷத்திரங்களுக்கும் ஆசிரியப்பாவும் அனுஷமுதல் அவிட்டம்வரை ஏழுநக்ஷத்திரங்களுக்கும் கலிப்பாவும் சதயமுதல் பரணிவரை ஆறுநக்ஷத்திரங்களுக்கும் வஞ்சிப்பாவும் ஆகும்.

## இராசியில்நக்ஷத்திரநிலை.

அச்சுவனி, பரணி, கார்த்திகை,முதற்காலும், மேஷம்.

கார்த்திகை, பின்மூக்காலும், உரோகணியும், மிருகசிரத்துமுன்னரையும், ரிஷபம்.

மிருகசிரத்துப்பின்னரையும், திருவாதிரையும், புனர்பூசத்துமுன்முக்காலும், மிதுனம்.

புனர்பூசத்துப்பிற்காலும், பூசமும், ஆயிலியமும்,கர்க்கடகம்.

மகம், பூரம், உத்திரத்து முதற்காலும் சிங்கம்,

உத்திரத்துப்பின்முக்காலும், அத்தமும், சித்திரைமுன்னரையும், கன்னி.

சித்திரைப்பின்னரையும், சோதியும்,விசாகத்துமுன்முக்காலும், துலாம்.

விசாகத்துப் பிற்காலும், அனுஷமும், கேட்டையும், விருச்சிகம்.

மூலம், பூராடம், உத்திராடத்துமுதற்காலும், தனுசு.

உத்திராடத்துப்பின் முக்காலும், திருவோணமும், அவிட்டத்துமுன்னரையும், மகரம்.

அவிட்டத்துப்பின்னரையும், சதயமும், பூரட்டாதி முன் முக்காலும், கும்பம்.

பூரட்டாதிபிற்காலும், உத்திரட்டாதியும், ரேவதியும், மீனம்.

## தனிஷ்டாபஞ்சமி.

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி என்னும் பிதிர்பாகமாகிய தனிஷ்டாபஞ்சமிக்கு மீ-௫-விகற்பபாகமாகியரோகணிக்குமீ-௪-கார்த்திகை, உத்திரத்துக்குமீ-௩- மிருகசிரம், சித்திரை, புநர்பூசம், விசாகம், உத்திராடத்துக்கு மீ-௨.

புள்ளுமுதல்ரேவதியோரைந்துநாளும்புனிதபிதிர் பாகம் தாமாறுமாதம், துள்ளுமான் றலைநடுநாள் கழைவிசாகஞ்சொல்லாடி யையந்துக்குமிரண்டாமாரல், நள்ளு முத்திரத்துக்கு மூன்றும்பார்க்கு நான்காகுமிவை விகற்பபாகமெனபர், விள்ளுமிவற்றினிலிறந்தால் வீட்டை மூடவேண்டுமென்றே மேலோர்களறைந்தாரன்றே.

௫ - மீ நாள் - பிதிர்பாக - ம் ௪ - சதுர்பாவாதி- ௩- திரியாதி - ௨ - வதுவபாதி யென்றுபெயர்.

## பரிகாரம்.

வெண்கலக்கிண்ணத்தில் நல்லெண்ணெய்விட்டுத் தானஞ்செய்து அதற்குச்சொன்னகாலம்வரை சாயங்காலத்தில் கற்பூரதீபாராத்திசெய்யவும் - தனிஷ்டாபஞ்சமிதோஷம்சிலதேசத்தார் அனுஷ்டிக்கிறதில்லை

# அமிருதாதியோகங்கள்.

| நக்ஷத்திரங்கள் | நா | திங் | செவ் | புத | வியா | வெ | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| அசுவனி | ஸித் | ஸித் | ஸித் | மர | அமி | அமி | ஸித் |
| பரணி | பிர | ஸித் | ஸித் | ஸித் | ஸித் | ஸித் | ஸித் |
| கிருத்திகை | ஸித் | மர | ஸித் | அமி | மர | ஸித் | அமி |
| ரோகிணி | ஸித் | அமி | அமி | ஸித் | மர | மர | ஸித் |
| மிருகசீர்ஷம் | ஸித் | ஸித் | ஸித் | ஸித் | மர | ஸித் | ஸித் |
| திருவாதிரை | ஸித் | ஸித் | மர | ஸித் | மர | ஸித் | ஸித் |
| புனர்பூசம் | ஸித் | அமி | ஸித் | ஸித் | அமி | ஸித் | ஸித் |
| பூசம் | ஸித் | ஸித் | ஸித் | ஸித் | ஸித் | மர | ஸித் |
| ஆயிலியம் | ஸித் | ஸித் | ஸித் | ஸித் | ஸித் | மர | மர |
| மகம் | மர | மர | ஸித் | ஸித் | அமி | மர | அமி |
| பூரம் | ஸித் | ஸித் | ஸித் | அமி | ஸித் | ஸித் | ஸித் |
| உத்திரம் | அமி | ஸித் | அமி | அமி | மர | ஸித் | மர |
| அஸ்தம் | ஸித் | ஸித் | ஸித் | மர | ஸித் | அமி | மர |
| சித்திரை | ஸித் | பிர | ஸித் | ஸித் | ஸித் | ஸித் | மர |
| சுவாதி | ஸித் | அமி | ஸித் | ஸித் | அமி | ஸித் | அமி |
| விசாகம் | மர | மர | மற | ஸித் | ஸித் | ஸித் | ஸித் |
| அனுஷம் | மர | ஸித் | ஸித் | ஸித் | ஸித் | ஸித் | ஸித் |
| கேட்டை | மர | ஸித் | மர | ஸித் | பிர | மர | ஸித் |
| மூலம் | அமி | ஸித் | அமி | மர | ஸித் | அமி | ஸித் |
| பூராடம் | ஸித் | மர | ஸித் | அமி | ஸித் | பிர | ஸித் |
| உத்திராடம் | அமி | மர | பிர | அமி | ஸித் | ஸித் | ஸித் |
| ஸ்ரீவணம் | அமி | அமி | ஸித் | ஸித் | ஸித் | மர | ஸித் |
| அவிட்டம் | மர | ஸித் | ஸித் | பிர | ஸித் | ஸித் | ஸித் |
| சதயம் | ஸித் | ஸித் | மர | ஸித் | மர | ஸித் | அமி |
| பூரட்டாதி | ஸித் | ஸித் | மர | அமி | ஸித் | ஸித் | மர |
| உத்திரட்டாதி | அமி | ஸித் | அமி | ஸித் | ஸித் | ஸித் | ஸித் |
| ரேவதி | அமி | ஸித் | ஸித் | மர | ஸித் | ஸித் | பிர |

அமி-அமிர்தயோகம். ஸித்-ஸித்தயோகம். மர-மரணயோகம். பிர-பிரபலாரிஷ்டம்.

கவி.

பலமுடைமூலமோண மிரேவதி யத்தம்பாரும்
நலமுடையுத்திரங்கண் மூன்றுநன்றாகுங்கண்ணிற்
குலவியவனுஷங்கேட்டைகொடுநுகம் விசாகம்விட்டம்
சலமுடையருக்கன்வாரஞ் சார்ந்திடின் மரணந்தானே.()

தானமான்றலையேசோதிசாடுருள் புநர்தமோணம்
ஆனநாடிங்கள் சேரிலமுதமாம்யோகமாகும்
கானமாமகம்விசாகங்கார்த்திகையுத்திராடம்
மானனுய்பூரட்டாதி மதிவரின் மரணமன்றே. (௨)

அன்றிரோகணியேமூல மறிவனுத் திரத்திற்செவ்வாய்
நின்றிடி லமுதயோக நிறைந்தவான் சதயஞ்செங்கை
வென்றிகொள் விசாகம்பூரட்டாதியைவிரும்பிநாளும்
கன்றிய செவ்வாய்நின்றாற் கருமங்க ளசங்காணே. (௩)

காணுமுப்பூரமாடி கார்த்திகை யுத்திரத்திற்
பூணுறுமடவாய்புந்தி வந்திடிற் புகழ்வர்சால
ஆணியாமவிட்டமூல மிரேவதிகுதிரையத்தம்
சேணுறுபுந்திவந்தாற் செய்யுமக்கருமந்தீதே. (௪)

கரும்பொடு சோதிபூச மசுபதிமகத் திற்கற்றோர்,
விரும்பியேவியாழநின்றால் விளம்புவ ரமுதமென்றே,
திருந்துமான் றலைபார்செக்குச் செங்கையுத்திரத்தோ
டாரல், சுரும்பமர் குழலாய்பொன்னன் வந்திடிற்றுயர
ஞ்சொல்லே. (௫)

சொல்லரு மூலமத்த மிரேவதி துரகன்சுங்கன், புல்லிடி லமுதயோகம் பூசம்ரோகணியேகேட்டை, மல்குபேரோண்மாயில்மகத்தினில்வெள்ளிவந்தால், அல்லுறுங்குழலாய் தீதென்றறைந்தனர் தமிழையாய்ந்தோர்.(௬)

ஆய்ந்தசீர் மகமேசோதியாரல்பார் சதயங்காரி
சேர்ந்திடிலமுதமத்தஞ் சித்திரை புரட்டைதாலம்
வாய்ந்தவுத்திரத்தோடாயில் சனிவரின்மரணமென்க
சேர்ந்ததிற்செல்லாநாள்கள் சித்தயோகப்பேர்செப்பே()

(அமுதசித்தயோகம்.)

ஞாயிற்றுக்கிழமையில் - அஸ்தமும், திங்கட்கிழமையில் - மிருகசிரமும், செவ்வாய்க்கிழமையில் - அச்சுவினியும், புதன்கிழமையில் - அனுஷமும், வியாழக்கிழமையில் - பூசமும், வெள்ளிக்கிழமையில் - ரேவதியும், சனிக்கிழமையில்-ரோகணியும், வருவன.

கவி.

யோகநன் றிரவியத்த முயர்மதி வான்பேராளன்
ஏகவங்காரன்சென்னிமேதைசேரனுஷம்விண்ணோர்
ஏகமந்திரிசேர்பூசமிரும்புகர்வாரந்தோணி
மாகவான் சனியுரோணி சித்தியென்மயிலையன்னாய்

(திதியமுதயோகம்.)

ஞாயிற்றுக்கிழமையில் - பிரதமையும், சஷ்டியும். திங்கட்கிழமையில்- துதியையும், சத்தமியும், செவ்வாய்க்கிழமையில்- சதுர்த்தசியும், புதன்கிழமையில் அஷ்ட

மியும், திரிதியையும், திரயோதசியும், வியாழக்கிழமை யில்- நவமியும், வெள்ளிக்கிழமையில்- ஏகாதசியும்;சனி க்கிழமையில் - சதுர்த்தசியும் வருவன.

(கவி)

செப்பிய குருவுக்கென்பா ஞன்குசுன்பன்ஞன்சே ய்க்கு, வெப்புறு கதிருக்கொன்றே டாறுபன்னொன்று வெள்ளிக், கொப்புடை மதிக்குமின்னே யேழிரண்டுய ர்ந்தபுந்திக், கப்பதின் மூன்றுமூன்றுமெட்டு நல்லமுத யோகம்.

(சுபயோகம்.)

ஞாயிற்றுக்கிழமையில் - அஷ்டமியும், திங்கட்கிழ மையில் - நவமியும் செவ்வாய்க்கிழமையில் - சஷ்டியும், புதன்கிழமையில் - திரிதியையும், வியாழக்கிழமையில் - ஏகாதசியும், வெள்ளிக்கிமையில்- திரயோதசியும், சனி க்கிழமையில்- சதுர்த்தசியும், வருவன.

(கவி)

அன்னமே பரிதிக்கோ ரெட்டம்புலிக்கொன்பான் சேய்க்கு, மன்னியவிருமூன்ருகு மாலவற்கொருமூன்ரு கும், பொன்னவன் றனக்குப்பக்கம் பதினொன்று புகர்க் குப்பன்மூன்,றின்னல்செய்சனிக்குப் பன்ஞன்கிவைசுப யோகமென்றே.

(நாசயோகம்.)

ஞாயிற்றுக்கிழமையில்-சதுர்த்தியும், திங்கட்கிழமை யில்-சஷ்டியும், செவ்வாய்க்கிழமையிலும் சனிக்கிழமை

யிலும் - சத்தமியும், புதன்கிழமையில் - துதியையும்,வியாழக்கிழமையில்- அஷ்டமியும், வெள்ளிக்கிழமையில்- நவமியும், வருவன.

(கவி.)

என்றுநீடிருளைச்சீறுமிந்துவுக் காறுவெள்ளிக்
கொன்றியநவமிமேதைக் கிரண்டொளியவற்குநான்கு
பொன்றனக்கெட்டுநீலன் பூமனுக்கேழுபொல்லாக்
கன்றிடுநாசயோகமென்றறிகதிரவேற்கண்ணாய்.

ஞாயிற்றுக்கிழமையில் - பஞ்சமியும், கார்த்திகையும், திங்கட்கிழமையில் - துதியையும், சித்திரையும்,செவாய்க்கிழமையில்- பூரணையும், ரோகணியும், புதன்கிழமையில் - சத்தமியும, பரணியும், வியாழக்கிழமையில்- திரயோதசியும், அனுஷமும், வெள்ளிககிழமையில்- சஷ்டியும், திருவோணமும், சனிக்கிழமையில - அஷ்டமியும், ரேவதியும்,வருவன.

(கவி.)

கதிரவற்கைந்தோடாரல் கணக்கற்கேழ் பரணிகாரி,எதிருமெட்டோடுதோணி யெரிக்குமூன் னுவாவுரோணி, புதியபொன்றனக்குப்பன்மூன் றனுஷமாம்புகர்க்காறேணம், மதியவற் கிரண்டாம்பக்கஞ் சித்திரை மருவினைசம்.

ஞாயிற்றுக்கிழமையில் - விசாகமும், திங்கட்கிழமையில் - சதயமும், செவ்வாய்க்கிழமையில் - அவிட்ட

மும், புதன்கிழமையில் - ரேவதியும், வியாழக்கிழமையில் - ரோகணியும், வெள்ளிக்கிழமையில்-பூசமும், சனிக்கிழமையில் - உத்திரமும், வருவன.

(கவி)

மருவியகதிர்விசாகமதிவருசதயஞ்செவ்வாய்
பொருவியவிட்டம்புந்திரேவதிபொன் னுரோணி
பிருகுவிற்பூசங்காரி யுத்திரம்பேணிவந்தால்
அருளிலாநாசமென்று ரரியநூ லரிந்துரைத்தோர்.

(அக்கினியோகம்.)

ஞாயிற்றுக் கிழமையில்- துவாதசியும், திங்கட்கிழமையில்-சஷ்டியும், செவ்வாய்க்கிழமையில்- சத்தமியும், புதன்கிழமையில் - அஷ்டமியும், வியாழக்கிழமையில்- நவமியும், வெள்ளிக்கிழமையில் - தசமியும், சனிக்கிழமையில் - ஏகாதசியும், வருவன.

(கவி.)

பிரசைவெண்டிங்கட்காறுபெரியசேய்க்கேழுமாலுக், குரைசெய்தாரொட்டுப்பொன்னுக்கொன்பதுபுகர்க்குப்பத்து,பரியசுன்னுக்குப்பன்னொன்றருக்கற்கீராறுபக்கம், விரைசெய்பூங்குழலா யங்கியோகமென் றிசைத்தார் மேலோர்.

(தக்தயோகம்.)

ஞாயிற்றுக்கிழமையில் - துவாதசியும், திங்கட்கிழமையில்-ஏகாதசியும், செவ்வாய்க்கிழமையில்-பஞ்சமி

யும், புதன்கிழமையில் - துதியையும், வியாழக்கிழமையில் - சஷ்டியும், வெள்ளிக்கிழமையில் - அஷ்டமியும், சனிக்கிழமையில் - நவமியும், வருவன.

(கவி.)

கொடுங்கதிர்க் கீராறுன்றகுளிர்மதி தனக்குப்பன்னொன், றடுஞ்செவ்வாய்க்கைந்து மேதைக்கிரண்டுபொன்னவனுக்காறு, நெடும்புகர்க்கெட்டுநீலற்கொன்பது நிகழ்ந்தபக்கம், படர்ந்தவைதக்தயோகந் தீதென்பர்பலருமன்னே

(அனந்தாதி யோகங்களாவன.)

| | | | |
|---|---|---|---|
| அனந்தம் | — தனலாபம் | உற்பாதம் | — துக்கம் |
| காலதண்டம் | —காரியம்விக்கினம் | மிருத்தியு | — மரணம் |
| | | காரணம் | — சம்பத்து |
| தர்மம் | —காரியசித்தி | சித்தம் | —சகலசித்தி |
| பிரசாபதி | —இஷ்டசித்தி | சுபம் | — சுபம் |
| சௌமியம் | — தனலாபம் | அமுதம் | — லாபம் |
| துர்வாஞ்சம் | — விக்கினம் | முசலம் | —அசவுக்கியம் |
| ஸ்ரீவற்சம் | —சகலலாபம் | கதா— | — அசுபம் |
| வச்சிரம் | — கலகம் | மாதங்கம் | — கஷ்டம் |
| முத்கம் | — விக்கினம் | ராக்ஷசம் | —காரியநஷ்டம் |
| சத்திரம் | — சுபம் | கரம் — | — சிக்கிரசித்தி |
| மித்திரம் | — பூலாபம் | திரம் — | — தீர்க்கசித்தி |
| மானசம் | —சன்மானம் | வர்த்தமானம் | — அதிகலாபம் |
| பத்மம் | —மித்திரலாபம் | | |
| லம்பம் | —போஜனலாபம் | | |

ஆ ௨௭.

இவை ஞாயிற்றுக்கு - அச்சுவினி முதலாகவும், திங்கட்கு - மிருகசிரமுதலாயும், செவ்வாய்க்கு - ஆயிலிய முதலாகவும், புதனுக்கு - அஸ்தமூலாகவும், வியாழத்துக்கு - அனுஷமுதலாகவும், வெள்ளிக்கு - உத்திராட முதலாகவும், சனிக்கு - சதயமுதலாகவும், அச்சுவினி முதல்வரிசையாகக் கொள்ளவேண்டும். இதற்கு ஐந்தாநாள் யோகமென்றும்பேர்.

(சகடயோகம்.)

குருநின்றராசிக்கு- ஆறும் - எட்டாம்- பன்னிரண்டாம் - ராசிகளில் - சந்திரன் நிற்பது.

(கவி)

மேலெழும்வியாழநின்ற ராசிக்காறீராறெட்டில்
மாலைவெண்மதியஞ்சேர வந்தநாட்சகடயோகம்
பாலகன்பிறக்கிற்சாவாம்பழிபடுமணத்தைச்செய்யின்
ஞாலமேவழியிற்போயின் நலமில்லைநறுமென்கொம்பே.

(கசரயோகம்.)

சூரியன்நின்றநாள் முதல்சந்திரன்நின்றநாள்வரை யெண்ணி - ... - ல் கழித்து நின்றம்சடம் - ரு - சா - ரு - கூ- ஆகிய - சா - ம் - சுபகாரியத்துக்கு விலக்காகும் இவற்றுள் - கூ - உபநயனத்துக்கும் - சா - விவாகத்துக்கும் - ரு - சீமந்தத்துக்கும் - ரு - யாத்திரைக்கும்- விலக்காகும் - மற்றசுபங்களுக்கு பரியாயமாகும்.

(வாரசூனியம்.)

ஞாயிற்றுக்கிழமையில் - அனுஷமும், கேட்டையும், மகமும், விசாகமும், பரணியும், மிருகசிரமும்.

திங்கட்கிழமையில் - பூராடமும், அனுஷமும், மகமும், பூரட்டாதியும், கார்த்திகையும், விசாகமும்.

செவ்வாய்க்கிழமையில் - அவிட்டமும், திருவோணமும், சதயமும், கேட்டையும், திருவாதிரையும்.

புதன்கிழமையில்- மூலமும், திருவோணமும், கார்த்திகையும், அவிட்டமும், அச்சுவினியும், பரணியும்.

வியாழக்கிழமையில் - மிருகசிரமும், பூராடமும், ரேவதியும், புநர்பூசமும், பூசமும்.

வெள்ளிக்கிழமையில்- பூசமும், விசாகமும், ரோகணியும், அவிட்டமும், மிருகசிரமும், அஸ்தமும், அனுஷமும்.

சனிக்கிழமையில் - அஸ்தமும், பூசமும், புநர்பூசமும், உத்திரமும், ரேவதியும், வருவன.

(கவி)

ஆதவற்கனுடங்கேட்டை மகமுற மடுப்பைந்தானம்
தீதெனுமதிக்குப்பொய்கை தேள்மகம்புரட்டையாரல்
கோதறுவிசாகம்பொல்லா குருதிக்குவிட்டமோணம்
மேதகுசதயங்கேட்டை யாதிரைவிளம்பலாகா.

விளங்கியபுதற்குமூல மோணமோடாரல்விட்டம்
இளம்பரிபரணிதீதென் றியம்பினரிரணியற்கு
வளங்கொண்மான் றலைபூராடமரக்கலம்புனர்தம்பூசம்
துளங்கிளமுலையாய்தீதென் றுரைத்தனர்தூயநூலோர்.

நூலறிபுகர்க்குப்பூசம் விசாகநோன்சகடவிட்டம்
கோலமான்றலையோடத்தமனுஷமுங்கொடுமைசெய்யும்
நீலனுக்கத்தம்பூசம் புனர்தமுத் திரநீர்த்தோணி
மாலைசூழ்குழலாய்தீது வாரசூனியம்வந்தாலே.

(கிழமைபிரந்தநாள்.)

ஞாயிற்றுக் கிழமையில் - பரணியும், திங்கட்கிழமையில் - சித்திரையும், செவ்வாய்க்கிழமையில் - உத்திராடமும், புதன்கிழமையில்-அவிட்டமும், வியாழக்கிழமையில் - கேட்டையும், வெள்ளிக்கிழமையில் - பூராடமும், சனிக்கிழமையில் - ரேவதியும், வருவன.

(கவி.)

வந்திக்குங்கதிர்க்குக்கங்குன்மதிக்குச்சித்திரைசேய்காடி
புந்திக்குவிட்டம் பொன்மேற்சேட்டையாம் புனர்பூராட[ம்
இந்திக்குஞ்சனிக்குத்தோணிகிழமைகள்பிறந்தநாளா[ம்
சிந்திக்குங் கருமமெல்லாம் தீமையாய்விளையுமாதே.

(ஆதித்தபார்வை.)

சூரியன்நின்ற நாளுக்குமுன்மூன்று பின்மூன்று நாள்களும், குருட்டுநாள்களாம். அதற்குமுன்னுனகு

பின்னான்குநாள்களும், ஒருகண்பார்வையுள்ளநாள்களாம். மற்றநாள்கள் இருகண்பார்வையுள்ளனவாம்.

(கவி.)

மேதகுகதிரோனின்றநாளுமற்றதன்மேன்மூன்றுங்
கோதறுபின்னின்மூன்றுங் குருட்டுநாளென்றுகொள்க
ஓதியவதற்குப்பின்மூன்நான்குநாளொருகண்காணும்
ஏதமினின்றநாள்களிருகண்ணுண் டருக்கற்கென்றே.

(சந்திரபார்வை.)

ஞாயிற்றுக்கிழமைமுதல் அன்றையவரையிற் சென்றகிழமையை மூன்றிற்பெருக்கிவந்த தொகையைஅச்சுவினி முதலாகக் கழித்துநின்ற நக்ஷத்திரத்தில் ஒன்பதுநக்ஷத்திரம் சந்திரனுக்கு ஒருகண்பார்வையுடையநாளென்றும் அதற்கு மேல்பன்னிரண்டுநக்ஷத்திரம் இருகண்பார்வையுடையநாளென்றும், அதற்குமேலாறு நக்ஷத்திரமுங் குருட்டுநாளென்றுமறிந்துகொள்க.

(கவி.)

அருக்கனூர்கிழமையாதிசென்றவக்கிழமையாய்ந்து [னே
பெருக்கிமூன்றதனின்பேற்றை மாமுதற்கழித்துப்பின்
இருக்குநாளொன்பானேர்கண் பன்னிரண்டிருகண்கா
தருக்கிலாப்பின்னாறுங்குருட்டுநாட்சந்திரற்கே[ணும்

அமரபக்கத்து ஏகாதசிமுதல்ஐந்துதிதிகளும், பூர்வபக்கத்துப் பிரதமைமுதல் நான்குதிதிகளும், குருட்டு

த்திதிகளாம். பூர்வபக்கத்துப்பஞ்சமிமுதல் மூன்றுதிதிகளும், சதுர்த்தசியும், பூரணையும், அமரபக்கத்துப்பிரதமையும், அஷ்டமிமுதல் மூன்றுதிதிகளும் ஒருகண்ணுள்ளவைகளாம், துதியைமுதல் ஆறுதிதிகளும், பூர்வபக்கத்து அஷ்டமிமுதல் ஆறுதிதிகளும்இரண்டுகண்ணுள்ளவைகளாம்

(கவி.)

சந்தித்தபிற்பக்கத்தின் றசமிவிட்டதன்பின்னைந்தும்[ண்
முந்துற்றவாதிநான்குங் குருடுபின்னொருமூன்றோர்க [ம்
பின்புற்றவாறுங்காணும்பின்னின்மூன்றொருகண்காணு
சிந்தித்தவாறுங்காணுஞ் செப்புமூன்றொருகண்காணும்.

சந்திரனுக்கு ஒருகண்ணிருந்தாலும் உத்தமம். சூரியனுக்கு ஒரு கண்ணிருந்தாலுமாகாது. இரண்டுகண்ணுள்ளநாள்களில் சுபகாரியஞ் செய்யலாம்.

(கவி.)

ஒருகண்ணுண்டேனுந்திங்கட்குத்தமங்கதிரோற்காகா
இருகண்ணுண்டானபக்கம் யாவர்க்குமின்பமெய்தும்
இருகண்ணுமில்லாநாளி லியற்றியகருமந்தீதாய்,
விரவியசுற்றத்தோடு கெடுமெனவிளம்பினோ.

(விஷ்டிதோஷம்.)

பூர்வபக்கச் சதுர்த்தசியில்- ரு- ம். சாமம்- மேற்கிலேயும், அஷ்டமியில்- உ- ம். சாமம்-தென்கிழக்கிலேயு

ம், ஏகாதசியில்- எ - ம். சாமம்- வடக்கிலேயும், பூரணை யில்- சு - ம் சாமம் தென்மேற்கிலேயும், அமரபக்கத் திரிதிகையில்- சா - ம் சாமம்- வடமேற்கிலேயும், சத் தமியில்- ங - ம் சாமம்-தெற்கிலேயும், தசமியில்- அ- ம் சாமம்- வடகிழக்கிலேயும், சதுர்த்தசியில்-முதற்சாமம்- கிழக்கிலேயும், விட்டியுண்ணுதலால் இச்சாமங்களில் சுப காரியங்களும் இத்திசையில்யாத்திரையுஞ் செய்யலா காது.

(கவி.)

மன்னுமுதற்சதுர்த்தியினிலைந்தாஞ்சாமம்- மருவி யவஷ்டமியிரண்டு பன்னொன்றேழாம்,முன்னிலு வாநா ற்சாமம்பிற்பக்கத்தின் - மூன்றிலிருமூன்றேழின் மூன் றுஞ்சாமம் பன்னியபிற்பத்தினிலே யெட்டாஞ்சாமம்- பதினொன்கின்முதற்சாமம் பகர்ந்தவிஷ்டி,இன்னதனையச் சாமமென்றுமற்றையிரவிமுதற்றிசைசுடதென்றுமாமே

(பஞ்சகோள்நின்றதோஷம்.)

சூரியநின்றநக்ஷத்திரத்துக்கு-எ-ம்நக்ஷத்திரம்-உற் பாதமென்றும், W-ம்நக்ஷத்திரம்-தாரகமென்றும்,Wரு-ம் நக்ஷத்திரம்- பிரமதண்டமென்றும், உக- ம்நக்ஷத்திரம்- காலனென்றும்பேராம்.

செவ்வாய்நின்றநக்ஷத்திரத்துக்கு- எ - ம் நக்ஷத்தி ரம்- சூலமென்றும், W - ம் நக்ஷத்திரம்- சக்கரமென்றும், Wரு-ம் நக்ஷத்திரம்-கண்டமென்றும்,உக-ம் நக்ஷத்திரம்- காலனென்றும்பேராம்.

புதன்னின்றநக்ஷத்திரத்துக்கு-அ-ம்நக்ஷத்திரமும்-கஅ - ம் நக்ஷத்திரமும் உசு - ம் நக்ஷத்திரமும்- கண்ட மென்றுபேராம்.

சுக்கிறநின்றநக்ஷத்திரத்துக்கு-எ-ம்நக்ஷத்திரமும்-கூ- ம்நக்ஷத்திரமும்,வியாழநின்றநக்ஷத்திரத்துக்கு- எ-ம் நக்ஷத்திரமும்- கூ- ம் நக்ஷத்திரமும் கொடுமையென் றுபேராம்.

சனிநின்றநக்ஷத்திரத்துக்கு- ரு- ம் நக்ஷத்திரமும்- சு- ம்நக்ஷத்திரமும்-ய - ம் நக்ஷத்திரமும்- யக- ம் நக்ஷத் திரமும்- உய- ம் நக்ஷத்திரமும் பந்தமென்றுபேரும்.

இராகுகேதுநின்றநக்ஷத்திரங்களுக்கு- எ- ம் நக்ஷ த்திரம் பரிகமென்றுபேராம்- இவை ஆகாவாம்.

(திரிதினஸ்பிர்க்கு.)

ஒருதிதியாவது ஒருநக்ஷத்திரமாவது ஒருயோக மாவது மூன்றுநாளிற் கலந்திருப்பது.

(அவமாகம்.)

மூன்றுதிதியாவது மூன்றுநக்ஷத்திரமாவது மூன் றுயோகமாவது ஒருநாளிற் கலந்திருப்பது.

(ஆகுலம்.)

வருஷக்கடையில் - யரு- நாளும், மாதக்கடையில்-ரூ-நாளும், நக்ஷத்திரமுடிவில், உ-நாழிகையுமாம்.

(அபிசித்துநக்ஷத்திரம்.)

உத்திராடத்துமுடிவில்- ௰ரு-நாழிகையும்திருவோணத்துமுடிவில்-௪- நாழிகையும்-௪- விநாடியும் ஆஉ ௰௯ நாழிகையும், ௪- விநாடியுமாம்.

(அக்கினிநாள்.)

பரணி- ௩-ம் பாதமுதல்- உரோகணி முதற்பாதம் வரையிலும்- சூரியன்- நிற்கு நக்ஷத்திரமாம்.

(அஷ்டமராசிக்கூறு.)

சன்ம நக்ஷத்திரத்துக்கு - ௰௬ - ம் நக்ஷத்திர முதல்- ௰அ- ம் நக்ஷத்திரம்வரையிலுமுள்ள நக்ஷத்திரமாம்

(கலைஞானபாதநக்ஷத்திரம்.)

சன்ம நக்ஷத்திரத்துக்கு- ௰௬- ம் நக்ஷத்திரமாம்.

(வைநாசிகநக்ஷத்திரம்.)

சன்மநக்ஷத்திரத்துக்கு- உஉ- ம் நக்ஷத்திரமாம்.

(கண்டாந்த நாழிகை.)

அச்சுவினி- மகம்- மூலம்-முதற்காலும்,ஆயிலியம்-கேட்டை- ரேவதி- ௪ - ம் காலுமாம்.

(அர்த்தமூல நாழிகை.)

மூலநக்ஷத்திரத்தின் முதலில்-உ- நாழிகையாம்.

(பாடாவாரி நக்ஷத்திரம்.)

அச்சுவினி, பரணி, சதயம், திருவோணம், அனு ஷம், கேட்டை, மூலம், சோதி, விசாகம், ஆ கூ.

(சூகைதோஷம்)

அமாவாசியை முடிவிலும், பிரதமை முதலிலும் தியாச்சியம் வருங்காலம்.

(கிராணதோஷம்.)

கிராணம் பிடித்தநாளும், அதற்கு முன்மூன்று பின்மூன்று நாள்களுமாம்.

(மிருதவேளை.)

பூர்வான்னமாகிய-சு-நாழிகைக்குள்-மேஷம்-விரிச்சிகம்,சு- க்குமேல்- பரான்னமாகிய-யஉ-நாழிகைக்குள்-கன்னி-கர்க்கடகம்-மிதுனம்-யஉ-க்கு மேல்- மத்தியான்னமாகிய-யஅ-நாழிகைக்குள்-சிங்கம்- கும்பம்-யஅ-க்கு மேல் அபரான்னமாகிய-உச - நாழிகைக்குள்- ரிஷபம்-துலாய்- உச - க்கு மேல்- சாயான்னமாகிய - ௩ய- நாழிகைக்குள் - மகரம் - மீனம் - வருவன.

(கர்த்தாரி யோகம்.)

லக்கினத்துக்கு - இரண்டிலும் - பன்னிரண்டிலும் பாபிகளிருந்தால் - காரியகர்த்தாவுக்கு ஆகாது.

உஷணம்.

அசுபதி - ரோகணி - புநர்பூசம்- மகம்- அஸ்தம - ரு - ம் முதலில் - எ௬ - நாழிகைக்குமேல் - யரு - நாழி

கைவரையும் - பரணி - மிருகசிரம் - பூசம் - பூரம் - சித்திரை - ௫-ம். அந்தத்தில் - ௫ - நாழிகைவரையும், கார்த்திகை - திருவாதிரை - ஆயிலியம், சோதி - உத்திரம் - ௫ - ம். உக - நாழிகைக்குமேல்- ௩௰- நாழிகைவரையும், விசாகம்-மூலம்- திருவோணம்- பூரட்டாதி- ௪-ம். ஆதியில் - அ - நாழிகையும், அனுஷம் - பூராடம்- உத்திரட்டாதி - அவிட்டம் - ௪ - ம் - அந்தத்தில் - அ - நாழிகையும். கேட்டை - ரேவதி - உத்திராடம் - சதயம்- ௪ - ம். உ௰ - நாழிகைக்குமேல் - ௩௰- நாழிகைவரையும் - உஷ்ணமாம்.

## இலாடம்.

சூரியன்நின்றநாள்முதல் மூலம்வரையெண்ணிக்கண்டதொகையை பூராடமுதல் எண்ணிக்கண்ட நக்ஷத்திரமாம்.

## வைதிருதி.

இலாடநாளுக்கு - ௰௪ - ஆம் நாளாம்.

## முகூர்த்த தோஷகாலம்.

பூகம்பமுண்டானமாதம்- மலமாதம்- நக்ஷத்திரமுதிருமாதம்-கிரணதோஷம்-குளிகன்தொட்டலக்கினம்- ௬ - அ - கஉ - ல் சந்திரனிருக்கும்லக்கினம். பாபர்இருக்கும்லக்கினம் - பாபர் பார்க்கும்லக்கினம் - பாபர்விட்டலக்கினம் - குரு சுக்கிரர் சமசத்தமலக்கினம் - குரு சுக்கிரர் - மகாஸ்தமானத்துக்கு - முன்னேழு பின்னேழு

நாள் - இவர்கள் வக்கிராஸ்தமானத்துக்கு- முன்மூன்று பின்மூன்றுநாள். இவர்கள் அஸ்தமனநாள் - சாயான்னகாலம் - சந்தியாகாலம். கண்டாந்தம் - உஷ்ணம் - தியாச்சியந்தொட்டலக்கினம்- பவம்- பாலவம்- கரசை பத்திரை நீங்கியகரணங்கள் - விஷ்டிதோஷம் - இருத்தை - அஷ்டமி- இலாடம்- ஏகார்க்களம் - வைதிருதி - ஐசிரசு ஆகுலமுதலியவாகச் சொல்லப்படும் தோஷங்கள் சுபகாரியங்களுக்கு விலக்காகும்.

(முகூர்த்தவயது)

விவாகம் பிள்ளைக்கு- ஒற்றிற்றவயதும்- பெண்ணுக்கு இரட்டித்தவயதாயு மிருக்கவேண்டும்.

(வேதைகிராந்தம்.)

நேரொ ஏழுவரையும் - குறுக்கேஏழுவரையுங்கீறில் உஅ- முனையாகும்- கிழக்குமுனையில் கார்திகையைவைத்து வலமாக அபிசித்துடன் எண்ண கிரகநின்றமுனைக்கு எதிர்முனை அந்தக்கிரகங்களுக்கு வேதையாம், கிரகநின்றநாள் அந்தக்கிரகங்களுக்குக் கிராந்தமாம்.

மதிநின்றநாளுக்கு- எ - ல்- செவ்வாயும். செவ்வாய்நின்றநாளுக்கு- ச - ல்புதனும். புதனின்றநாளுக்கு- ரு- ல் - குருவும். குருநின்றநாளுக்கு - சு - ல் - சுக்கிரனும். சுக்கிரனின்றநாளுக்கு - அ - ல் - சனியும். சனிநின்றநாளுக்கு - கூ - ல் - ரவியும், ரவிநின்றநாளுக்கு- கூ - ல்- இராகு, கேதுவும். இராகு, கேதுநின்றநாளுக்கு - கூ- ல்- மதியும் - நிற்கின் கிரகவேதையாம்

## தாற்காலகிரகவேதை.

ரவிநின்றநாளுக்கு, ௰௫ - ல் கேது. கேதுக்கு - ௰௮ - ல் புதன். புதனுக்கு - ௰௭ - ல், சனி. சனிக்கு, ௰௨ - ல் - குரு. குருவுக்கு - ௰௨ ல் - ராகு. ராகுவுக்கு - ௰௩ - ல் செவ்வாய். செவ்வாய்க்கு - ௰௨ ல் - மதி மதிக்கு- ௰௨ - ல் ரவிநிற்பது தாற்காலகிரகவேதையாம்.

## நக்ஷத்திரவாமாதி வேதைகள்.

ஒவ்வொருநக்ஷத்திரத்துக்கும்- ௪ - ம் - நக்ஷத்திரம்வாமவேதை-௰௧- ம் நக்ஷத்திரம். சமுகவேதை- ௰௮-ம்நக்ஷத்திரம் - தக்ஷணவேதையாம்.

## லதை.

சூரியன்நின்றநாளுக்கு முன் ௰௨ ஆம்நாளும்.
குருநின்றநாளுக்கு முன் ௯ - ஆம்நாளும்.
செவ்வாய்நின்றநாளுக்குமுன் ௩- ஆம்நாளும்.
சனிநின்றநாளுக்கு முன் ௮ - ஆம்நாளும்.
சந்திரநின்றநாளுக்கு பின் ௨௨ - ஆம்நாளும்
சுக்கிரனின்றநாளுக்கு பின் ௫ - ஆம்நாளும்.
புதனின்றநாளுக்கு பின் ௭ - ஆம்நாளும்.
இராகு-கேது-நின்றநாளுக்குபின் ௯ - ஆம் - நாளும்.

அந்தந்தக்கிரகங்களுக்கு-லதையாகும்.
இவைசுபகாரியங்களுக்குவிலக்கு.

சிலர் - சந்திரனின்றநாளுக்கு - எ - ஆம்நாளும்
புதனின்றநாளுக்கு - உ௩ - ஆம்நாளும்
சுக்கிரனின்றநாளுக்கு - உ௫ - ஆம்நாளும் [யென்பர்.
இராகு- கேது-நின்றநாள்களுக்கு-உக- ஆம்நாளும்லதை

சூரியன் - செவ்வாய் - சனி - இராகு - கேது - இவர்கள் லதை முக்கியமாய் சுபகாரியங்களுக்கு விலக்கென்றும் மற்றக்கிரகங்களின் லதை குரூரமல்லவென்றும் சொல்லுவார்கள்,

சன்மானுஜன்மங்களில் கூடாதகாரியமும் கூடுங்கரியமும்.

கவி.

கற்பிளுள்முன்றிலெண்ணெய்கடிமணம்சிரார்த்தம்போ
வற்புறுபிணிமருந்துமயிர்வினைமருவலாகா [க்கு
விற்புகலுழுதல்வித்தல்விருந்துண்ணலறங்கள்செய்தல்
பொற்பணிமகுடமாடைபுனைதலாம்புகலுமாதே.

சனனவாரநக்ஷத்திரதிதிகளில் - எண்ணெயிட - விவாகம்- நூதனமாகதிதிசெய்ய- யாத்திரை- மருந்துகொள்ள - க்ஷவரம்செய்யலாகாது - உழவுசெய்ய- விதைவிதைக்க விருந்துசெய்ய தருமஞ்செய்ய- ஆபரணம்பூணமுடிசூட்டகோடியுடுக்கஉத்தமம்.

கூடாதநாள்.

ஆதிரைபரணிகார்த்திகையாயிலியமுப்பூரங்கேட்டை
தீதுறுவிசாகஞ்சோதிசித்திரைமகமீராறும்

மாதனங்கொண்டார்தாரார்வழிநடைப்பட்டார்மீளார்
பாய்த்னிற்படுத்தார்தேறூர்பாம்பின்வாய்த்தேரைதானே

## தோஷநிவாரணம்.

புதன் - லக்கிணத்திலிருந்தால்- ரு - குற்றநீங்கும் சுக்கிரனிருந்தால் - ௰த - குற்றநீங்கும் - குருவிருந்தால் ௱த - குற்றநீங்கும்- சுபயோகம்- ௱ - குற்றம்நீக்கும் - அமுதயோகம்சகலகுற்றமுநீக்கும்- குரு - சுக்கிரன் புதன் பார்வை சகலகுற்றமும்நீக்கும்.

## கவி.

மாலவன்றனுதயமாயிரங்குற்றங்கெடுக்கும்
வன்புகரோன்பதினாயிரங்குற்றமாய்க்கும்
சீலமறையோனூறாயிரங்குற்றநீக்கும்
செப்பரியசுகயோகநூறுகுற்றஞ்செகுக்கும்
சோலையிளங்குயிலனையாய்சொல்லமுதயோகம்
தோற்றரியதீமையெல்லாஞ்சொல்லாமலோட்டும்
கோலவிளங்கதிர்கண்டபனிபோலத்தேயும்
குருவெள்ளிபுதனுக்கக்குற்றமெல்லாந்தானே.

## ஏகார்க்களம்.

அன்றைய சூரியஸ்புடத்தை - ௰உ - இராசியில்வாங்கினின்றசேடத்தில் - கண்டநாளும் - அதற்கு- உ - எ- ௰ - ௰க - ௰சு - ௰௬ - ௰அ - உ௰ - ஆம் நாள்களுமாகும்.

ஜசிரசு.

விதீபாதயோகத்தில் பிற்பாதியாம் - இவை சுபகாரியங்களுக்கு விலக்கு. குளிகன்விட்டலக்கினமும், தியாச்சியம்விட்டலக்கினமும்-சுபகாரியங்களுக்குஆகும். முகூர்த்தத்துக்கு கிருஷ்ணஷ்டமி ஆகும்.

(யோகம்.)

| | | | |
|---|---|---|---|
| விஷ்கம்பம் | திருதி ... | வச்சிரம் ... | சாத்தியம் |
| பிரீதி ... | சூலம் ... | சித்தி ... | சுபம் |
| ஆயுஷ்மான் | கண்டம் | விதீபாதம்... | சுப்பிரம் |
| சவுபாக்கியம் | விருத்தி... | வரியான் ... | பிராமம் |
| சோபனம்... | துருவம் ... | பரீகம் ...... | ஐந்திரம் |
| அதிகண்டம் | வியாகாதம் | சிவம் ... ... | வைதிருதி |
| சுகர்மம் ... | அரிஷணம் | சித்தம் ...... | ஆ - உஎ. |

(கரணமும் அவற்றினுருவமும்.)

| | | | |
|---|---|---|---|
| பவம் ... ... | சிங்கம் | பத்திரை ... ... | கோழி |
| பாலவம் ... ... | புலி | சகுனி ... ... | காக்கை |
| கௌவலம் ... | பன்றி | சதுஷ்பாதம் ... | நாய் |
| தைதுலை ... | கழுதை | நாகவம் ... ... | பாம்பு |
| கரசை ... ... | யானை | கிமிஸ்துக்கினம் ... | புழு |
| வணசை ... ... | எருது | | |

(வளர்பிறை.)

| | | | |
|---|---|---|---|
| பிரதமை ... | கிமுஸ்துக்கினம் | ... | பவம் |
| துதியை ... | நவமி ... | பாலவம் ... | கவுலவம் |

| | | | |
|---|---|---|---|
| திரிதியை ... | தசமி ... | தைதுலே ... | கரசை |
| சதுர்த்தி ... | ஏகாதசி ... | வணசை ... | பத்திரை |
| பஞ்சமி ... | துவாதசி .. | பவம் ... | பாலவம் |
| சஷ்டி ... | திரயோதசி | கவுலவம் ... | தைதுலே |
| சத்தமி ... | சதுர்த்தசி | கரசை ... | வணசை |
| அஷ்டமி ... | பௌர்ணிமி | பத்திரை ... | பவம் |

(தேய்பிறை.)

| | | | |
|---|---|---|---|
| பிரதமை ... | அஷ்டமி ... | பாலவம் ... | கவுலவம் |
| துதியை ... | நவமி ... | தைத்துலே... | கரசை |
| திரிதியை... | தசமி ... | வணசை ... | பத்திரை |
| சதுர்த்தி ... | ஏகாதசி ... | பவம் ... ... | பாலவம் |
| பஞ்சமி ... | துவாதசி ... | கவுலவம் ... | தைத்துலம் |
| சஷ்டி ... | திரயோதசி | கரசை ... | வணசை |
| சத்தமி ... | சதுர்த்தசி... | பத்திரை ... | சகுனி |

அமாவாசியை சதுஷ்பாதம்நாகவம்

இப்படித் திதியை இரண்டாகப்பிரித்து முற்பங்குக்கு ஒருகரணமும் பிற்பங்குக்கு ஒருகரணமுமாகக்கொள்ளவும்.

(காலவோரை.)

ஞாயிற்றுக்கிழமையில், க - வது சூரியவோரை உ-வது சுக்கிரவோரை, ங - வது புதவோரை, ச- வது சந்திரவோரை, ரு - வது சனியோரை, சு - வது குருவோரை, எ - வது அங்காரகவோரையாகவும்.

திங்கட்கிழமையில், க - வது சந்திரவோரை, உ-வது சனியோரை, ௩ - வது குருவோரை, ௪ - வது அங்காரகஓரை, ரு - வது சூரியவோரை, ௬ - வது சுக்கிரவோரை, எ- வது புதவோரையாகவும்.

இந்தப்படிமற்றக்கிழமைகளுக்கும் அந்தந்தவாரஓரைமுதலாக ஆறுவதுவாரவோரை அடுத்துவரப் பார்த்துக்கொள்ளவும் - நாள் - க - இ - ஓரை - உ௪. ஓரை- க - இ - நாழிகை - உ௰. இவற்றுள்சூரியவோரையும் சனியோரையும் ஆகாவாம்.

(கவி)

அருக்கன்புகர்புந்தியிந்துதுன்மந்தனுேடந்தணன்சேய்
இருக்குங்கடிகையிரண்டரையாமிவைநாடிடிலோ[ள்ளே
மரிக்குமணஞ்செயுமாலையுஞ்சாத்துமகிழ்ந்திருந்து[கொ
சிரிக்குஞ்சிலுகிடுஞ் செல்வமுண்டாமெனர்த்தேர்ந்து

(வாரத்தியாச்சியம்.)

ஞாயிறுக்கு-௩உ-நாழிகைக்குமேலும், திங்களுக்கும்புதனுக்கும் - ௪௨ - இ - மேலும், செவ்வாய்கும்-வியாழத்துக்கும் - ௩க - இ - மேலும், வெள்ளிக்கு - உக - இ மேலும், சனிக்கு - ய௪ - இ - மேலும் - ௩ஞ - நாழிகை தியாச்சியமாம்.

(கவி.)

ஞாயிருநாலெட்டாநற்றிங்களீராறும்
தீயசேய்பொன்முப்பத்தொன்றுகும்

ஏயபுதன்-நாற்பத்திரண்டாகுநல்ல வெள்ளிமூவேழாம் காற்சனியீரோழுவிஷங்காண்

(திதித்தியாச்சியம்.)

பிரதமைச்கு - உச - அஷ்டமிக்கு - உ௰ - துதியைக்கு - ௰உ - திரிதியைக்கு - ருரு - சதுர்த்திக்கும் - நவமிக்கும் - ரு - பஞ்சமிக்கும் - சஷ்டிக்கும் - ருச - சத்தமிக்கு - ௩க - தசமிக்கு - ௩௩ - ஏகாதசிக்கு - க துவாதசிக்கு - ௰ரு - திரயோதசிக்கு - உசு - சதுர்த்தசிக்கு - எ பூரணைக்கு - உ கூ - அமாவாசியைக்கு - சு - இந்தநாழிகைக்குமேல் - ச - நாழிகைதியாச்சியமாம்.

(லக்கினத்தியாச்சியம்.)

மேஷம் - ரிஷபம் - கன்னி - தனுசு - ஆ ச - இம் முதலில் - ௨ - நாழிகை.

மிதுனம்-சிங்கம் - துலாம் - கும்பம்- ஆ ச- இம் நடுவில் - ௨ - நாழிகை.

கர்க்கடகம - விருச்சிகம் - மகரம் - மீனம் - ஆ ச இ - ம் கடையில் - ௨ - நாழிகை.

(நக்ஷத்திரதி யாச்சிய துருவம்.)

| | | | |
|---|---|---|---|
| அச்சுவினி | ...ரு௰ | திருவாதிரை | ...௰க,உக |
| பரணி | ...உச | புநர்பூசம் | ...௩௰ |
| கார்த்திகை | ...௩௰ | பூசம் | ...உ௰ |
| உரோகணி | ...ச௰ | ஆயிலியம் | ...௩உ |
| மிருகசிரம் | ...௰ச | மகம் | ...௩௰ |

| | | | |
|---|---|---|---|
| பூரம் ... ... | ...உ௰ | பூராடம் ... ... | உ௪ |
| உத்திரம் ... | ...௰அ | உத்திராடம் ... | ...உ௰ |
| அஸ்தம் ... ... | உஉ | திருவோணம் ... | ...௰ |
| சித்திரை ... ... | உ௰ | அவிட்டம் ... ... | ...௰ |
| சோதி................ | ௰௪ | சதயம் ... ... | ...௰அ |
| விசாகம் ... ... | ௰௪ | பூரட்டாதி ... ... | ௰௬ |
| அனுஷம் ... ... | ௰ | உத்திரட்டாதி ... | ...உ௪ |
| கேட்டை ... ... | ௰௪ | ரேவதி ... ... | ...௩௰ |
| மூலம் ... | ...உ௰, ௫௬ | | |

இந்தநாழிகைக்குமேல் ௪ - நாழிகைதியாச்சியம்

## தியாச்சியகவி.

சொல்லுகழையாரல்மகந்தோணிமுப்பான்
சோற்றிவன்பூராட நாலாறுகும்
நல்லமகசிரங்கேட்டை விசாகஞ்சோதி
நவின்றிடுவாய்பன்னகு நடுநாள்பூரம்
வெல்லுகுருநாளாடி யிருபானன்கு
மேவுதேள்புள்ளோணம விளங்கும்பத்து
வல்லசெக்கோடுத் திரமீரொன்பதாகும்
வருபரியைம்பான்பாரோ நாற்பானுமே. (க)

ஆதிரையோபன்னொன்று மிருப்தொன்றும்
அத்தமிருபத்துடனேயாமிரண்டு
தீதுபுரியாயிலியமுப்பானொண்டு
செப்பிடுபூரட்டாதி யீரொட்டென்றே

ஒதிடுமூலம்மிருப்பான் கன்னல்பின்னும்
ஒப்பரியவந்தத்திஞன்கின்மூன்னும்
வேதமுணர்ந்தோர் நான்குகடிதன்னை
விஷமென்றே சுபந்தனக்குவிலக்கிஞரே. (உ)

(யோகினிநிலை.)

| (வளர்பிறையில்) | | (தேய்பிறையில்.) | |
|---|---|---|---|
| பிரதமை ... | ஏகாதசி ... | சஷ்டி ... ... | கிழக்கு |
| துதியை ... | துவாதசி ... | சத்தமி ... | வடக்கு |
| திரிதியை ... | திரயோதசி | அஷ்டமி... | தென்கிழக்கு |
| சதுர்த்தி ... | சதுர்த்தசி | நவமி ... | தென்மேற்கு |
| பஞ்சமி ... | பூரணை ... | தசமி ... | தெற்கு |
| சஷ்டி ... | பிரதமை ... | ஏகாதசி ... | மேற்கு |
| சத்தமி ... | துதியை ... | துவாதசி ... | வடமேற்கு |
| அஷ்டமி ... | திரிதியை... | திரயோதசி... | வடகிழகு |
| நவமி ... | சதுர்த்தி ... | சதுர்த்தசி ... | ஆகாசம் |
| தசமி ... | பஞ்சமி ... | அமாவாசியை | பூமி |

பிராயாணம் செய்யும்போது பின்பக்கத்திலும் இடதுபக்கத்திலும் யோகினியிருக்கலாம். ஆகாசத்திலும் பூமியிலும் இருந்தால் மத்திமபக்ஷமாம்.

யோகினிபரிகாரம்.

(கவி.)

இந்திரன்வாயுகூற்ற னீசானன்வருணனங்கி
அந்தமாங்குபேரன்றன்னேடாகியநிருதியீரு

உந்தியவுதயந்தொட்டே யோர்திசைமூன்றேழுக்கால்
சந்தத‌ங்கடிகைநீக்கிச் சாருயோகினிதிக்கிற்கே.

இந்தக்கிரமப்படி - க - உ - ௩ - ச - ரு - சூ - எ - அ - முகூர்த்தங்கள்தள்ளி அவசியம் பிரயாணம் போகவேண்டில் - யோகினித்திக்கில் பிரயாணம்போகலாம்.

நாமநக்ஷத்திர எழுத்துகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சு | சே | சோ | ல | அச்சுவினி |
| லீ | லு | லே | லோ | பரணி |
| ஆ | ஈ | ஊ | ஏ | கார்த்திகை |
| ஓ | வா | வீ | வு | ரோகணி |
| வே | வோ | கா | கி | மிருகசிரம் |
| கூ | க்க | ஞ | ச | திருவாதிரை |
| கே | கோ | ஹ | ஹி | புநர்பூசம் |
| கு | ஹே | ஹோ | ட | பூசம் |
| டீ | டு | டே | டோ | ஆயிலியம் |
| மா | மீ | மூ | மே | மகம் |
| மோ | டா | டி | டு | பூரம் |
| டே | டொ | பா | பி | உத்திரம் |
| பூ | ஷ | நா | ட்டா | அஸ்தம் |
| பே | போ | ரா | ரி | சித்திரை |
| ரூ | ரே | ரோ | த | சோதி |
| தீ | து | தே | தோ | விசாகம் |
| நா | நீ | நூ | நே | அனுஷம் |

| | | | | |
|---|---|---|---|---|
| நோ | யா | இ | யூ | கேட்டை |
| எ | யோ | ப்பா | ப்பி | மூலம் |
| பூ | தா | ப | ட | பூராடம் |
| பே | போ | ஜ | ஜி | உத்திராடம் |
| ஜு | ஜே | ஜோ | க | திருவோணம் |
| க | கி | கு | கே | அவிட்டம் |
| கோ | சா | சீ | சூ | சதயம் |
| ஸே | ஸோ | தா | தி | பூரட்டாதி |
| தா | ஸ | த்தா | தி | உத்திரட்டாதி |
| தே | தோ | ச்சா | ச்சி | ரேவதி |

## விசேஷவிதி.

கிருஷ்ணனுக்கு - விசாகம்
இருஷ்ணனுக்கு - ஆயிலியம்
ஸ்ரீதரனுக்கு - சித்திரை
க்ஷேத்திரபாலனுக்கு - மூலம்
ஞானனுக்கு - திருவாதிரை
பீமனுக்கு - அஸ்தம்
பைரவனுக்கு - உத்திரட்டாதி

(பகல்நாழிகைபார்க்கவகை.)

அந்தந்தமாதத்துக்குள்ள பகல்நாழிகையைப் பாதி செய்து ஏழிற்பெருக்கிக்கொண்டு அடியளந்து அவச்சாயைபாதச்சாயைநீக்கிநின்ற அடியின்மேல் ஏழுகூட்டிக் கொண்டு இதற்கு முன் பெருக்கிவைத்ததொகையைக்

கொடுத்துவந்தஈவை உச்சிக்குமுன்சென்ற நாழிகையா கவும்-உச்சிக்குப்பின் இருப்புநாழிகையாகவும் கொள்க.

(அவச்சாயை அடிகள்.)

சித்திரை - ஆவணி - ஷ - க - உ - வது ௦ - ௩ - வது ௦.
வைகாசி - புரட்டாசி - ஷ - ௦ உ - வது ௦ - ௩ - வது க.
ஆனி - ஐப்பசி - ஷ - க - உ - வது க௦ - ௩ - வது உ.
ஆடி - பங்குனி - ஷ - உ - உ - வது க௦ - ௩ - வது க.
கார்த்திகை - ஷ - உ - உ - வது உ௦ - ௩ - வது ௩.
மார்கழி - ஷ - ௩ - உ - வது ௩௦ - ௩ - வது ச.
தை - ஷ - ச - உ - வது ௩௦ - ௩ - வது ௩.
மாசி - ஷ - ௩ - உ - வது க௦ - ௩ - உ.

மாதத்தை மூன்றுபங்காக்கிப் பங்கொன்றுக்குமே ற்காட்டியகணக்குப்படி அவச்சாயை தள்ளிக்கொள்ள வும் - பாதச்சாயை எப்போதும் அரையடியாம்.

(மாதத்துப்பகல்நாழிகை.)

சித்திரை ஐப்பிசி - ௩௰ ஆனி...ஆவணி - ௩கவ
வைகாசி......௩௰ஞ ஆடி.........௩க௦
புரட்டாசி ... ... ௩௰ஞ மார்கழி...மாசி - உஅஞ
கார்த்திகை.பங்குனிஉகூவ தை...........உஅ௦

(கவி)

சித்திரையுமைப்பசியுஞ்சீரொக்குஞ்சித்திரைவிட் டைப்பசிமுன்னைந்துமருக்கேறு - மைப்பசிக்குப், பின் னைந்துமாதம்பிசகாமல்ராவேறும் மின்னே-விடுபூமுடி.

வி - டி - ஜ, ஓ - மு - கவ, பூ - கஉ, நாகையாம்.

(கவி.)

பகர்ந்தபகல்நாழிகையைப்பாதிசெது-பாதிதனையே ழிற்பெருக்கிப்பாரில், நிகழ்ந்தவடியளந்தவச்சாய் பாதச் சாய்நீக்கி- நின்றவடிமேலேழுங்கூட்டியேற்றித்,திகழ்ந்த முதற்றொகையதனைபிதனுக்கீய்ந்து - சிறந்தபலன்சென் றநாழிகையாம்பின்பேல்,புகழ்ந்திரவிபடுங்கடிகையிவை தாமென்று-பொலன்குழையாய் பகற்கடிகைபொருந்தச் சொல்லே.

| சித்திரை ஆவணி | வைகாசி ஆடி | ஆனி | புரட்டாசி | ஐப்பசி மாசி | கார்த்திகை தை | பங்குனி மார்கழி | நாழிகை |
|---|---|---|---|---|---|---|---|
| அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | நாழிகை |
| சுச | சுஎ | சுஅ | சுங | சுச | சுஎ | சுச | க |
| ஙசு | ஙங௯ | ஙச | ஙஉ | ஙஉ | ஙச | ஙச | உ |
| உக | உஉ | உஉ | உரு | உக | உஉ | உங | ங |
| ௰ரு | ௰சு | ௰சு | ௰ரு | ௰ச | ௰ச | ௰எ | ச |
| ௰உ | ௰உ | ௰ங | ௰உ | ௰உ | ௰ங | ௰ங | ரு |
| கூவ | கூ௯ | ௰க | கூஜ | கூ | ௰க | ௰க | சு |
| எ௯ | அ | அவ | எ௯ | எ | அ௯ | அவ | எ |
| சு௯ | சு௯ | சுஜ | சு | சு | எவ | எ௯ | அ |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ௫ | ௫வ | ௫ஒ | ௫ | ௫ | ௬ஒ | ௬ஞ | ௯ |
| ௪ | ௪வ | ௪ஒ | ௪ | ௪வ | ௫வ | ௫ஒ | ௰ |
| ௩ஒ | ௩ஒ | ௩ஒ | ௩ | ௩ஜ | ௪ஒஞ | ௫ | ௰௧ |
| ௨ஒ | ௨ஜ | ௩வ | ௨வ | ௩வ | ௪ | ௪வ | ௰௨ |
| ௧ஜ | ௨வ | ௨ஒ | ௧ஜ | ௨ஒ | ௩ஜ | ௪ப[illegible] | ௰௩ |
| ௧ | ௧ஒ | ௨வ | ௧வ | ௨ஞ | ௩ஒ | ௪ | ௰௪ |
| ஒ | ௧வ | ௧ஜ | ஜ | ௨ | ௩வ | ௩ஜஞ, | ௰௫ |

௰௫. நாழிகைவரையிற் சென்றநாழிகையாகவும் ௰௫நாழிகைக்குமேல் இருப்புநாழிகையாகவும் கொள்ள வேண்டும்.

## உதயகாலமணியறியும்விதம்.

(கவி.)

இரவியுதயமறியவெணிலியன்றவிரவின்கன்னறனை
விரவமுந்நான்கினிற்றுக்கிமீட்டுமுன்னளிரவினெடு
உரைசேர்மறுநாட் பகலகசுக்கூட்ட மணியாஞ்சேடம
ணதை, வரையாதறுபானிற்றுக்கிய துபோற்செய்யமணியு
றுப்பாம்.

(வருமாறு.)

| முன்னளிரவின் பிரமாணம். | அன்றைய அகப் பிரமாணம். | இரண்டின் மொத்தம். |
|---|---|---|
| நாழி - விநாடி | நாழி - விநாடி | நாழி - விநாடி |
| ௩௧ - ௪௭ | ௩௧ - ௪௮ | ௬௩ - ௩௫ |
| ஏகஜாதி. | ஏகஜாதி | ஏகஜாதி |
| ௧௯௦௭ | ௪௯௦௮ | ௩௮௧௫ |

பவஞூ வைகாசிமீ உகஉ இல்
சூரியோதயமான - மணி - மினிட்.
(செய்முறை).

| முன்னளிரவின் பிரமாணம். | | அன்றைய அகப் பிரமாணம். | | இரண்டின் மொத்தம். | |
|---|---|---|---|---|---|
| நாழி. | விநாடி | நாழி. | விநாடி. | நாழி. | விநாடி. |
| உஅ | கங | ஙக | சஅ | சுO | க |
| மொத்தவிநாடி | | மொத்தவிநாடி | | மொத்தவிநாடி | |
| கசுகூங | | கககOஅ | | ஙசுOக | |

கசுகூங-ஐ-கஉ-ஆல்-பெருக்குக
-ஙசுOக -ஆல்பாகிக்க
கசுகூங
கஉ
ஙசுOக)உOஙகசு(ரு
கஅOOரு
சேடம். உஙகக

மணி மினிட்
ரு ஙஅ
உஙகக
சுO
ஙசுOக)கஙஅசுசுO(ஙஅ
கOஅOங
ஙOசுஙO
உஅஅOஅ
கஅஉஉ

(இராநாழிகைபார்க்கவகை.)

அச்சுவினிஅறுமீன் குதிரைத்தலைபோல்
மெச்சிடுகடகத் திருகடிகையதாம்
பரணிமூம்மீ னடுப்புப்போல
திரண்மிகுகடகத் தொருநாற்காலாம்
கார்த்திகையறும் னேற்றரியேகம்

உரோகணியூற்றால் பன்னிருமீனும்
முரண்மிகுசிங்கம் மூன்றேகாலாம்
மான்றலைமூன் றுந் தேங்காய்க்கண்போல்
ஆன்றசிங்கத் தைந்தேகாலே
ஆதிரையொருமணி யாயிழையொன்றரை
ஓதியபுநர்த மோடங்கோலரை
பூசம்புடலம் பூவதுபோல
வீசுங்கோலி லிரண்டரையாகும்
ஆயிலியநான்கு மம்மிபோல
மாயிருகோலி ஞலேகாலே
மகமொருநான்கு முடநுகம்போல
நகருந்தேளி லொன்றரையாகும்
பூரமுத்திரம் பொற்காற்கட்டில்
ஊர்தேண்மூன்றே யொண்சிலையரையே
அத்தமைம்மீன் கைத்தலம்போல
முத்தீன்றனுவின் மூன்றெனப்படுமே
சித்திரையிருமீன் சிறுபுலிக்கண்போல்
அத்தனுவதனி லைந்தெனப்படுமே
சோதிதுலக்கத் தொருமணியென்ப
சாதிமகரத் தொன்றரைசாற்றும்
விசாகமாறு மிடிபாழ்ந்துரவாம்
வசையறுமகரத் தாகுநாற்கடிகை
அனுஷமாறு முடப்பனைபோல
குனியுங்கும்பத் தரையாகும்மே

கேட்டைநான்கு மீட்டிபோல
ஓட்டைக்குடத்தி லொன்றரையாகும்
மூலமாறு மெக்காளம்போலச்
சாலுங்குடத்திற் சதுரமாமே
பூராடமுத்திராடம் பூங்கானலாம்
சீராமீனத் தோரரைநான்கே
ஓணமூன்று முழக்கோல்போல
காணுமாட்டில் மூன்றெனப்படுமே
அவிட்டச்சக்கரத் தாறுமேறரை
தவிட்டுச்சதயந் தனியேறிரண்டரை
பூரட்டாதியு முத்திரட்டாதியும்
ஓராமிதுனத் தொன்றரைநான்கே
ரேவதிமொய்ம்மீன் தோணிபோல
ஓவறுகடகத் தொருமுக்காலே.

இன்னுமொருவிதம்.

சித்திரைக்குப் பூசமுதல் சீராவணிக் கனுஷம்
அத்தனுசுக் குத்திரட் டாதியாம் - நித்தநித்தம்
ஏதுச்ச மானாலும் ரெண்டேகா விற்பெருக்கி
மாதலமந்து தள்ளி மதி.

சித்திரைமுதல் - ஆடிவரையும், பூசமுதலாகவும். ஆவணிமுதல் - கார்த்திகைவரையும், அனுஷமுதலாகவும். மார்கழிமுதல் - பங்குனிவரையும், உத்திரட்டாதிமுதலாகவும். அப்போதுஉச்சமான நக்ஷத்திரம்வரையெண்ணி இரண்டேகாவிற் பெருக்கிச்சென்ற - மாதம்-க-இ-ரு

நாழிகையாக அன்றுவரை ஈவுப்படி தள்ளிக்கண்டது அ
ப்போதய நாழிகையாம்.

(வெண்பா.)

ஆனதிரு வாதிரையோ டாயிரண்டு நல்லுச்சம்
ஊனமிலாக் கேட்டைமுத லொன்பதுவும் - மானே
வருவதுச்ச மென்றறிவாய் மற்றைய மீறாறும்
பிரிவதுச்ச மென்றெண்ணிப் பேசு.

நக்ஷத்திரம் உச்சமாகுநாழிகை.

அசுபதி - ரோகணி - பூசம்- சித்திரை- சோதி-விசாகம் -
ரேவதி - எ-ம். ... ... ... உ-நாழிகை.
பரணி-கார்த்திகை-மிருகசிரம்-பூராடம்-திருவோணம் -
ரு-ம். ... ... ... உவ-நாழிகை.
திருவாதிரை - ஆயிலியம் - உ-ம். ... கஉ - நாழிகை.
மகம்-அஸ்தம்-உத்திராடம்-பூரட்டாதிசம்உஉநாழிகை.
அனுஷம் - அவிட்டம் - உம். ... ...க஌ - நாழிகை.
புனர்பூசம்.- ரு. உ. - உத்திரம்-ரு வ.மூலம் சநாழிகை.
பூரம் - கேட்டை - உ-ம். ... ... ...க-நாழிகை.
சதயம் - பூரட்டாதி - உ-ம்.... ...உ஌ நாழிகை.

ஆ நாழிகை - ௯ய.

(கவி.)

தோணிபார்குதிரைபூசஞ்சோதிசித்திரைவிசாகம்
காணிருகடிகையத்தங்கடைகுளமுரசமாசி
பூணுறுமாதேரொண்டோடரைபூரங்கேட்டையொன்றும்
மாணுறுசெங்கைபாம்புமருவுமொன்றனாகஞழக்கோ(க)

கன்னல்மூன் றரையளக்கர்மகசிரமோணநீர்நாள்; து ன்னடுப்பிரண்டேகாலாந்தோமறுமவிட்டம்பெண்ணே, மன்னுமொன்றே முக்காலாம்வருணநாள் புரட்டைரொண்டோ, டுன்னுமுக்காலாமூலநான்குபங்குனிமூன்றே கால். (௨)

(இராசி.)

| | | |
|---|---|---|
| மேஷம் | சிங்கம் | தனுசு |
| ரிஷபம் | கன்னி | மகரம் |
| மிதுனம் | துலாம் | கும்பம் |
| கர்க்கடகம் | விருச்சிகம் | மீனம் - ஆ ௰௨. |

| (இராசி நாழி.) | | (இராசி மாதம்.) | | (சங்கற்பமாதம்.) |
|---|---|---|---|---|
| மேஷம் | ௪வ | மேஷம் | சித்திரை | சைத்ரம் |
| ரிஷபம் | ௪௫ | ரிஷபம் | வைகாசி | வைசாகம் |
| மிதுனம் | ௫வ | மிதுனம் | ஆனி | ஜேஷ்ட்டம் |
| கடகம் | ௫௨ | கடகம் | ஆடி | ஆஷாடம் |
| சிங்கம் | ௫வ | சிங்கம் | ஆவணி | ஸ்ராவணம் |
| கன்னி | ௫ | கன்னி | புரட்டாசி | பாத்ரபதம் |
| துலாம் | ௫ | துலாம் | ஐப்பசி | ஆஸ்வீஜம் |
| விருச்சிகம் | ௫வ | விருச்சிகம் | கார்த்திகை | கார்த்திகம் |
| தனுசு | ௫௨ | தனுசு | மார்கழி | மார்க்கசிரம் |
| மகரம் | ௫வ | மகரம் | தை | புஷ்யம் |
| கும்பம் | ௪௫ | கும்பம் | மாசி | மாகம் |
| மீனம் | ௪வ | மீனம் | பங்குனி | பால்குணம் |

ஆ நாழிகை-௬௰

| (இராசியுருவம்.) | | (இராசியங்கம்.) | |
|---|---|---|---|
| மேஷம் | வெள்ளாடு | மேஷம் | தலை |
| ரிஷபம் | எருது | ரிஷபம் | முகம் |
| மிதுனம் | ஸ்திரீபுருஷர் | மிதுனம் | கழுத்து |
| கர்க்கடகம் | நண்டு | கர்க்கடகம் | தோள் |
| சிங்கம் | சிங்கம் | சிங்கம் | மார்பு |
| கன்னி | பெண் | கன்னி | பக்கம் |
| துலாம் | தராசு | துலாம் | முதுகு |
| விருச்சிகம் | தேள் | விருச்சிகம் | பீஜம் |
| தனுசு | வில் | தனுசு | தொடை |
| மகரம் | முதலை | மகரம் | முழங்கால் |
| கும்பம் | குடம் | கும்பம் | கணுக்கால் |
| மீனம் | மீன் | மீனம் | பாதம் |

(இராசிகளின் திக்குகள்.)

| | | | |
|---|---|---|---|
| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கிழக்கு |
| கர்க்கடகம் | சிங்கம் | கன்னி | தெற்கு |
| துலாம் | விருச்சிகம் | தனுசு | மேற்கு |
| மகரம் | கும்பம் | மீனம் | வடக்கு |

(இராசிகளின் சாதி.)

| | | | |
|---|---|---|---|
| கர்க்கடகம் | விருச்சிகம் | மீனம் | பிராமணசாதி |
| சிங்கம் | தனுசு | மேஷம் | க்ஷத்திரியசாதி |
| துலாம் | கும்பம் | மிதுனம் | வைசியசாதி |
| கன்னி | ரிஷபம் | மகரம் | சூத்திரசாதி |

(இதுவுமது)

| | | | |
|---|---|---|---|
| மேஷம் | வெள்ளாழன் | துலாம் | செட்டி |
| ரிஷபம் | இடையன் | விருச்சிகம் | வேடன் |
| மிதுனம் | சக்கிலியன் | தனுசு | தட்டான் |
| கர்க்கடகம் | கன்னான் | மகரம் | வண்ணான் |
| சிங்கம் | பிராமணன் | கும்பம் | குசவன் |
| கன்னி | நாவிதன் | மீனம் | பறையன் |

(இராசி நிறம்.

| | | | |
|---|---|---|---|
| மகரம் | கன்னி | மிதுனம் | கறுப்பு |
| விருச்சிகம் | கும்பம் | மீனம் | ப்ச்சை |
| மேஷம் | தனுசு | சிங்கம் | சிவப்பு |
| ரிஷபம் | துலாம் | கர்க்கடகம் | வெள்ளை |

(பகல்விழிப்புராசி.)

சிங்கம்-கன்னி துலாம்-விருச்சிகம்-கும்பம்-மீனம் ஆ, சு.

(இராவிழிப்புராசி.)

மேஷம்ரிஷபம்-மிதுனம்கர்க்கடகம்-தனுசுமகரம் ஆ, சு.

(செவிட்டுராசிகள்.)

துலாம், விருச்சிகம் - பகற்செவிடு.

தனுசு, மகரம் இராச்செவிடு.

(ஊமைராசிகள்.)

மீனம் - பகல் ஊமை. கும்பம் - இராவூமை.

(சரராசி, தாதுராசி.)

மேஷம் - கர்க்கடகம் - துலாம் - மகரம் - ஆ, சு.

(ஸ்திரராசி, மூலராசி.)

ரிஷபம் - சிங்கம் - விருச்சிகம் - கும்பம் - ஆ-சு.

(உபயராசி, ஜீவராசி.)

மிதுனம் - கன்னி - தனுசு - மீனம் - ஆ-சு.

(ஆண்ராசி அல்லது ஒற்றைராசி.)

மேஷம் - மிதுனம் - சிங்கம் - துலாம் - தனுசு- கும்பம் - ஆ-சா.

(பெண்ராசி அல்லது இரட்டைராசி.)

ரிஷபம்-கர்க்கடகம்- கன்னி-விருச்சிகம்-மகரம் - ஆ-சா.

(இருகால்ராசி.)

மிதுனம் - கன்னி - துலாம் - கும்பம் - ஆ-சு.

(நாற்கால் இராசி.)

மேஷம் - ரிஷபம் - சிங்கம் - தனுசு - ஆ-சு.)

(பலகால்ராசி.)

கர்க்கடகம் - விருச்சிகம் - ஆ-உ.

(பறக்குமிராசி.)

மகரம் - மீனம் - ஆ-உ.

(தலையுதயராசி.)

மிதுனம் - சிங்கம் - கன்னி - துலாம் - விருச்சிகம் கும்பம் - ஆ, சா.

(காலுதயராசி.)

மேஷம் - ரிஷபம் - கர்க்கடகம் - தனுசு - மகரம் - ஆ-ரு

(உடலுதயராசி)

மீனமாம்.

தலையுதயம் - பகல் - வலியுடையராசியாம்.

காலுதயம் - இராவலியுடையராசியாம்.

(சுட்கராசி.)

மிதுனம் - சிங்கம் - கன்னி - ஆக - ௩.

(ஜலராசிக்கூறு.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விருச்சிகம்<br>துலாம்<br>மேஷம் | வ | கும்பம்<br>ரிஷபம்<br>தனுசு | உ | மகரம்<br>மீனம்<br>கர்க்கடகம் | க |

(நவக்கிரகங்கள்.)

சூரியன் - சந்திரன்
செவ்வாய் - புதன்
வியாழம் - வெள்ளி
சனி - இராகு
கேது - ஆக ௯-

(கிரகபுத்திரர்.)

காலன் - கலைக்கியானபாதன்
கரேசன் - அர்த்தப்பிரகரணன்
யமகண்டன் - விஷகடிகன்
குளிகன் - அமுதகடிகன்
அவமிருத்து - ஆக - ௯.

(குஜாதிபஞ்சகிரகங்கள்.)

குஜன் - புதன்
குரு - சுக்கிரன்
சனி - ஆக-௫.

(தூமாதிபஞ்சகிரகங்கள்.)

தூமன் - விதீபாதன்
பரிவேடன்-இந்திரதனுசு
தூமகேது - ஆக - ௫.

| வாரங்கள் | யமகண்ட காலம் | | அர்த்தப்ரகர காலம் | | காலநேமி காலம் | |
|---|---|---|---|---|---|---|
| | ஆதி | வரை | ஆதி | வரை | ஆதி | வரை |
| ஞாயிறு | கரு | கஅஜ | ககவ | கரு | 0 | ஙஜ |
| திங்கள் | ககவ | கரு | எஹ | ககவ | உஉஹ | உகூவ |
| செவ்வாய் | எஹ | ககவ | ஙஜ | எஹ | கஅஜ | உஉஹ |
| புதன் | ஙஜ | எஹ | 0 | ஙஜ | கரு | கஅஜ |
| வியாழம் | 0 | ஙஜ | உஉஹ | உகூவ | ககவ | கரு |
| வெள்ளி | உஉஹ | உகூவ | கஅஜ- | உஉஹ | எஹ | ககவ |
| சனி | கஅஜ- | உஉஹ | கரு | கஅஜ | ஙஜ | எஹ |

(ஆண்)
சூரியன், செவ்வாய், குரு } ஆ. ங.

(பெண்)
சந்திரன், சுக்கிரன், இராகு } ஆ. ங.

(அலி)
புதன், சனி, கேது } ஆ. ங.

(கிரகநிறம்)

சந்திரன், சுக்கிரன் } வெள்ளை
சூரியன், செவ்வாய், கேது } சிவப்பு. குரு - மஞ்சள். புதன் - பச்சை. சனி, இராகு - கருமை.

(கிரகவடிவம்.)

(நெடியர்.)
புதன், குரு, இராகு, கேது } ஆ. ச

(குறியர்.)
சந்திரன், செவ்வாய், சனி } ஆ. ங.

(சமனவர்.)
சூரியன், சுக்கிரன் } ஆ. உ.

(கிரகசாதி.)

| (பிர்ம்ம.) | (க்ஷத்திரிய.) | (வைசிய) | (சூத்திர) | (சங்கிரம்சாதி) |
|---|---|---|---|---|
| குரு<br>சுக்கிரன்<br>ஆ௨. | சூரியன்<br>செவ்வாய்<br>ஆ௨. | சந்திரன்<br>புதன்<br>ஆ௨ | சனி<br>ஆ௧ | இராகு<br>கேது<br>ஆ௨ |
| மேற்படி<br>(சந்திரன்) | | | மேற்படி<br>(சுக்கிரன்)(என்பர்சிலர்) | |

(கிரகபாஷை.)

சூரியன், குரு, சுக்கிரன் } ஸமஸ்கிரதமும், தெலுங்கும்

சந்திரன் - தமிழ்
செவ்வாய் - மந்திரம்
புதன் - ஜோதிஷம்

சனி - இராகு - கேது - அன்னியபாஷை

(கிரககுணம்.)

குரூரக்கிரகங்கள். } சூரியன் - க்ஷீணசந்திரன் - செவ்வாய்
சனி - இராகு - கேது.

சௌம்மியக்கிரகங்கள் } விருத்திசந்திரன் - புதன்
குரு - சுக்கிரன்.

(கிரகத்திரயம்.)

சரக்கிரகங்கள் - { சந்திரன் - செவ்வாய்
இராகு - கேது.

ஸ்திரக்கிரகங்கள் - சூரியன் - சுக்கிரன் ... *

உபயக்கிரகங்கள் - புதன் - குரு - சனி. ... *

(சாத்துவீகாதிகுணக்கிரகம்.)

சாத்மீகர் - சந்திரன் - குரு. ... *
இராஜசர் - சுக்கிரன் - செவ்வாய். ... *
தாமஸர் - புதன் - சூரியன் - இராகு. ... *

(முப்பிணிக்கிரகம்.)

வாதக்கிரகங்கள் - குரு - புதன் - சனி; ... *
பித்தக்கிரகங்கள்-சூரியன்-செவ்வாய்-இராகு-கேது
சேத்துமக்கிரகங்கள் - சுக்கிரன் - சந்திரன்.......*

| (கிரகதிக்கு.) | | (கிரக ஆசனம்.) ...* |
|---|---|---|
| சூரியன் - | நடு | சூ. இ-வட்டவடிவம் ... * |
| சுக்கிரன் - | கிழக்கு | ச. இ-சவுக்கவடிவம் ... * |
| சந்திரன் - | தென்கிழக்கு | செ.இ-திரிகோணவடிவம் * |
| செவ்வாய் - | தெற்கு | பு. இ-அம்புவடிவம் ... * |
| இராகு - | தென்மேற்கு | கு. இ-நீண்ட சவுக்கவடிவம் |
| சனி - | மேற்கு | சு. இ-ஐங்கோணவடிவம் * |
| கேது - | வடமேற்கு | சனி.இ-வில்வடிவம் ... * |
| குரு - | வடக்கு | இராகு.இ-கொடிவடிவம்...* |
| புதன் - | வடகிழக்கு | கேது.இ-முச்சில்வடிவம் * |

(கிரக உலோகம்.)

| | |
|---|---|
| சூரியனுக்கு - தம்பாக்கு | சுக்கிரனுக்கு - வெள்ளி |
| சந்திரனுக்கு - ஈயம் | சனிக்கு - இரும்பு |
| செவ்வாய்க்கு- செம்பு | இராகுக்கு - கருங்கல் |
| புதனுக்கு - பித்தளை | கேதுக்கு - துருக்கல் |
| குருவுக்கு - பொன் | |

(கிரகரத்னம்.)

| | |
|---|---|
| சூரியனுக்கு - மாணிக்கம் | சந்திரனுக்கு - முத்து |
| செவ்வாய்க்கு-பவளம் | புதனுக்கு - பச்சை |
| குருவுக்கு - புஷ்பராகம் | சுக்கிரனுக்கு - வைரம் |
| சனிக்கு - நீலம் | இராகுக்கு - கோமேதகம் |
| கேதுக்கு - வைடூரியம். | |

(கிரகதானியம்.)

| | |
|---|---|
| சூரியனுக்கு - கோதுமை | சந்திரனுக்கு- பச்சையமுது |
| செவ்வாய்க்கு- துவரை | புதனுக்கு - பச்சைப்பயறு |
| குருவுக்கு - கடலை | சுக்கிரனுக்கு - மொச்சை |
| சனிக்கு - எள் | இராகுக்கு - உழுந்து |
| கேதுக்கு - கொள். | |

(கிரகபுஷ்பம்.)

| | |
|---|---|
| சூரியனுக்கு - செந்தாமரை | சந்திரனுக்கு - வெள்ளல்லி |
| செவ்வாய்க்கு-சண்பகம் | புதனுக்கு - வெண்காந்தள் |
| குருவுக்கு - முல்லை | சுக்கிரனுக்கு-வெண்டாமரை |

சனிக்கு - கருங்குவளை இராகுக்கு- மந்தாரை *
கேதுக்கு - செவ்வல்லி - *

## கிரகசமித்து.

சூரியனுக்கு - எருக்கு சந்திரனுக்கு -முருக்கு *
செவ்வாய்க்கு - கருங்காலி புதனுக்கு - நாயுருவி *
குருவுக்கு - அரசு சுக்கிரனுக்கு- அத்தி *
சனிக்கு வன்னி இராகுக்கு - அறுகு *
கேதுக்கு - தருப்பை

## (கிரகவூண்.)

சூரியன் - செவ்வாய் சுடுகையாகப்புசிப்பர்... *
சந்திரன் - சுக்கிரன்-குரு குளிர்ச்சியாகப்புசிப்பர் *
புதன்-சனி-இராகு-கேது சீதோஷ்ணமாகப் புசிப்பர்

## (கிரகசுவை.)

சுக்கிரனுக்கும் - சந்திரனுக்கும்- குருவுக்கும்- தித்திப்பு
சூரியனுக்கு - கார்ப்பு செவ்வாய்க்குதுவர்ப்பு
புதனுக்கு - உவர்ப்பு - சனிக்கு - கைப்பு
இராகு - கேதுக்கு - புளிப்பு ... *

## (கிரகவாகனம்.)

சூ - இ - மயில்-தேர் சந் - இ நரி-முத்துவிமானம்
செ - இ - அன்னம் பு - இ குதிரை ... *
கு - இ - யானை சு - இ கருடன் ... *
சனி - இ - காகம் இராகுக்கு- ஆடு ... *
கேதுக்கு - சிங்கம் ... ... ... *

(பஞ்சபூதக்கிரகம்.)

பிரிதிவுக்கிரகம்- செவ்வாய் *
அப்புக்கிரகம் - சந்திரன் - சுக்கிரன் *
தேயுக்கிரகம் - குரு - சூரியன் *
வாயுக்கிரகம் - புதன் - *
ஆகாசக்கிரகம் - இராகு - கேது - சனி *

(கிரகதேவதை.)

குரு - சுக்கிரன்- பிரமன். *
சந்திரன் - புதன் - விஷ்ணு. *
சூரியன் - செவ்வாய்-உருத்திரன். *
சனி - அன்னியதேவதை. *

..........................

சூரியன் - சிவன். - சுக்கிரன்- வள்ளியம்மை. *
சந்திரன் - பார்வதி - சனி - இயமன் *
செவ்வாய் - கந்தச்சுவாமி இராகு- பத்திரகாளி *
புதன் - விஷ்ணு - கேது - இந்திரன் *
குரு - பிரமன் - என்பர்சிலர் *

(நவக்கிரகதேயம்.)

சூரியசந்திரர்களுக்கு, உலகெலாஞ் சொந்தம்.

இப்பரதகண்டத்தில்.

சனி - இராகுகளுக்கு,இமயமலைமுதல்-கேகயநாடு வரையிலும்.............................................*
புதனுக்கு , கேகயநாடுமுதல்-விந்தமலைவரையிலும். *
குருவுக்கு , விந்தமலைமுதல்கௌதமைநதிவரையிலும்
சுக்கிரனுக்கு,கௌதமைநதிமுதல்கிருஷ்ணாநதிவரையும்
செவ்வாய்க்கு,கிருஷ்ணாநதிமுதல்-இலங்கைவரையிலும் [ஆம்

(கிரகங்களின் ஆட்சிவீடு.)

சூரியனுக்கு. சிங்கமும்-சந்திரனுக்கு-கர்க்கடகமும் ...*
செவ்வாய்க்கு. மேஷமும்-விருச்சிகமும்................*
புதனுக்கு. மிதுனமும்-கன்னியும்.........................*
குருவுக்கு. தனுசும்-மீனமும்..............................*
சுக்கிரனுக்கு. ரிஷபமும்- துலாமும்......................*
சனிக்கு. மகரமும்-கும்பமும்...............................*
இராகுக்கு. கன்னியும்-கேதுக்கு-மீனமும் .............*
குளிகனுக்கு. மீனமும்-ஆட்சிவீடாம்.....................*

(உச்சவீடு.)

சூரியனுக்கு. மேஷமும், சந்திரனுக்கு-ரிஷபமும்......*
செவ்வாயக்கு. மகரமும், புதனுக்கு-கன்னியும்.........*
குருவுக்கு. கர்க்கடகமும், சுக்கிரனுக்கு-மீனமும்......*
சனிக்கு- துலாமும்.... ........................................*
இராகுக்கு. ரிஷபமும்-கர்க்கடகமும் ...... ............*
கேதுக்கும். குளிகனுக்கும்-விருச்சிகமும்-மகரமும் ...*
உச்சவீடாம்..........................................................*

(மூலத்திரிகோணம்.)

சூரியனுக்கு - சிங்கமும், சந்திரனுக்கு - கடகமும், செவ்வாயக்கு-மேஷமும், புதனுக்கு-கன்னியும், குருவுக்கு - தனுசும், சுக்கிரனுக்கு- துலாமும், சனிக்கும்- இராகுக்கும்-கும்பமும், கேதுக்கு-சிங்கமும், குளிகனுக்கு -மீனமும் ஆகும்.... ... ... ... ... ... ... ...*

(சாதகங்களுக்கு)

| (இராசிகளில் கிரகநட்பாக்ஷியுச்சநீச்சம்) பகை-விடுதி. | | | | | | | | | | | | | கிரக நட்பு | கிரக சமன் | கிரக பகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மே | இ | மி | க | சி | க | து | வி | த | ம | கு | மீ | | | |
| சூ | உ | | | | ஆ | | நீ | ந | | ப | ப | | சந், அ, கு. | பு. | சு, சனி. |
| சந் | | உ | | ஆ | | | | நீ | ந | | | | சூ, பு. | அ, கு, சு, ச | பகையில் |
| அ | ஆ | | | நீ | ந | | | வி | ப | உ | | ப | சூ, சந், கு. | சு, சனி | பு. |
| பு | ந | ப | வி | | | ஆ, உ | ப | | | | | நீ | சூ, சு. | அ, கு, ச. | சந் |
| கு | ப | | | உ | | | | ப | ஆ | நீ | ந | வி | சூ, சந், அ. | சனி. | பு-சு |
| சு | | வி | ப | | | நீ, ப | ஆ, ந | | | | | உ | பு, சனி. | அ, கு, | சூ. சந் |
| ச | நீ | ந | | | ப | | உ | | | வி | ஆ | | பு, சு. | கு. | சூ, சந், அ. |
| இ | ந | உ | | உ | ந | ஆ | | | | | | | | | |
| கே | | | | | | | ந | உ | | உ | ந | ஆ | | | |



அந்தந்தக்கிரகங்களின்-மூலத்திரிகோண ராசிகளுக்கு, உ, சு, ரு, அ, கூ, ம உ

ஆகிய இடங்களுக்குடையவர்களும், உச்சவீட்டுக்குடையவனும் மித்திரர்களாம். ஈங்குமூலத்திரிகோணதியாய்ச் சொன்னகணக்குகளுடைய இராசிகளிலேயே-உ-இராசிகளுக்குஒருவனே அதிபதியானல் அவன்மித்திரனுவன்; மித்திரர்களுக்குச்சொன்ன-உ-இராசிகளில்-க-உச்சராசியானுலும், உ-இராசியாதிபதியைப்போலவே மித்திரனுவான். ஒருஇராசிக்குடையவன்சமன். மற்ற-ரு,சா,எ,ப,மக-ஆகியஇடங்களுக்கு உடையவர்கள்சத்துரு ஆவார்கள்.

நட்டமுட்டிசிந்தனைக்கு நட்பாக்ஷியுச்சம் நீச்சம்பகை

| | மே | இ | மி | க | சி | க | து | வி | த | ம | கு | மீ | கிரக நட்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குரு | உ | | | | ஆ | | நீ | | ந | | | ந | கு. |
| சந | | உ | ந | ஆ | | ந | | நீ | ந | | | ந | பு. கு |
| அ | ஆ | ந | ந | நீ | | ந | ந | ஆ | | உ | | | பு. சு |
| பு | ந | ந | ஆ | ந | | ஆ,உ | ந | ந | ந | ந | ந | நீ | சந்,அ,கு,சு,ச |
| சு | | ந | ந | உ | ந | ந | ந | | ஆ | நீ | ந | ஆ | கு,சந்,பு,சு. |
| ச | ந | ஆ | ந | நீ | | | ஆ | ந | ந | ந | ந | உ | அ,பு,கு,ச, |
| சனி | நீ | ந | ந | | | ந | உ | | ந | ஆ | ஆ | ந | பு, கு, சு |
| இரா | ப | நீ | ந | ப | ப | ந | ந | உ | ந | ந | ஆ | ந | |
| கே | | | | | | | | | | | | | |

சொல்லாத மற்றவர் பகையென்றறிக இவர்கள் ஆட்சிவீடுகளேபகைவீடுகளாம்.

ஆ-ஆக்ஷி. உ-உச்சம். ந-நட்பு. நீ-நீச்சம். ப-பகை. வி-விடுதிவீடு

(தூமாதிகிரகங்களின்உச்சவீடு.)

தூமனுக்கும் - தூமகேதுக்கும் சிங்கமும், இந்திரனுக்கு விருச்சிகமும்- தனுசும்,பரிவேடத்துக்கு மிதுனமும், விதிபாதனுக்குக் கும்பமும், நுட்பத்துக்குக்கும்பமும் உச்சவீடாம்.

(நீசபங்கராஜயோகம்.)

நீச்சவீடு-நீச்சரிருந்த வீட்டுக்குடையோன் ஆட்சியுச்சம்பெற்றுவது, சந்திரகேந்திரம்பெற்றுவது,இருக்கின் நீச்சம் பங்கமாய் இராஜயோகம் உண்டாகும்.

[கவி.)

நீசனிருந்தில்லோ னிலையுச்சமெய்திடினு
மேசில்சசிகேந்திரத்திலெய்திட்டாற் - பூசிதமாய்த்
தேசமெங்குங்கீர்த்தித் திராகடலோடுங்கப்ப
னேசமுடனுள்வானிலம்.

## அதியுச்சம்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உச்சராசிநிலைய ௩0-பங்காகு. | கு | மே | க0 | பா-வ-உச்ச | க0-ம் | பா-பரமோ | உ0 | பா-மித் | பாக | * சுவேக்ஷத்திரம். |
| | சந் | இட | ௩ | ,, | ௩-ம் | ,, | உஎ | மூல் | | |
| | செ | மக | உஅ | ,, | உஅ-ம் | ,, | உ | மித் | | |
| | * பு | கன் | கரு | ,, | கரு-ம் | ,, | ரு | மூல | க0 * | |
| | கு | கட | ரு | ,, | ரு-ம் | ,, | உரு | மித் | | |
| | சு | மீன | உஎ | ,, | உஎ-ம் | ,, | ௩ | மித் | | |
| | ச | து | உ0 | ,, | உ0-ம் | ,, | க0 | மித் | | |
| நீச்சராசிநிலைய ௩0-பங்காகு. | கு | து | க0 | நீச்சம் | க0-ம் | பரமநீச்ச | உ0 | பா-சத்துரு | | |
| | சந் | விரு | ௩ | ,, | ௩-ம் | ,, | உஎ | ,, | | |
| | செ | கர்க் | உஅ | ,, | உஅ-ம் | ,, | உ | ,, | | |
| | பு | மீன | கரு | ,, | கரு-ம் | ,, | கரு | ,, | | |
| | கு | மகர | ரு | ,, | ரு-ம் | ,, | உரு | ,, | | |
| | சு | கன் | உஎ | ,, | உஎ-ம் | ,, | ௩. | ,, | | |
| | ச | மே | உ0 | ,, | உ0-ம் | ,, | க0 | ,, | | |
| மூலத்திரிகோணராசிநிலைய ௩0-பங்காகு | கு | சிங்கம் | உ0 | பா-வளா | | மூல | க0 | பா-சு-க்ஷேத் | | |
| | சந் | விருஷ | ௩ | ,, | | உச்ச | உஎ | மூலத்திரி | | |
| | செ | மேஷ | கஉ | ,, | | மூல | கஅ | சு-க்ஷேத் | | |
| | பு | கன்னி | கரு | உச்சம் | ரு | மூல | க0 | சு-க்ஷேத் | | |
| | கு | தனுசு | க0 | பாவளா | | மூல | உ0 | சு-க்ஷேத் | | |
| | சு | துலா | கரு | ,, | | மூல | கரு | சு-க்ஷேத் | | |
| | ச | கும்ப | உ0 | ,, | | மூல | க0 | சு-க்ஷேத் | | |

(கிரகாங்கங்கள்.)

செவாய்க்கு - தலை.—சுக்கிரனுக்கு - முகம். ... *
புதனுக்கு - கழுத்து.—சந்திரனுக்கு - தோள். ... *
சூரியனுக்கு - மார்பு.—குருவுக்கு - வயிறு. ... ... *
சனிக்கு - தொடை. —இராகுக்கு - முழங்கால். ... *
கேதுக்கு - உள்ளங்கால்.—ஆகும். ... ... ... *

(இராசி - கிரக பார்வை.)

திரமுஞ்சரமுமாறிப்பார்க்கும்
உபயம் - உபயத்தைப்பார்க்கும்.

குரு-ரு-எ-கூ-ஐயும், சனி-ங-எ-ய-ஐயும், செவ்வாய் - ச-எ-அ-ஐயும், குளிகன்-எ-யஉ-ஐயும்,மற்றக்கிரகங்கள்-எ-ஐயும் பார்ப்பர். ... ... ... ... *

(பார்வையினளவு.)

க-எ-முழுப்பார்வை. அ-கூ-முக்காற்பார்வை. ரு-அரைப்பார்வை. ச-ய-காற்பார்வை. ங-யக-அரைக்காற்பார்வை.

(கவி.)

சேருமுதயமேழிடங்கள்முழுநோக்கொன்பா னெட்டுமெ ணா, பாரீரைந்தோவரைநோக்காம்பத்து நான்குங்காலே ணக்காம், ஆருமூன்றும்பன்னொன்றுமரைக்காலேணக்காமா றுடனே, நாரியிரண்டும் பன்னிரண்டும் நாட்டமில்லைந வகோட்கே.

(கவி.)

சேய்நான்கேழெட்டினையுஞ்சீவனைந்தேழொன்பதையும்
ஏய்சனிமூன்றேழுடனீரைந்தினையுந் - தூய்குளிகன் *
பன்னொண்டோடேழினையும்பாம்பேழீரைந்தைமற்றத்*
துன்னுகோளேழினை நோக்கும். ... ... *

இடவிவரங்கள்

கேந்திரம்-பணபரம்-ஆபோக்கிலீபம் - மறைவு
(திரிகோணம் - உபஜெயம்சஷ்டாஷ்டம்.)

க-ச-எ-ய-கேந்திரம்,உ-ரு-அ-யக-பணபரம்,ங-சு-கூ-யஉ
ஆபோக்கிலீபம்,ங-சு-அ-யஉ-மறைவு,ரு-கூ-திரிகோண
ம்,ங-சு-ய-யக-உபஜெயம்,சு-அ-சஷ்டாஷ்டம். ... *

(யஉ-பாவகவிவரங்கள்.)

க. இலக்கணம் - உதயம் - கீர்த்தி - மூர்த்தி - தேகம்- நி
றம் - தலை. ... ... ... ... ... *
உ. நேத்திரம்-வாக்கு-தனம்-முகம்-குடும்பம் ... ...*
ங. சகோதரம்-வெற்றி-கேள்வி-காது-தைரியம்-அடிமை
ச. தாய்-வாகனம்-பூமி-பந்து -சுகம் - கல்வி - நீர் - வீடு-
வியாபாரம்... ... ... ... ... *
ரு. புதல்வர் - உளம்-புத்தி-முத்தி-விஸ்தாரம் - மானம்
பிதா-மாதுலன் பிரபுத்துவம்... ... ... *
சு. சத்துரு - ரோகம் - விரணம் - ரணம் - சோரம் - சி
றை - பிரதாபம்... ... ... ... ...*

எ. களத்திரம்-காமம்-மாரகம்... ... ... *
அ. ஆயுள்-தீர்க்கவியாதி-மரணம்-அபமிருத்தியு... *
௯. பிதா-தருமம்-பாக்கியம்-குரு... ... ... *
௰. கருமம்-ஜீவனம்-ஆசாரம்... ... ... *
௰க. மூத்தோன்-இலாபம்... ... ... ... *
௰உ. விரயம் - சயனம் - மோக்ஷம் - அந்தியகாலநோய்

விசேடபாவகங்களைப் பெருநூலில் அறிக.

(காரகர்கள்.)

சூரியன்-பிதுர்காரகன் - சரீரகாரகன், சந்திரன்-மாதுர் காரகன், செவ்வாய்-சகோதரகாரகன், புதன்-வித்தியாகாரகன், குரு-புத்திரகாரகன், சுக்கிரன்-களத்திரகாரகன்-வாகனகாரகன், சனி-ஆயுஷ்காரகன், இராகு-பிதாமககாரகன்- யோககாரகன்- போககாரகன், கேது-மாதாமககாரகன், ஞானகாரகன், மோக்ஷகாரகன்: இரவில்-சனி பிதுர்காரகன். பகலில்சூரியன்பிதுர்காரகன். இரவில்-சந்திரன் - மாதுர்காரகன்-பகலில் - சுக்கிரன்மாதுர்காரகன் ... *

விசேடகாரகத்துவங்கள்பெருநூலலறிக.

(இராசிகளிற்கிரகநிற்குங்காலம்)

சூரியன், சுக்கிரன், புதன்-௴-க-ம்; செவ்வாய்௴ -க௨-ம்; குரு-௵-க-ம்; சனி-௵-உ௨-ம்; இராகு கேது-தனித்தனி ௵ க௨-ம்; சந்திரன்நாள்- உவ-ம்-ஆக-நிற்கும்- ... *

(கவி.)

குறித்தகதிரோன்புகர்புந்தி குலவிரிற்கு மொருமாதம்*
செறுத்தமதிநாளிரண்டேகால் செவ்வாய்மாதமொன்ற
ரையாம், கறுத்தசனியாண்டிரண்டரையாங்கனகஞேரா
ண்டர்விரண்டும், நிறுத்தவாண்டொன்றரையாக விராசி
யொன்றில் நின்றிடுமே ... ... ... ..*

(கிரகவலிகாலம்.)

செவ்வாய்-சனி-சந்திரனுக்கு இரவிலும், சூரியன்-குரு-சு
க்கிரருக்கு பகலிலும், புதனுக்கு எப்போதும் பலமுண்
டாகும். ... ... ... ... ... *
இப்படியே அந்தந்தக் கிரகங்களுக்குச் சொந்தவாரங்க
ளிலும், மாதங்களிலும், ஓரைகளிலும், பலமுண்டாகும்*
லக்கினத்துக்கு-௬-ஆம்-அதிபதி-பலவான் ... *
௬-இ-ஏழாம் அதிபதி பலவான்... ... ... *
௭-இ-௰-ஆம்பதி பலவான்... ... ... ...*
௩-இ-௬-ஆம்-அதிபதி பலவான் - ௬-இ-௰௧-ஆம்- அதிப
திபலவானும் ... ... ... ... ...*
கேந்திர ஆதிபத்தியதோஷம்-பாபர்க்கில்லைசுபர்க்குண்டு

கேந்திரதோஷம் - பாபர்க்குண்டு-சுபர்க்கில்லை.

(நட்புவீடு.)

சூரியனுக்கு - தனுசும், மீனமும்; ... ... ... ...*
சந்திரனுக்கு-கன்னியும், தனுசும், மீனமும்; [மும்;
செவ்வாய்க்கு-ரிஷபமும், மிதுனமும், கன்னியும், துலா

புதனுக்கு - மேஷமும், ரிஷபமும், கர்க்கடகமும், துலா
மும், விருச்சிகமும், மகரமும்,கும்பமும்;... ... ... *
குருவுக்கு-ரிஷபமும், மிதுனமும், சிங்கமும், கன்னியு
ம், துலாமும், கும்பமும்; ... ... ... *
சுக்கிரனுக்கு-மேஷமும்,மிதுனமும்,விருச்சிகமும், தனு
சும், மகரமும், கும்பமும்; ... ... ... ...*
சனிக்கு - ரிஷபமும், மிதுனமும், கன்னியும், தனுசும்,
இராகுக்கு - மேஷமும், சிங்கமும்; ... ... [மீனமும்;
கேதுக்கும்-குளிகனுக்கும்-துலாமும்,கும்பமும் ... *
நட்புவீடுகளாம் ... ... ... ... ... *

(பகைவீடு.)

சூரியனுக்கு - ரிஷபமும், மிதுனமும், கர்க்கடகமும்,
கன்னியும், விருச்சிகமும், மகரமும்,கும்பமும்; ... ...*
சந்திரனுக்கு - மேஷமும், மிதுனமும், சிங்கமும், துலா
மும், மகரமும், கும்பமும்; ... ... ...*
செவ்வாய்க்கு-சிங்கமும், தனுசும், கும்பமும், மீனமும்;
புதனுக்கு-சிங்கமும், தனுசும் ; ... ... *
குருவுக்கு-மேஷமும்; விருச்சிகமும்; ... ... *
சுக்கிரனுக்கு-கர்க்கடகமும், சிங்கமும்; ... ...*
சனிக்கு-கர்க்கடகமும், சிங்கமும். விருச்சிகமும்; ...*
இராகுக்கு-மிதுனமும், துலாமும், தனுசும், கும்பமும்,
மீனமும்; ... ... ... ... ... *
கேதுக்கும் - குளிகனுக்கும், மேஷமும், மிதுனமும், சி
ங்கமும், கன்னியும், தனுசும் பகைவீடாம் ... ... *

(இராசிகளுக்குக்கிரகபலன்.)

| ராசி | பாபர் | சுபர் | மாரகா | யோகர் |
|---|---|---|---|---|
| மே | ச-சு-பு | கு-ர | ச-பு | ச-சம்ம-கு |
| இ | கு-சு-ம | ச-ர | கு-சு-ம | சனி |
| மி | செ-கு-ர | சு | செ-கு-ர | ௦ |
| க | சு-ச-ம | செ-கு | சு-ச-ம | செ |
| சி | சு-பு | செ | சு-பு | செ |
| க | செ-கு-ம | சு | செ-கு-ம | சு-பு |
| து | கு-ர-செ | ச-பு | கு-ர-செ | ம-பு |
| வி | பு-செ-சு | ம | பு-செ-சு | ர-ம |
| த | சு | செ-ர | ம-சு-கு-ச | ர-பு |
| ம | கு-ம-செ | சு-பு | கு-ம-செ-ர | சு |
| கு | கு-ம-செ | சு | ம-செ-ர-பு-ச | சு |
| மீ | ச-சு-பு-ர | செ-ம | ச-சு-பு-ர | செ-கு |

(மறுமையிலடையுமிடம்.)

௰உ-ஆம் அதிபதியோடு-குருவாவது சுக்கிரனாவது இவ் விருவருமாவது கூடின் தெய்வலோகம்; சூரியன் கூடில் இராஜலோகம்; சந்திரன் கூடில் பிதுர்லோகம்; செவ்வாய் கூடில் வீரசொர்க்கம்; சனியாவது பாம்புகளாவது - சனியுடன் பாம்புகளிலொருவருமாயாவது கூடின் இயமலோகம்; புதன் கூடின் வேண்டுமென்று விரும்பு மிடங்களில் சேர்வர்.

(கிரகநித்தியகதி.)

| கிரகம் | பாகை | கலை | விகலை |
|---|---|---|---|
| சூரியன் | 0 | ரு௯ | அ |
| சந்திரன் | ௰௩ | ௰ | ௩ரு |
| செவ்வாய் | 0 | ௩க | உ௬ |
| புதன் | ச | ரு | ௩௩ |
| குரு | 0 | ச | ரு௯ |
| சுக்கிரன் | க | ௩௬ | அ |
| சனி | 0 | உ | 0 |
| இராகு | 0 | ௩ | ௰க |
| துங்கன் | 0 | ௬ | ச௰க |

இந்த நித்தியகதிகளை ஒரோஜாதியாக விகலையாக்கி உதயாதி ஜனனகாலவரைகழிந்த நாழிகை விநாடிகளை ஒரோஜாதியாக - விநாடியாக்கி ஒன்றுக்கொன்று பெருக்கினபெருக்குத்தொகை-விதர்ப்பரைகளாகும்.இதைமேலினமாக மாற்றிக் கண்டராசிபாகைகலைகளை கிரகஸ்புடஞ்செய்கையில் அந்தந்தக் கிரகங்களின் ஸ்புடங்களில். மூலத்துருவங்கூட்டுவதற்குமுன்கூட்டவும்.

விதர்ப்பரை-௬௰-இ-தர்ப்பரை-க, தாப்பரை-௬௰-இ-விகலை-க, விகலை-௬௰-இ-கலை-க, கலை-௬௰-இ-பாகை-க, பாகை-௩௰-இ-இராசி-க, எனவறிக.

(கிரகங்களின் பலகாலமுமிடமும்.)

அசுரர்க்கு தக்ஷணாயனத்திலும் அமரபக்ஷத்திலும், சுரர்க்கு-உத்தராயணத்திலும் பூர்வ்வபக்கத்திலும் பலம்

புதனும் - குருவும் - லக்கினத்திலும், சுக்கிரனுஞ் சந்திரனும்-நான்கிலும், சனி-இராகு- ஏழிலும், சூரியன்-செவ்வாய்-பத்திலும் வலியராம்.

ஒன்று-உதயம்,நான்கு-நீர்க்கீழ்,ஏழு-அத்தமனம்,பத்து-உச்சம்.

புதனுக்குச்செவ்வாய்வலியன்,செவ்வாய்க்குச்சனி வலியன், சனிக்குக் குருவலியன், குருவுக்குச் சுக்கிரன்வலியன், சுக்கிரனுக்குச் சந்திரன்வலியன்,சந்திரனுக்குச்சூரியன்வலியன் சூரியனுக்கு இராகுவலியனும்.

(கிரகங்களின் சுபக்கணக்கும் பாபக்கணக்கும்.)

| | |
|---|---|
| பூ-சந்திரன்- குரு-முழுச்சுபர் | சனி இராகு, முழுப்பாவர் |
| சுக்கிரன் முக்காற் சுபன் | செவ்வாய்முக்காற்பாவி |
| புதன் அரைச் சுபன் | சூரியன் அரைப்பாவி, |
| குறைந்தசந்திரன் காற்சுபன் | பாம்புகளோடுகூடிய புதனு மதியும் காற்பாவர் |
| சந்திரன்அமாவாசையிற்புதனோடுகூடின் முக்காற்சுபன் | |

இராகுவோடுகூடிய குருமுழுப்பாவியாம்.

(நட்பாக்ஷியுச்சபலன்.)

உச்சம் - கவ, கேந்திரம் - க, ஆட்சி-ஞ, நட்பு-உ, நீச்சம்-வ பலமாகும்.

(திசைகள்விபரம்.)

(க) மகாதிசை.

அச்சுவினி-மகம்-மூலம்- கேதுதிசை ௵- எ
பரணி-பூரம்-பூராடம் சுக்கிரதிசை- ௵உ௰
கார்த்திகை-உத்திரம்-உத்திராடம்- சூரியதிசை ௵ சு

உரோகணி-அஸ்தம்-திருவோணம் சந்திரதிசை ௵ ௰
மிருகசிரம்-சித்திரை-அவிட்டம்—குசன்திசை ௵ ௭
திருவாதிரை-சோதி-சதயம்—இராகுதிசை ௵ ௰௮
புனர்பூசம்-விசாகம்-பூரட்டாதி—குருதிசை ௵ ௰௬
பூசம்-அநுஷம்,உத்திரட்டாதி—சனிதிசை ௵ ௰௯
ஆயிலியம்-கேட்டை-ரேவதி—புதன்திசை ௵ ௰௭
ஆக மகாதிசை-௯-இ- ௵ ௱௨௰

(௨) உற்பன்னதிசை—ஜென்மநட்சத்திரத்துக்கு-௫-வது நட்சத்திரதிசை
(௩) மிருத்தியுதிசை—௩-வது-நட்சத்திரதிசை
(௪) பிராணதிசை — சூரியஸ்புடத்தில்கண்டநட்சத்திர [திசை
(௫) ஆதானதிசை—௮-வது-நட்சத்திரதிசை
(௬) வாமதிசை—இடமாக-௪-வது-நட்சத்திரதிசை
(௭) உடுதிசை—சந்திரசூரியருடையஸ்புடங்களைக் கூட்டிக்கண்ட நட்சத்திரதிசை
(௮) நிரியாணதிசை— சனிஸ்புடத்திற்கண்டநட்சத்திர [திசை
(௯) மகாபிராணதிசை— சந்திரசூரிய-லக்கினஸ் புடங்களைக்கூட்டிக் கண்டநட்சத்திரதிசை

(௰) குளிகநிரியாணதிசை-குளிகஸ்புடத்தை-௯-ல்பெருக்கி விகலை-௬௰-இ-க-ம்,கலை-௬௰-இ-க-ம், பாகை - ௩௰-இ-கமாகக் கோடிகூட்டி- இராசித் தானத்தில்நின்ற இராசிகளை ௰௨ல்-கழித்து-இராசி பாகை கலை விகலையாக நிறுத்திச் சந்திரஸ்புடங்கூட்டிக் கண்ட நக்ஷத்திரதிசையுமாக மகாதிசைபோலக்கொள்க.

(௰க) காலசக்கரதிசை.

| | |
|---|---|
| மேஷ-விருச்சிக-செவ்வாய்திசை- | ௵ எ |
| ரிஷப-துலா-சுக்கிரதிசை- | ௵ ௰சு |
| மிதுன-கன்னி-புதன்-திசை | ௵ கூ |
| கர்க்கடக-சந்திரதிசை | ௵ உக |
| சிங்கசூரியதிசை | ௵ ரு |
| தனுசு-மீன-குருதிசை | ௵ ௰ |
| மகர-கும்ப-சனிதிசை ௵ ச - | ஆ ௵ ௱௰அ. |

(வலவோட்டுநட்சத்திரங்கள்)

அச்சுவினி-பரணி-கார்த்திகை - புநர்பூசம்-பூசம்- ஆயிலியம்-அஸ்தம்-சித்திரை-சோதி-மூலம்-பூராடம்- உத்திராடம்-பூரட்டாதி-உத்திரட்டாதி-ரேவதி ஆ ௰ரு

(இடவோட்டுநட்சத்திரங்கள்.)

உரோகணி மிருகசிரம்-திருவாதிரை-மகம் பூரம்-உத்திரம்-விசாகம்-அனுஷம்- கேட்டை-திருவோணம் அவிட்டம்-சதயம் ஆ ௰உ

வலவோட்டு நட்சத்திரங்கள் மூன்றின்பாதம் - ௰உ-இம்-மேஷமுதல் வலமாகவும்

இடவோட்டு நட்சத்திரங்கள் மூன்றின்பாதம் - ௰உ இ-ம்-விருச்சிகமுதல்—இடமாகவும்கொள்ளவேண்டும்

(காலசக்கரபுத்திகளின்விவரம்.)

வலவோட்டு நக்ஷத்திரங்களுள் அச்சுவினி -கார்த்திகை-புநர்பூசம்-ஆயிலியம்- அஸ்தம் சோதி-மூலம்- உத்தி

ராட்டு-பூரட்டாதி - ரேவதி-என்னும் பத்துநக்ஷத்திரங்களுக்கும்

க—பாதம் - மேஷம் - ரிஷபம் மிதுனம் - கர்க்கடகம் சிங்கம்-கன்னி- துலாம்-விருச்சிகம்-தனுசு- கூ-இ-(ஷு) ா.

உ—பாதம்-மகரம்-கும்பம்-மீனம்-விருச்சிகம்-துலாம் கன்னி-கர்க்கடகம்-சிங்கம்- மிதுனம் - கூ-இ- (ஷு)-அரு.

ந—பாதம்-ரிஷபம் - மேஷம்- மீனம்-கும்பம - மகரம் தனுசு-மேஷம்- ரிஷபம் - மிதுனம் - கூ - இ - (ஷு) அந.

ச—பாதம்-கர்க்கடகம்-சிங்கம்-கன்னி- துலாம்-விருச்சிகம்-தனுசு-மகரம்- கும்பம் - மீனம் - கூ-இ-(ஷு)-அச.

(இதுவும் வலவோட்டுநாள்களுள்)

பரணி-பூசம்-சித்திரை- பூராடம் - உத்திரட்டாதி யென்னும்-ஐந்து நட்சத்திரங்களுக்கும்

க—பாதம்- விருச்சிகம் - துலாம்-கன்னி - கர்க்கடகம் சிங்கம்-மிதுனம்-ரிஷபம்-மேஷம்-மீனம்-கூ-இ - (ஷு) ா.

உ—பாதம்-கும்பம்-மகரம் - தனுசு-மேஷம் - ரிஷபம் மிதுனம்-கர்க்கடகம்-சிங்கம் - கன்னி-கூ - இ (ஷு) அரு.

ந—பாதம்-துலாம்-விருச்சிகம்-தனுசு-மகரம்-கும்பம் மீனம்-விருச்சிகம் - துலாம் - கன்னி - கூ -இ (ஷு) அந.

ச—பாதம்-கர்க்கடகம்-சிங்கம் -மிதுனம்-ரிஷபம்-மேஷம்-மீனம்-கும்பம்- மகரம் - தனுசு - கூ - இ (ஷு) அச.

(இடவோட்டுநாள்களுள்.)

உரோகணி மகம் விசாகம் திருவோணம் என்னும் நான்கு நட்சத்திரங்களுக்கும்

க—பாதம்-தனுசு-மகரம்-கும்பம்-மீனம்-மேஷம்-ரிஷபம்-மிதுனம் - சிங்கம்-கர்க்கடகம் - கூ - இ - ஷ அசுா.

உ—பாதம்-கன்னி-துலாம்-விருச்சிகம்-மீனம்-கும்பம் மகரம்-தனுசு-விருச்சிகம் - துலாம் - கூ - இ ஷ அரு.

ரு—பாதம்-கன்னி-சிங்கம்-கர்க்கடகம்-மிதுனம்-ரிஷபம் - மேஷம் தனுசு மகரம் - கும்பம்- கூ - இ ஷ அரு.

ச—பாதம்-மீனம்-மேஷம்-ரிஷபம்-மிதுனம்-சிங்கம்-கர்க்கடகம்-கன்னி-துலாம் - விருச்சிகம்- கூ - இ ஷ ா.

(இதுவும்இடவோட்டுநாள்களுள்.)

மிருகசிரம்-திருவாதிரை-பூரம்-உத்திரம்-அனுஷம்-கேட்டை-அவிட்டம்-சதயம் என்னும் எட்டு நட்சத்திரங்களுக்கும்.

க—பாதம்மீனம்-கும்பம்-மகரம்-தனுசு-விருச்சிகம்-துலாம் - கன்னி - சிங்கம்- கர்க்கடகம் - கூ - இ ஷ அசுா.

உ—பாதம்-மிதுனம்-ரிஷபம் - மேஷம்-தனுசு-மகரம் கும்பம்-மீனம் - மேஷம் - ரிஷபம் - கூ - இ ஷ அரு.

ரு—பாதம்-மிதுனம்-சிங்கம்-கர்க்கடகம்-கன்னி-துலாம்-விருச்சிகம்-மீனம் - கும்பம்- மகரம் கூ-இ - ஷ அரு.

ச—பாதம்-தனுசு-விருச்சிகம்-துலாம்- கன்னி-சிங்கம் கர்க்கடகம்-மிதுனம்-ரிஷபம் - மேஷம் - கூ - இ -ஷா.

இவ்வாறு அந்தந்தராசியின் அதிபதிகளுக்குக் காலசக்கிரதிசைக்குச் சொல்லியிருக்கிற வருஷக் கணக்கின்படி கொள்ளவேண்டும்.

## மகாதிசைக்குப்போதகன்முதலியோர்.

| திசை | போதகன் | வேதகன் | பாசகன் | காரகன் |
|---|---|---|---|---|
| சூ-திசை-இ | செவ்வாய | சுக்கிரன் | சனி | குரு |
| சந்-திசை-இ | செவ்வாய் | சூரியன் | சுக்கிரன் | சனி |
| செ-திசை-இ | சந்திரன் | புதன் | சூரியன் | சனி |
| பு-திசை-இ | குரு | செவ்வாய் | சந்திரன் | சுக்கிர |
| கு-திசை-இ | செவ்வாய் | சூரியன் | சனி | சந்திர |
| சு-திசை-இ | குரு | சனி | புதன் | சூரியன் |
| ச-திசை-இ | சந்திரன் | செவ்வாய் | சுக்கிரன் | குரு |

இராகுகேதுகளுக்கு இவையில்லையாம்.

(கவி.)

கூறுபலனைக் கொடுவென்பான் போதகனும்
வேறுபண்ணித் தட்டுவிப்பான் வேதகனும்-தேறுபலன்
கூட்டுவிப்பான் பாசகனுங் கோலமகாதிசைக்கே
ஈட்டுபொருள் காரகனீவான்.

(கோசாரத்தில்பார்வைகாலம்.)

சூரியனுக்கு - நாள்-ரு, புதனுக்கும், சுக்கிரனுக்கும்-தனித்தனி-நாள்-எ, செவ்வாய்க்குநாள்-அ, குருவுக்கு-மீ-உ, இராகுகேதுவுக்கு-தனித்தனிமீ ௩, சனிக்குமீ ௬, சந்திரனுக்கு-நாழிகை-௩.

(கவி.)

கோசாரப்பார்வைபுந்திபுகர்க்குநாளேழதாகும்
காசுறுசேய்க்கொட்டுக்கதிர்க்குநாளைந்தாகும்

மாசில்பொன்னிரண்டுதிங்கள்மாசுணமதிமூன்ருகும்
வீசுசுன்மாதமாரும்விரிதிங்கள்மூன்றுகன்னல்.

(கோசாரபலன்.)

சூரியன்-க, ௬, ரு, எ, அ, ௯, ௰௨, இந்த இடங்களில்நின்ருல் நல்லபல்லேக்கொடான்.

(கவி.)

சூரியஜன்மந்தன்னிற்றுலங்கியநாலேழைந்தில்
பாரியவெட்டொன்பானிற் பகர்ந்தபன்னிரண்டினின்ரு [ல்
காரியக்கேடலேச்சல்கண்வலிதலேநோக்காடு
வீரியவெறுவீடாக்கிவீடுவிட்டோட்டுமன்றே. (க)

சந்திரன்-௨, ௬, ௫, அ, ௰௨-ல், நின்ருல்நல்லபலன்கொடான்

(கவி.)

பனிமதியிரண்டிஞன்கிற்பரிவிலாவாறிலெட்டில்
கனமறுபன்னிரண்டில்கதிக்கவீற்றிருந்தாஞகில்
இனியநற்பெண்டீர்மக்களியல்பறக்கேடுதுக்கம்
தனமதைச்செலவழித்தல்தான்கொடுத்திடுவன்ருனே.)

செவ்வாய்-க, ௨, ௬, அ, ௰, ௰௨-ல், நின்ருல் நல்லபலன் கொடான்

(கவி.)

நிலமகன்ஜன்மந்தன்னினிலவியவிரண்டிஞன்கில்
நலமறுமெட்டிற்பத்திஞட்டுபன்னிரண்டினின்ருல்

ப்லவிதக்கேடுபெண்டிர்பதிபொருஞசம்வெப்பு
குலவியவாயுதத்தாற்குணகுலப்பதியும்போக்கும். (௩)

புதன்-௧, ௩, ௫, ௭, ௮, ௯, ௰௨-ல், நின்றால் நல்லபலனை
க்கொடான்.

(கவி.)

புந்திதான்ஜன்மந்தன்னிற்புதியமூன்றைந்திலேழில்
உந்தியவெட்டொன்பானிலு கந்தபன்னிரண்டினின்றால்
சிந்தைபேதகமாம்வித்தைதிரவியங்களவுபோகும்
கொந்தலர்குழலாள்சேதங்கோளினுல்குற்றமாமே. (௪)

குரு-௧,௩,௪,௮,௰,௰௨-ல், நின்றால்நல்லபலன்கொடான்.

(கவி.)

பொன்னவன்ஜன்மந்தன்னிற்பொருந்தியமூன்றினுன்கில்
வின்னமாமெட்டிற்பத்தில்விளங்குபன்னிரண்டினின்று
ல்,தன்னுடன்பிறந்தார்குற்றந்தானியமாடுமக்கள்,வின்ன
மாம்பதியும்விட்டுவெறுப்பதாயிருக்குந்தானே *

ஜன்மராமர்வனத்திலேசீதையைச்சிறைவைத்ததும் [ம்
தீதிலாதொருமூன்றிலேதுரியோதனன்படைமாண்டது
இன்மையெட்டினில் வாலிபட்டமிழந்துபோம்படியான
தும், ஈசனொருபத்திலேதலையோட்டிலேயிரந்துண்ட
தும், தன்மபுத்திரர்நாலிலேவனவாசமப்படிப்போனது
ம், சத்தியமாமுனியாறிலேயிருகாலிலேதளைபூண்டதும்
வன்மையுற்றிடிராவணன்றன்முடி பன்னிரண்டினில் வீ

ழ்ந்ததும், மன்னுமாகுருசாரிம்மாமனைவர்ழ்விலாதுறு மென்பவே. *

சுக்கிரன்-௩,௬,௮,௰௨-ல்,நின்றால் நல்லபலன்கொடான்.

(கவி.)

சுக்கிரன்மூன்றிலாறில் துலங்குமெட்டாமீராறில்
உக்கிரமாகவேதானுகந்தநட்பின்றிநின்றால்
மக்கள்நல்மாடுபெண்டிர்வரிசையாயுதாத்தாற்கேடு
சிக்கியபொருள்களுசந்திரவியங்களவுபோமே. (௬)

சனி - ௧, ௨,௪,௫,௮,௰,௰௨ - ல்,நின்றால்நல்லபலன்கொடான்.

(கவி.)

மூடவன்றான்ஜன்மமைந்தில்முன்னியவிரண்டுநான்கில்
திடமறுமெட்டிற்பத்திற்சேர்ந்தபன்னிரண்டினின்றால்
உடன்மன்னர்பொருள் மாடாடுபெண்டணிமக்கள்சேத
அடுமையும்பதியும்விட்டேயரசராலலைச்சலாமே. () [ம்

இராகு, கேது, ௧, ௩, ௪, ௬, ௮, ௰, ௰௨-ல், நின்றால்நல்லபலன்கொடார்.

(கவி,)

இராகுவுங்கொடியகேதுநலமிலாஜன்மந்தன்னில்
ஏகமாமூன்றிநான்கிலெழிலாறிலெட்டிற்பத்தில்

வேகமாம்பன்னிரண்டில்வேண்டியேவந்துநின்றால்
பாகுநேர்மொழியாள்மக்கள்பதியுடனழியுந்தானே. (அ)

(இதுவுங்கோசாரபலன்.)

(பலர்ஒப்புக்கொண்ட ஷ பலன்கள்.)

சூரியன்-ஙு-சு-ய - யக-ல்-வரின்-சுபபலன்.

(கவி.)

நாயிறுமூன்றுமாறு நற்பதினொன்றும்பத்து... ... ❋
ஏயுறுமிவ்விடங்களிருந்திடிற்செல்வமுண்டாம் ... ❋
ஈய்தலுமிதக்கமுண்டாமெதிரியைவெல்லலாகும் ❋
சேயதுதரிக்கும்பேறுந்தீராநோய்தீருந்தானே ... ❋

சூரியன்-க-உ-ச- ரு-எ-அ-கூ - யஉ-ல்-வரின்-துர்ப்பலன்.

(கவி.)

சூரியன்சென்மமைந்திற் றுலங்கியநான்கில்ரெண்டில்
பாரியவேழெட்டொன்பான்,பகர்ந்தபன்னிரண்டினின்று
காரியக்கேடலைச்சற்கனவுகண்தலைநோயுண்டாம் [ல்
வீரியவெதுப்புநோய்கள்வீடுவிட்டோட்டுமன்றே. (உ)

சந்திரன்-க-ங-சு-எ-ய-யக-ல்-வரின்-சுபப்பலன்.

(கவி.)

சந்திரன்மூன்றொன்றாறுஞ்சார்பத்துபன்னொன்றேழும்
இந்திரன்போலவாழ்வனெதிரிமார்பாணியாவன் ... ❋
தந்திரவாதியாவன்சந்தானபாக்கியனாவன் ... ...❋
மந்திரவாதியாவன்வயித்தியவாதனாமே... ... (ங)

சந்திரன்-உ-ச-ரு-அ-கூ-யஉ-ல்-வரின்-துர்ப்பலன்.

(கவி.)

பிறைபணிரொண்டொன்பானெட் டிரண்டுநான்கைந்தினி
ற்கின்,சிறையுளான்கிலேசமுள்ளான் திருடுவன் தீங்குசெ
ய்வன், நிறையிலானன்றியில்லானிட்டேரனீதியில்லான்,
முறையிலான்வணக்கமில்லான் மூதேவிக்குறையுளாவா

செவ்வாய்-ந-கூ-யக-ல்-வரின்-சுபபலன். [ன்.

(கவி,)

த்ண்பதினொன்றுமாறுந்தன்னுடன்மூன்றும்வீட்டில் *
திண்குசனிற்கிற்றீர்க்கவயதுடனீகையுள்ளன் ... [ம்
பெண்கலியாணமுண்டாம் பிள்ளைப்பாக்கியமுண்டாகு
மண்மனைபயிருமுண்டாம்வாழ்வுகள்மிகவுண்டாமே. ()

செவ்வாய்-க-உ-ச-ரு-எ-அ-கூ- ய-யஉ-ல்-வரின்-
துர்ப்பலன்.

(கவி.)

எழுகுசன்பன்னொன்றாறுமூன்றலாவிடங்கள்சேரின் *
தொழுகமுவிலங்குதூண்டில்தூக்குமேவருவதோடு...*
இழுபறியானபங்கமில்லாததொடுவழக்கு... ... *
அழுங்கையுமேன்மேற்றுக்கமாங்குசனாலுண்டாமே (சு)

இராகு-ந-கூ-யக-ல்-வரின்-சுபபலன்.

(கவி,)

இராகுபன்னொன்றுமூன்றறதாமிடத்திற்சேரின் ... *
பாகுதேன்பழமும்பாலும்பற்றறுத்தனமுமுண்டாம் *

ஆகுங்காரியங்களுண்டாமன்னதானமுமுண்டாகும்[மே
வாகுவைப்பாட்டியுண்டாம் வரத்துமேல்வரத்துண்டா

இராகு-௧-௨-௪-௫-௭-௮-௯-௰-௰௨-ல்-வரின் துர்ப்பலன்.

(கவி.)

ஐந்துபத்தொன்றீராறேழாமிரண்டீரிரண்டோ ... *
டொன்பதுமெட்டுமாயினுடம்பினிற்பிணியுண்டாகும்*
மன்னருள்போகும்பார்த்தவயித்தியனாலேமோசம் ...*
தன்பதிபோக்கும்நல்லசகோதரஞ்சத்துருவாமே (அ)

குரு-௨-௫-௭-௯-௰௧-ல்-வரின்-சுபபலன்.

(கவி.)

பெருபதினொன்றைந்தேழ்பேரொன்பதாமிரண்டிற்றேவ
குருவரிற்செல்வஞ்சீருநர்குதிரைவெண்குடைதீவர்த்தி *
தருமமுந்தானமுண்டுதாய்தந்தைதுணையுமுண்டு
அருமையும்பெருமையுண்டாமரசர்சேவையுமுண்டாமே

குரு-௧-௩-௪-௬-௮-௰-௰௨-ல்-வரின்-துர்ப்பலன்.

(கவி.)

பத்துடன்மூன்றுநான்குபன்னிரண்டெட்டோடுற்ற...*
மத்திமமாறிலொன்றின்மன்னவனிருந்தகாலை ... *
சித்தமுமலைச்சறத்துசிட்டேரம்வாதபித்தம் ... ... *
பெற்றவள்பிறப்புபிள்ளைபெண்சாதிபகையுமாவர். (௰)

சனி-௩-௬-௰௧-ல்-வரின்-சுபபலன்.

(கவி.)

ஆறுப்ன்ஞென்பான்மூன்றிலந்தகனிருக்கிற்பாக்யம்...*
கூறுபேருருமுண்டாங்குறைவிலாச்செல்வமுண்டாம் *
ஏறுபல்லக்குமுண்டாமிடம்பொருளேவலுண்டாம் *
காறுபாலட்டலக்குமிகடாக்ஷமுமுண்டாமன்றே. (௰௩)

சனி-௧-௨-௪-௫-௭-௮-௯-௰-௰௨-ல்-வரின்- துர்ப்பலன்.

(கவி.)

பணிரொண்டேழெட்டொன்பான்பத்தைந்துநான்கிரண்டொன்றிற்ருன், சனியனேயிருந்தானட்டந்தனமுயிர்ச்சேதமாகும், தனிச்சிறைமானபங்கந் தன்னறிவாலேமோசம், மனேவிட்டுமாடுவிட்டுமெறுநகரேகுவாரே. ()

புதன்-௨-௬-௮-௰-௰௧-ல்- வரின்-சுபபலன்.

(கவி.)

பதுவுடனிரண்டெட்டாறு பன்ஞென்றுமாமிடத்திற் *
புதனிருந்தக்கான்மென்மேல் புத்தியுமியோகமுண்டாம்
சுதனுமேல்சுதனுமுண்டாஞ்சுற்றமுஞ்சுகமுமுண்டாம்
ரதகஜதுரகஞ்சேனைநாலுமேமிகவுண்டாமே. ...(௰௫)

புதன்-௧-௩-௪-௫ ௭-௯-௰௨-ல்-வரின்-துர்ப்பலன்.

(கவி.)

சாலொன்பதொன்றுமூன்று சார்ந்துமேழைந்திராருகு*
நாலினிற்புதனிருந்தானலமில்லைபிடிதீவினையே ... *

தோஷினிலரிப்புமுண்டாந்துக்கமுந்தூதுமுண்டாம் *
கீஷினிற்பிடிப்புமுண்டாங்கிளமானபங்கமென்றே ...*

கேது-௩-௬-௰௧-ல்- வரின்-சுபப்பலன்.

(கவி.)

நீள்பதினென்றுமாறுநேர்மூன்றிற்கேதிருந்தால் ... *
தாழ்விலாப்பயிருமுண்டுதனபாக்கியமதிகமுண்டு ... *
சூழ்புவியெங்கும்பேராஞ்சொன்னசொல்சற்றுந்தப்பா *
வாழ்வின்மேல்வாழ்வுண்டாகிமகராசனவன்றனே. ()

கேது-௧-௨-௪-௫-௭-௮-௯-௰-௰௨ - ல்-வரின்-துர்ப்பலன்.

(கவி.)

கேதுநான்கைந்தெட்டொன்பான் கிட்டியீரைந்திரண்டேழ், தீதுபன்னிரண்டிலொன்றிற்சசித்திரள்கிளையுந்தீதாம், சூதுடன்மயிர்களைந்து சுடுபட்டுச்சொரூபமாறிக் கேதுடன்காசிதேசந்தேசாந்தரம்போவன்றனே. ...*

சுக்கிரன்-௧-௨-௩-௪-௫-௮-௯-௰௧-௰௨-ல்-வரின்சுபபலன்

(கவி.)

வெள்ளியோராறுமேழும்விளங்குபத்தலாவிடத்தில், அள்ளியசெம்பொனுண்டாமன்னதானங்களுண்டாம், வெள்ளியுஞ்செம்புமுண்டாம்வித்தையும்புத்தியுண்டாம், தெள்ளியமொழியுமென்மேற்றிறமையுந்திருவுண்டாமே

சுக்கிரன்-சு-எ-ம-ல்-வரின் -துர்ப்பலன்.

(கவி.)

உக்கிரமாறுமேழுமோர்பதுப்திகடன்னில் ... ...*
சுக்கிரனிருந்தக்காலே துன்பமுந்தொல்லையுண்டாம் ...*
துக்குறிமனக்கிலேசஞ்சோர்வுடன்சொறியுமுண்டாம்*
வக்கிரம்பிடித்தாப்போலே மயக்கமுமிகவுண்டாமே. ()

(கோசாரவேதை.)

சந்திரலக்கினத்துக்கு - சூரியன் - ரு - லும், சந்திரன்-அ-லும், செவ்வாய்-எ-லும், புதன்-ச-லும், குரு- ங-லும், சுக்கிரன் - சு - லும், சனி-க-லும், ராகு-கூ-லும், கேது - உ - லும், இருந்தால்கோசாரத்தில் நல்லபலனைக்கொடுக்கமாட்டார்கள்.

இதுவும் சந்திரலக்கினத்துக்கு-மக - ங-ம - சு-ல் - சூரியனிருக்க - முறையே - ரு-கூ-ச- மஉ - ல்-கிரகமில்லாமலிருந்தால், தானிருந்த ராசிப்பலனைக்கொடுப்பான்.

க-ங-சு-எ-ம-மக-ல் - சந்திரனிருக்க-முறையே-ரு -கூ மஉ-உ-ச-அ-ல்-கிரகமில்லாமலிருந்தால்-தானிருந்தராசிப்பலனைக்கொடுப்பான்.

ங-சு-மக-ல் - செவ்வாய்-சனி-ராகு - இருக்க - முறையே-மஉ- கூ-ரு - ல்-கிரகமில்லாமலிருந்தால் - தாமிருந்த ராசிப்பலனைக்கொடுப்பார்.

உ-ச-சு-அ-ம-மக-ல்-புதனிருக்க- முறையே-ரு-ங-கூ-க-அ-மஉ-ல் -கிரகமில்லாமலிருந்தால் - தானிருந்த ராசிப்பலனைக்கொடுப்பான்.

௰க-கூ-எ - ௫-உ-ல்-குருவிருக்கமுறையே- அ-௰-௩-ச ௰உ-ல்.கிரகமில்லாமலிருந்தால்-தானிருந்த ராசிப்பலனை க்கொடுப்பான்.

௰க - ௰உ-உ-அ-க-ச-௩-௫-கூ-ல்-சுக்கிரனிருக்கமுறை யே-௩-௬-எ-௫-அ-௰-க-கூ-௰க-ல்- கிரகமில்லாமலிருந்தா ல்- தானிருந்த ராசிப்பலனைக்கொடுப்பான்.

(விபரீதவேதை.)

சந்திரலக்கினத்துக்கு - ௫-கூ-ச-௰உ - ல்- சூரியனிரு க்கமுறையே-௰க-௩-௰-௬-ல் - வேறுகிரகமிருந்தால் - சூ ரியன் நல்லபலனைக்கொடுப்பான்.

இவ்வாறேமற்றக்கிரகங்களுக்கும்.கோசாரவிபரீதவே தை பார்த்துக்கொள்ளவும்.

சூரியனும், செவ்வாயும், முற்பங்கிலும்; குருவும், சுக் கிரனும், நடுப்பங்கிலும்; சனியும், சந்திரனும், கடைப்ப ங்கிலும்; புதனும், பாம்புகளும் - எப்போதும் பலன் தருவார்.

(மாதாபிதாவுக்கு அரிஷ்டநாள்.)

பூராடம் - முதற்காலும், பூசத்தின் - உ- ஆங் காலும், ௩ - ஆங் காலும், சித்திரையின - முதற்காலும், உ- ஆங் காலும், உத்திரத்தின் முதற்காலும். மாதாபிதாவுக்கரி ஷ்டமாம்.

(பிதாவுக்குஅரிஷ்டநாள்.)

ஆயிலியம் - பூராடம் - ௩- ஆங் காலும், உத்திராடம் ரேவதி - உ - ஆங் காலும், உத்திரம் - அனுஷம்- முதற்

காலும், அவிட்டம் - ச - ஆங் காலும் பிதாவுக்கரிஷ்டமாம்.

(மாதாவுக்கரிஷ்டநாள்.)

பூசம், ஆயிலியம், மகம், சித்திரை, பூராடம், உத்திராடம், ரேவதி, முதற்காலும்; உத்திரம், விசாகம் - உ - ஆங் காலும் மாதாவுக்கரிஷ்டமாம்.

(பாட்டனுக்கரிஷ்டநாள்.)

சித்திரைமுதற்காலும்,விசாகம், அனுஷம், மூலம்-ச ஆங் காலும் பாட்டனுக்கரிஷ்டமாம்.

(அம்மானுக்கரிஷ்டநாள்.)

ரோகணிநக்ஷத்திரமுழுமையும், சதயம், பூரட்டாதி முதற்காலும், மகம் - உ - ஆங் காலும், அனுஷம் - மூலம்- ங - ஆங் காலும், பூராடம் - ச - ஆங் காலும் அம்மானுக்கரிஷ்டமாம்.

(பூமிவசியநாள்.)

பரணி, திருவோணம், விசாகம், அஸ்தம், இந்நக்ஷத்திரங்களில் - நாலாம்பாதமும்; கடகலக்கினமும்; செவ்வாய்க்கிழமையுங் கூடியகாலத்தில் மண்ணைத்தின்றால் பூமிபலிதமும், பூஸ்திதியும் உண்டாகும்.

(கவி.)

விருத்துவான்பரணியோணம்விசாகமோடத்தநாளில் *
கருத்துடனாலாங்காலில்கடகம்வந்துற்றபோது ... *

திருத்தியசேய்நாள்மண்ணைத்தின்றிடச்செல்வமிஞ்சி *
பொருத்தமும்புகழுமுண்டாய்ப்பூமியுந்தன்னதாமே. *

(விவாகம்.)

ஆடி-மார்கழி-புரட்டாசி- மாசி-மாதங்கள்தவிர மற்ற மாதங்களில், சுபர்வாரங்களில்,உவா-இருத்தை -அஷ்டமி நீங்கிய திதிகளில்,மிதுனம்-கும்பம்-கர்க்கடகம்- ரிஷபம் - தனுசு-கன்னி-துலாம்-என்னும்-இராசிகளில்,மூலம்-ரேவதி-மகம்-சோதி-மிருகசிரம்-ரோகணி- அனுஷம்-உத்திர மூன்றும்-அஸ்தம்-இந்நட்சத்திரங்களில்,ரு-யெகல்-பாபக்கிரகங்களும்-குரு - சுக்கிரன்-புதன்-சு-அ - அல்லாத மற்றஇடங்களில்,பலத்திருக்க. அல்லது ஒன்று ஏழுக்குடையவர்பலக்க-குருபார்க்க-உ-ரு-ல்-சந்திரனும் இருக்க-எ- ம்- அ-ம்-இடங்கள் சுத்தமாகிய லக்கினம்விவாகத்துக்கு உத்தமம். ... ... ... ... *

(விவாகநாள்.)

சூடுமாயோனுள்மூலமிரேவதிமகமேசோதி ... ... *
ஓடுமான்றலையுரோணியனுஷமுத்திரங்களத்தம் ... *
கூடியநன்றுவாவோடிருத்தையட்டமிதீயோர்நாள் ...*
ஆடிமார்கழிபுரட்டைமாசிதள்ளன்னமன்னாய்... ...*
அன்னமேமிதுனங்கும்பமலவனேடிடபம்வில்லு... *
கன்னிகோனன்றீராறுமூன்றினிற்கொடுங்கோணல்லர்*
பொன்னவனெட்டிற்றீயன்புகர்புதனெட்டோர்காரி *
இன்னவரேழிற்றீயர்மதிநல்லனிரண்டின்மூன்றே ... *

(விவாகசக்கரம்.)

எட்டுக்கோணமாக ஒருசக்கரங்கீறி- அந்தச்சக்கரத்தி னடுவில்-சூரியனிற்கும் நட்சத்திரத்தையும் அதற்கு முன்னட்சத்திரத்தையும் பின்னட்சத்திரத்தையும் வைத்து, தனக்கு எதிரைக் கிழக்காகக்கொண்டு வலமாக- திக்கொன்றுக்கு மும்மூன்றுநட்சத்திரமாக எண்ணிக்கொண்டுவரும்போது நடுவிலும், அக்கினிமூலையிலும், தெற்கிலும், மேற்கிலும், வாயுமூலையிலும், இருக்கும் நட்சத்திரங்கள்-௰௫-ம்-ஆகா. மற்ற-௰௨ - நட்சத்திரங்களும் உத்தமமாம். ... ... ... ... ...*

(கவி.)

தினகர னிருந்த நாண்முன்பின்னுளுஞ் ... ... *
சேர்த்திடு நடுவினில் வலமா ... ... ...*
அனலவன் மூலைமுதலதா மெட்டிற் ... ... *
கடவுடன் மும்மூன்று நாளாய்... ... ...*
மன்னுற வெண்ணி லக்கினி தெற்கு... ... *
வருணனும் வாயுவு நடுவும் ... ... ... *
எனவருபதினைந்தென்னுமநாட்க ... ... *
டீதென விளம்பினர் மோலோர் ... ... *

(கவி.)

வட்டமதிவிரவிநின்றமுன்னும்பின்னு ... ...*
வ்ளமாகவிவாகமது முடிப்பிற்றீதாம் ... *
திட்டமுடன்கிழக்கிலுள்ள மூன்றுநன்று ... ...*
திரள்வன்னிமூலையது தீதேயாகும்... ... *

நட்டமது தானாகும் யமனார்மூலை... ... ... *
நலமுண்டா நிருதியதுமேற்குச்சாவு ... *
தொட்டபிணிநீங்காது வாயுமூலை ... ... *
சுகம்பெறலாம்வடக்கு மீசானன்றானே.... ... *

(நிஷேகம்.)

ருதுநாள்மூன்றும், ஞாயிறு-செவ்வாய் சனி - பூரணை அமாவாசியை-அஷ்டமி-இருத்தை-சென்மநட்சத்திரம்-சென்மவாரம்-பரணி-திருவாதிரை-ஆயிலியம்-மகம்-மூப்பூரம்-சித்திரை-சோதி-விசாகம்-ஆகாவாம்.-க-ச-௰-ல்-சந்திரனும், க-ரு-கூ-ல்-குரு-சுக்கிரரும்,எ-கூ-ல்-புதனும்,ந-சு-௰க-ல்-பாபக்கிரகங்களும்-இருப்பதும்,சரராசியும்,லக்கினசுத்தமும் உத்தமம்.

திங்களிற்றிங்கண்மூன்னாள் சென்மநாளேகாதேசி *
மங்கையர்மூன்றுநாளும்வளர்பிறைமறைந்தநாளும் ...*
பொங்குறுநவமிநாளும் பூவையைப்புணர்வீராயின் ...*
அங்கமேநோவாமற்றுமாருயிரிழப்பர்தாமே. *

(சீமந்தம்.)

ச-சு-அ-என்னும்இரட்டித்தமாதங்களில் வளர்பிறையில் சுபர்வாரங்களில் அமாவாசியை-பூரணை-நவமி - நீங்கிய ஒற்றைத்திதிகளில்-ரோகணி,மிருகசிரம் - மூன்றுத்திரம்-அஸ்தம்-பூசம்-முதலிய நட்சத்திரங்களில் - சிங்கம் விருச்சிகம்-நீங்கிய இராசிகளில்-ஏறுபொழுதில்- ஆகாசம் நிர்மலமாக இருக்கும்போது அஷ்டமசுத்தமானலக்கி

ணத்தில் மாயோன்பலியாகிய சீமந்தஞ் செய்யலாம்.
பிராமணருக்கு-௩-ம்-மாதாமுமாம்.

சொல்லுநான்காறெண்டிங்கடோணிமான் றலேபா ரோணம், புல்லுமுத்திரங்களத்தம்பூசங்கள்புகழ்கோள் வாரம், நல்லவாமிரட்டைப்பக்கநவமியோடுவாதேள்சிங் கம்,அல்லவாஞ்சீமந்தத்திற் கட்டமசுத்திநன்றும். ... *

(கிரகப்பிரவேசம்.)

ஆனி-ஆடி-புரட்டாசி-மார்கழி-மாசி-பங்குனி-மாதங்க ளும்;ஞாயிறு-செவ்வாய்-வியாழமும்;அச்சுவினி - மிருக சிரம்-புநர்பூசம்-அஸ்தம்-சித்திரை-சோதி- மூன்றுத்திர ங்கள்-அனுஷம்- திருவோணந்தவிரமற்ற நட்சத்திரங்க ளும்;விருச்சிகம்-கும்பமும்-இருத்தையும் ஆகாவாம். அஷ்டமசுத்தமுள்ள லக்கினமுத்தமம்.

(நாமகரணம்.)

பிராமணருக்குப்பிறந்த- ௰௨-ம்-நாளும்;மற்றவர்களுக் கு-௩௰-ம்-நாளும்;சரராசியும், அஷ்டமசுத்தராயும் உத்த மம். அச்சுவினி-பரணி-கார்த்திகை-திருவாதிரை- ஆயிலி யம்- பூரம்-சித்திரை-விசாகம்-கேட்டை-பூராடம் - பூரட் டாதி-அமாவாசியை-பூரணையும்,ஒற்றைத்திதியும், பாபர் வாரங்களும், பிற்பகலும், பகை நீச்சக்கிரகபார்வையும் ஆகாவாம்.

(காதுகுத்த.)

பிறந்த - ௰௨-ம் - ௰௬- ம் - நாள்களும், ௬-ம்-எ-ம்- மா தங்களும், சுபர்வாரங்களும், திருவோணம் நீங்கிய மற் றமுழுநட்சத்திரங்களும், பஞ்சமி - சஷ்டி - சத்தமி - து

வாதசி - திரயோதசி- முற்பக்கச் சதுர்த்தசியும், ௨-௩-௭ ௯-௰க - ல் - சந்திரனும், ௩-௰க- ல் - பாபக்கிரகங்களும், இருப்பதும் உத்தமம். குரு - ௬-அ-௰-லும், சுக்கிரன்-௬-௭-அ- லும், புதன்-அ - லும்-இருந்தாலாகாது. *

(கவி.)

காணுமாறேழாந்திங்கள்கருநாளீராறெட்டு
ஓணமான்றலைபூசங்க ளவிட்ட-முத்திரங்களத்தம் *
தோணிசித்திரையேசெங்கைசுபர்வாரம்பன்மூன் றீரா *
றுணியாமிரண்டுமூன்றைந்தாறேழ்காதணிதல்நன்றாம்.

---

ஆளரிகுடங்தேள்தீதாமாடுமானுமிரண்டு *
நாளிருபக்கஞ்சேருங்கிழமைகள்நணுகிற் றீதாம் *
கோளவையெட்டினீக்கிக்கொடுங்கதிருச்சிமுன்னே
வாள்விழிமாதேசொன்னோம் வைத்திடுகாதுவல்லே. *

---

வல்லிமூன்றிரண்டைந்தொன்பான் பன்னொன்றேழ்மதியநல்லன், புல்லர்மூன்றாறுபன்னொன்றழகியர்பொன்பத்தாறும், சொல்லியவெட்டுந்தீயன்சுங்கனெட்டாறேழ்பொல்லான், நல்லனெட்டேழிற்புந்திகாதிடநவிலுங்காலே. ()

(அன்னப்பிராசனஞ்செய்ய.)

பிறந்த- ௬ - ம் ௴; அ - ம் ௴; ௰௨ - ம் ௴ வளர்பிறையிலே - வியாழம் - வெள்ளி - புதனும், ரேவதி- ரோகணி- அஸ்தம்-புநர்பூசம்-அச்சுவினி - மூன்றுந்திரங்கள்

சித்திரை-சதயம் - திருவோணம் - மிருகசிரம்- அவிட்டம் - சோதி - அனுஷமும்; - ௰உ - ம்-இடஞ்சுத்தமும் உத்தமம். பூரணை - அமாவாசியை-நவமி - இரட்டித்ததிதிகள் தவிரமற்றத்திதிகள் ஆகா.

(அரைநாண்பூட்ட.)

பிறந்தமுந்தூற்றறுபதாநாளில் - ஸ்நாநஞ்செய்வித்துப்புநர்யாகஞ்செய்து பொன்னரைநாண்பூட்டுவதும்; கோடிவஸ்திரந்தரிப்பதும் உத்தமம்.

(மயிர்கழிக்க.)

பிறந்த-ரு-௵ ௫-௵-மும், ஆடி-புரட்டாசி-மார்கழி-மாசிநீங்கிய மற்ற மாதங்களும், ஞாயிறு-செவ்வாய்-சனிவாரமொழித்து மற்றயவாரங்களும்,இருத்தை-அஷ்டமி உவா-பிரதமை யொழித்து மற்றத்திதிகளும், அஸ்தம்-சித்திரை-சோதி-உத்திராடம்-திருவோணம்-அவிட்டம் சதயம்-மிருகசிரம்-புநர்பூசம்-பூசம்-உத்திரட்டாதி-ரேவதி-அச்சுவினி - ரோகணி நட்சத்திரங்களும், கன்னி-துலாம்-ரிஷபம்-மிதுனம்- மீனம் - கர்க்கடக இராசிகளும், கூம்-இடம்-சுத்தமானலக்கினமும் உத்தமம். சந்திரன்-க-கூ-௰உ - லும், சுக்கிரன்-எ-லும், குரு - ௰உ- லும், அ-ல்-எல்லாக்கிரகங்களும் இருக்கலாகாது. ரு- கூ-௰க - ல்-பாபக்கிரகங்களிருக்கலாம். தாயாரிருந்தால் சுக்கிரவாரத்திலாகாது.

(கவி.)

ஆடிபுரட்டாசியைப்பசிமார்கழி ... ... *
தேடியஞாயிறுசெவ்வாய்சனிதனில் ... ... *
கூடியுரோமங்குறைத்திடவல்லிரேல் ... ... *
மாடுமக்களுமைந்தருமாள்வரோ. ... ... *

---

தாயபொன்வெள்ளிமூடந்தக்ஷணவயனமாசி ... *
ஆயநற்பிறந்தநாட்களஷ்டமராசிக்கூறு ... ...*
தூய்கதிர்சனிசெவ்வாய்நாள் தொன்மணம் புணர்ந்தவா
னாயகிகர்ப்பநாளுநன்மயிர்கழிக்கொண்ணுதே. [ண்டு

(வருந்தோஷம்.)

இரவியறுதிங்க ளெண்டிங்கள்செவ்வாய் ... *
பரவுசனிபன்னிரண்டுதிங்கள்-கருதுமயிர்... ... *
பூதலத்திலேவிழுந்தாற் பொல்லாங்கெல்லாமருவும்...*
மாதவத்தோர் சொன்னமறை. ... ... *

(வித்தியாரம்பம்.)

பிறந்த-ரு-ம்-வருஷம்-உத்தராயணத்தில்- சனி - செவ்வாய்-தவிர-மற்றவாரங்களில், பிரதமை-இருத்தை - திரயோதசி-அஷ்டமி- உவா-துவாதசி-நீங்கிய மற்றத்திதிகளில்-புருஷராசியில்-அனுஷம் - அச்சுவினி-புநர்பூசம்-பூசம்-ஆதிரை-திருவோணம்-அவிட்டம் - சதயம்-அஸ்தம் சித்திரை-சோதி மூன்றுத்திரங்கள்-ரேவதி - ரோகணிநட்சத்திரங்களில்-௬-எ-௰-௰௨ - நீங்கிய விடத்தில்-சந்திர

னும்-சூ-நீங்கியவிடத்தில்-புதனும்-அ- நீங்கியவிடத்தில் எல்லாக்கிரகங்களும் இருப்பதும்-ச-ம்-இடம்-சுத்தமும் உத்தமம்... ... ... ... ... ... *

(ஓதாதகாலம்.)

அட்டமியிலோதிநு லாசானுக்காகாது ... *
சிட்டருக்குப்பண்ணன்கு தீதாகும்-கெட்டவுவா ... *
வித்தைக்குநாசம் விளங்குபிரதமையிற் ... ... *
பித்தரும்பேசார்பிழை. ... ... ... ...*

(ஓலையெழுதவரிக்கணக்கு.)

அடியர்க்கிரண்டுவரியன்பர்க்குமூன்றுங் ... *
கொடியோர்க்குநான்காகக்கூறு-முடிபுனைந்த ... *
வேந்தர்க்கோரைந்துவரி வேதியர்க்கோராறும் ... *
சூழ்ந்தபனையோலைச்சுருள். ... ... ... *

(உபநயநம்.)

பிறந்த-எ-ம்(வரு)-சுபர்வாரங்களில் வளர்பிறையில் இருத்தை-அஷ்டமி-ஏகாதசி-பிரதமை-உவா நீங்கிய மற்றத்திதிகளும், அனுஷம்-அத்தம்- உத்திரங்கள்மூன்றும்-மிருகசிரம்-ரோகணி-அச்சுவினி-சித்திரை-புநர்பூசம்-பூசம் ரேவதி நட்சத்திரங்களும் பாபக்கிரகங்களின் ஆட்சிநீங்கிய-அ-ம் - இடம் சுத்தமாகிய லக்கினமும் உபநயனஞ் செய்ய உத்தமம்... ... ... ... ... *

(முடிசூட்ட பாகைபோட.)

வளர்பிறையில் சுபர்வாரங்களும் - மிருகசிரம் - ரோகணி-அச்சுவினி-உத்திரங்கள் மூன்றும், புநர்பூசம்- பூசம்

அஸ்தம்-சித்திரை- சோதி - அனுஷம் - அவிட்டம், திருவோணம்-ரேவதி நட்சத்திரங்களும்-பஞ்சமி -சத்தமி-திரயோதசி- துவாதசி-திரிதியை திதிகளும்-கன்னி - துலாம்-நீங்கிய-மக-ம்-இடஞ்சுத்தமானலக்கினமும் உத்தமம்

(கோடியுடுக்க.)

புதன்-வியாழம்-வெள்ளியும் - உத்திரங்கள்மூன்றும், அச்சுவினி-ரேவதி-ரோகணி-புனர்பூசம்-பூசம்- அஸ்தம், சித்திரை-சோதி-விசாகம்-அனுஷம் - அவிட்டமும், கூ-ம்-இடம் சுத்தமும், இவை உத்தமம். இருத்தையும்-சரராசியும் ஆகாவாம். ... ... ... ... *

(கவி.)

காரியிலழுக்கதாகுங்கதிரவன்பீடைகாட்டும் ... *
மாரியினனையுந்திங்கள்வன்புதன்கந்தையாகும் ... *
வீரியமில்லைச்செவ்வாய்வெள்ளியில்மடந்தைசேர்வள் *
கூரியவியாழநன்றுங்குலவியவாடைசாத்த.... ... *

---

பூட்டுமுத்திரங்கள்தோணிபுரவிபாரிருபூசங்கள்
ஈட்டியவத்தமாதியைந்துமேலவிட்டநற்கோள்
சூட்டியவாரநன்றுந்துயரமெட்டிருத்தைசிங்கம்
கோட்டியசரங்கணீக்கிநின்றநாள்கூறைசாத்தே. (௨)

நாயிற்றுக்கிழமை கடகம்-கும்பம்,திங்கட்கிழமைமீனம்-மேஷம், செவ்வாய்க்கிழமை தனுசு-கன்னி, புதன்கிழ

மை மிதுனம்,வியாழக்கிழமை சிங்கம்-இடபம், வெள்ளிக்கிழமை துலாம்-விருச்சிகம், சனிக்கிழமை மகரங்கூடியகாலத்தில்கோடிசாத்தல்நலமெனச்சிலர்சொல்லுவர்.

---

டரிதியிற்கடகங்கும்பம்பார்மதிமீனமேஷம் ... *
குருதியிற்றனுசுகன்னிகோள்புதன்மிதுனமாகும் ... *
சுருதிபொன்னரியும்புல்லுஞ்சுக்கிரன்றுலாமுந்தேளும்
வருசனிமகரமாகும்வாரத்திற்கோடிசாத்தே. ... *

(வாகனமேற ஆயுதம்பிடிக்க.)

வளர்பிறையில் - நந்தை-பூரணை-ஞாயிறு - திங்கள்-புதன் - வியாழம்-கர்க்கடகம்-சிங்கம் - மிதுனம்-கன்னி-தனுசு-மீனம்-மிருகசிரம்-உத்திரங்கள் மூன்றும், மகம்-அஸ்தம்-புநர்பூசம்-திருவோணம்-சித்திரை-ரோகணி-சோதி-ரேவதி-உத்தமம். ... ... ... ... *

(ஆபரணம்பூண.)

வளர்பிறையில் சுபர்வார உதயம், நந்தை-பூரணை-ரிஷபம்-மிதுனம்-கன்னி-தனுசு-மீனம்-அச்சுவினி - அஸ்தம் சித்திரை-அனுஷம்-பூசம்-மிருகசிரம்-ரோகணி- ரேவதி உத்தமம் ... ... ... ... .. *

(உழவுசெய்ய.)

சித்திரைமீ த்தில் பூர்வ்வபக்கத்தில்- சனி-ஞாயிறு-தவிர மற்றவாரங்களும்,இரட்டித்த திதிகளும், நவமியுந்தவிர மற்றத்திதிகளும் ரிஷபம்-மிதுனம்-கர்க்கடக லக்கி

ணங்களும், ரோகணி-மூலம்-உத்திரங்கள் மூன்றும், ரேவதி-புநர்பூசம் - பூசம் - அஸ்தநட்சத்திரங்களும் பொன்னேறொன்னும் உழவுநாட்கொள்ள உத்தமம், ... *

(வயற்சூலம்.)

நாலுகோணமாக ஒருசதுரங்கீறி நாலுமூலையினும் சூலமிட்டுக் கிழக்கில்-௩-வரையும், தெற்கில்- ௫-வரையும், மேற்கில்-௫-வரையும்,வடக்கில்-௨-வரையுங்கீறில்-௨௰-மூனையாகும். ஈசானமூலையில் சூரியன் விட்டநாளைவைத்து, வலமாக எண்ணச்சூலத்தில் உள்ளநாள் ௰௨-ம்-உழவு செய்யஆகாவாம் மற்ற-௰௫-ம்-உத்தமம்.

(கலப்பைச்சக்கரம்.)

ஆறுமூலையுள்ள ஒருசதுரங்கீறி - ௬- மூலைகளிலும்சூலமிட -௰அ- முனையாம்-சதுரத்தின் கிழக்குமேற்கின்நடுப்பக்கங்களிலும் ஐவ்வைந்து வரிகீறில் -௨௰அ-முனையாம். இடதுபக்கத்தின் நடுமுனைச்சூலத்தின் நடுவில் ரவிநின்ற நாளைவைத்து அபிசித்துடன் வலமாக எண்ண ரவிநின்ற நாளும்-முன்-பின்னாள்களும் - பயிர்தீயும் பின் னெட்டுநாளும் நல்லது-அதன்பின் -௬- நாளும்-உழவுகுண்டை ஓயும்.மற்றநாள்.எ-ம் சுகம்.

பணிச்சக்கரம்.

சர்ப்பமெழுதி-சிரசில்-௩-கழுத்தில்-௩-முதுகில்-௰௨-வாலில்-௪-வயிற்றில்-௩-ஆக-௨௰எ-வரைகீறி சிரசில்-சுக்

கிரனின்றநாளைவைத்து-நேரோளண்ண-சிரம்-௩-ம்பயிர்தீயும்,கழுத்து-௩-ம்-நீர்ச்சாவி,முதுகு-௰௨-ம்-விர்த்தி,வால்-௬-ம் அற்பவிளைவு, வயிறு-௩-ம் - நாசமாகும்,இப்படி விதைக்கு நாள்பார்க்கவும்.

சிலர்-இராகு நின்றநாளை வயிற்றின்கடையில்வைத்து அப்பிரதக்ஷணமாக - எண்ணும்போது - ௪ - வது ௫-வது-௬-வது நக்ஷத்திரம்- கறுப்புதானியம் விதைக்கநல்லதென்றும் ஏழுமுதல்-௰௨-வரையுள்ள-௬-ம் நல்லபயிர்செய்ய உத்தமமென்றும் மற்றயவைகள் ஆகாதென்றுஞ்சொல்வர்.

(விதைக்க.)

சுபர்வாரங்களில் உழவுக்குச்சொன்னவிதிப்படி-நெல்முதலான கதிர்த்தானியங்களுக்குத்திருவோணமுதலாகச்சொன்ன-௯-நாள்களும், மஞ்சள்முதலான கிழங்குகளுக்கு - பரணிமுதலாகச்சொன்ன- ௯- நாள்களும், பயறுமுதலான காய்த்தானியங்களுக்குச் சோதிமுதலாகச்சொன்ன-௯-நாள்களும் உத்தமம் பஞ்சமி - சத்தமி-திரயோதசி-ஏகாதசி-திரிதியை-உத்தமம் - தசமி-துதியை-சஷ்டி-மத்திமம். மற்றத்திதிகள் அதமம்.ரிஷபம்-கர்க்கடகம்-சிங்கம்-மகரம்-மீனம்-உத்தமம். மிதுனம்-கும்பம்- துலாம்மத்திமம்.மற்றராசிகள் அதமம்.அஷ்டமசுத்தமான லக்கினத்தில் அந்தந்தப் பயிருக்குச் சொன்னநாள்களில் பயிர்செய்ய உத்தமம். ... ... ... ... *

நாகவம், கிமுஸ்துக்னகரணங்களாகாவாம்.

ஞாயிறு உதயம்-நெல்லுவிதைக்க, சனி யுச்சி எள்ளு விதைக்க, செவ்வாய் உதயம் - கொள்ளும், வரகும், விதைக்க உத்தமம். அச்சுவினி-கரும்புநட, ஆயிலியமும், மூலமும்,வெற்றிலைத்தோட்டம்போட,அனுஷமும்-சதயமும்,எள்ளுவிதைக்க,ரோகணி-மரம்வைக்க,பரணி-கத்தரி முதலானவைநட, சித்திரை-பயறுவிதைக்க உத்தமம். கிமுஸ்துக்னமும்-வணசையும்-கவுலவமும் - ஆகாவாம். ஆவணிமீ த்தில் சிங்கத்தில்-சூரியன் பிரவேசித்த-ஙாடுடு-நாழிகை-அல்லது-சு-நாளும், அக்கினிநட்சத்திரமும் விதைவிதைக்க லாகாவாம் இதற்கு நாட்டாச்சாலென்றுபெயராம். ... ... ... *

(கவி.)

ஓணமாதிரைபூசமுரோகணி ... ... ... *
நீணிலுத்திரமூன்றுசதயமும்... ... ... *
ஆணியானவவிட்டத்தோடொன்பதும் ... ... *
பூணலாகுமேனேக்கும்பயிருக்கே ... ... *

---

பரணிகார்த்திகைபாம்புவிசாகமும் ... ... *
முராணுமூலமுப்பூரமகத்துடன் ... ... *
கிரணமாணகிழங்குபதித்திட ... ... ... *
தரணியிற்றழைத்தோங்கிடுநாள்களே... ... *

---

சோதிசித்திரைசோமனெடுபரி ... ... ... *
ஆதியத்தமனுஷமிரோவதி ... ... ... *
நீதிகேட்டைநிகழ்புனர்பூசமும் ... ... ... *
வீதியாகவிளங்கிப்படருமே ... ... ... *

(கதிரறுக்க.)

திங்கள்-புதன்-வியாழம்-சனி, மகம்-ரோகணி - விசாகம்-திருவாதிரை-திருவோணம்-அஸ்தம்- பரணி, ரிஷபம்-கர்க்கடகம்-சிங்கம்-விருச்சிகம்- உத்தமம். இருத்தை - ஆகாது. ... ... ... ... ... *

(தானியமிட-தானியமெடுக்க)

வளர்பிறை சனியும்-வியாழமும், அஸ்தம் - திருவாதிரை-மகம்-ரோகணி-அனுஷம் பரணி-உத்திரங்கள் மூன்றும், திருவோணம்-மிருகசிரநட்சத்திரங்களும், ஸ்திரராசி உபயராசிகளும், உத்தமம். இருத்தையாகாது கருப்பவதியும், கன்னிகையும், அமங்கலையும் அல்லாத சுமங்கலிகளால் பூசித்துக் களஞ்சியத்தில் போடும்படிசெய்வது உத்தமம். இந்தப்படியே தானியமெடுப்பதுஉத்தமம்.

(பிரதிஷ்டைபண்ண.)

மாசிமீ தேய்பிறை, குருட்டுநாள், நவமி-உவா - இரட்டித்ததிதிகள், குரு சுக்கிராஸ்தமனம், சகடயோகம், விஷ்டிதோஷம், சரராசிகள், செய்யுங்கர்த்தாவின் ராசிக்கு-௬-அ-௰௨-ம்-ராசிகளும் ஆகாவாம். ... ... ...*

(கவி.)

கண்ணிலாநாட்கள் மாசி கடியபிறபக்கமொன்பான் [ம்
எண்ணுவாவிரட்டைப்பக்கமிரும்புகர் செம்பொன்மூட
தண்ணியகடகம்விட்டி சராசிதலையாய்நின்ற ... [கா
அண்ணல்தன்னோக்காறெட் டீராறுபிரதிஷ்டைக்கா

(புதிதுண்ண.)

வளர்பிறையில்-வெள்ளி-சனி-திங்கள்-புதன், அச்சுவி ணி-ரோகணி-மிருகசிரம்- புநர்பூசம்-பூசம் - உத்திரங்கள் மூன்றும்-அஸ்தம்-சித்திரை-அனுஷம்-திருவோணம்-அவிட்டம்-சதயம்-விசாகம்-உத்தமம்.இருத்தையும் - உவாவும்,மேஷமும்-விருச்சிகமும்-மீனமும்-ஆகாவாம். ...*

(கவி.)

வெள்ளிசனிதிங்கள்விருந்துண்புதனுமாம் ... *
கள்ளவியாழங்கசப்பிக்கும்-தெள்ளுகதிர் ... ... *
தீராப்பகைகாட்டுஞ்செவ்வாய்தனக்குமோ ... ...*
வாராப்பகையும்வரும் ... ... ... ... *

(பரிகாரம்.)

செவ்வாய்க்குப்பாலாந்தினகரற்குநெய்யாகும் ... *
மெய்யாம்வியாழம்வெந்நீராகும்-ஐயாகேள்... ... *
இந்நாளொருவிருந்தையிட்டிடவேண்டிட்டால் ... *
சொன்னோம்பரிகாரந்தான்... ... ... ...*

(மருந்துண்ண.)

ஞாயிறு-வியாழம்- அமரபக்கத்திதிகளும் -உத்தமமாம் - ஜன்மானுஜன்மம்-ஜனனதிதி-ஜனனவாரம்-திருவாதிரை முதலாக விலக்கப்பட்ட நக்ஷத்திரங்களும் ஆகா. ... *

(மனைகோல அகமெடுக்க.)

தை மாதம் கிழக்குவாடையிலும், சித்திரை-வைகாசி-மாதங்களில் தெற்குவாடையிலும், ஆவணிமாதமேற்கு வாடையிலும், ஐப்பசி-கார்த்திகை - மாதங்களில் வடக்குவாடையிலும், அகமெடுக்க உத்தமம்.மற்றமாதங்கள் வீடுகட்ட ஆகா.

இடபம்-மிதுனம் கர்க்கடகத்துக்கு கிழக்குவாசலும், வடக்குவாசலும்; சிங்கம்-கன்னி - துலாத்துக்கு கிழக்கு வாசலும், தெற்குவாசலும்; விருச்சிகம்-தனுசு-மகரத்துக்கு மேற்குவாசலும், தெற்குவாசலும்;கும்பம் மேஷத்துக்கு- வடக்குவாசலும், மேற்குவாசலும்பொருந்தும்.

ரோகணி-ரேவதி-பூசம் - மிருகசிரம் - அனுஷம்-அஸ்தம்-உத்திரங்கள் மூன்றும் உத்தமம். புநர்பூசம் - பூசம்-மூலம்-அவிட்டம்-சோதி - சதயம்-மத்திமம். மற்றவை ஆகாவாம்.

பாபர்வாரங்களும் உவா-இருத்தை - அஷ்டமியும்-சரராசிகளும் ஆகா. முக்கியம் - ௰௨ - ம்- இடம்சுத்தம்வேண்டும்.

சிங்கம்-விருச்சிகத்தில்-குருவும்,கும்பத்தில்-சுக்கிரனும்-சந்திரனும், ரிஷபத்தில் புதனும்-சுக்கிரனும் இருக்குங்காலமாகில் விசேஷ உத்தமம்.

(கிணறுவெட்ட-கனாகட்ட.)

ஐப்பசி மீ ௰-தேதிக்குமேல் - உ௰ - தேதிக்குள்- உத்திரமூன்றும், கேட்டை ரேவதி-சித்திரை-ரோகணி-திருவோணம்-அஸ்தம்-மிருகசிரம்-பூராடம் - மகம், பஞ்சமி-சத்தமி-திரிதியை-ஏகாதசி-திரயோதசி-பிரதமை,கும்பம்-மீனம்-மகரம்-ரிஷபம்-கர்க்கடகம்,சுபர்வாரங்களும்-கிணறுவெட்ட உத்தமம். ... ... ... ...*

சித்திரை மீ த்தில்-முன்சொன்னபடி கூடியநாளில்-கனாகட்டஉத்தமம். ... ... ... ... *

(கிணறுவிழுமிடமறிய.)

கண்டநிலத்தை-௰உ-பங்குபண்ணிக் - கிழக்குமேற்கு நீண்டமனையாயின் கிழக்கினடுப்பங்குமேஷமாகவும், தெற்குவடக்குநீண்டமனையாயின்தெற்கினடுப்பங்குமேஷமாயுங்கொண்டு மேஷத்தில்சூரியனைவைத்து-வலமாக-சூரியன்-சந்திரன்-செவ்வாய்-புதன்-குரு-சுக்கிரன்-சனி இராகு-கேது-பிரமன் -விஷ்ணு-ருத்திரன் எனமீனம் வரையெண்ணில் - சூரியனில்-பாருகும்,சந்திரனில் வெகுநீராகும்,செவ்வாயில் - அற்பநீராகும்,புதனில் - சிறு ஊற்றுகும்,குருவில்-பாருகும், சுக்கிரனில்- வெகுநீராகும், சனியில் - கனாவிழும்,இராகுவில்-உவர்நீராம்,கேதுவில்

அற்பநீராம், பிரமனில்-பாறையாம், விஷ்ணுவில் - குழி குண்டு மிகுகளையுமாம், ருத்திரனில்-வெகுநீராம்.

(கவி.)

கண்டநிலந்தனைப்பனிருகூறதாக்கிக் ... ... *
கதிராதியுருத்திரன்வரைவலமாவெண்ணக் ... *
கொண்டரவிபாறுகும்வெகுநீராகும் ... ... *
கூறற்பநீராகும்வெகுநீராகும் ... ... ... *
திண்டிறல்சேர்பாறுகும்வெகுநீராகும் ... *
செய்திடுநற்களைவிழுமுவர்நீராகும் ... ... *
உண்டற்பநீராகும்பாறையாகும் ... ... *
உடைகளையுங்குழிகுண்டாம்வெகுநீராமே. ... *

(யாத்திரை.)

செவ்வாய்க்கிழமையும்-ரோகணிமுதல்-ரு-நட்சத்திரமும்- நந்தையும் கிழக்கிலும் - உத்திரமும்-அஸ்தமும்-திங்களும்-சனியும் - பத்திரையும்-தெற்கிலும், அனுஷம்-கேட்டை-மூலம்-உத்திராடம்-திருவோணம்-ரு- நட்சத்திரங்களும்-சயையும்-வியாழக்கிழமையும் - மேற்கிலும், அவிட்டம்-சதயம் - உத்திரட்டாதி-ரேவதி- அச்சுவினி-ரு-நட்சத்திரங்களும்- பூரணையும்- ஞாயிறும் - வெள்ளியும்-வடக்கிலும், யாத்திரைசெய்ய உத்தமம். ... *

பரணி-கார்த்திகை-திருவாதிரை- பூரங்கள் மூன்றும்-ஆயிலியம்- கேட்டை-சித்திரை - விசாகம்-சோதி-மகம், இருத்தை-பிரதமை - அஷ்டமி-உவா, ஞாயிறு-செவ்வா

ய-புதன், ஸ்திரராசிகளும், விஷ்டிதோஷம்- விதீபாதம்- பரிவேடம்-கிராணகாலமும்;-சூலமும்-சங்கிரமம் - தூமம்-இடி-மின்னல்-மழைபொழிதல்- இடறல் தும்மம்-பெண்சாதிதூரகாலம் - இவை யுண்டாகும்போது யாத்திரைசெய்யலாகாது. ... ... ... ... *

சென்மலக்கினத்துக்கு - உ-ங- சு- ௰க - இராசிகளும் மூக்கியமாய் ஐந்தாமிடஞ் சுத்தமிருக்கும் ராசிகளும் பிரயாணத்துக்கு உத்தமம். ... ... ... *

பெண்களுக்கு - ஆடி-புரட்டாசி - மாசி-வெள்ளி-புதன்-விலக்கட்பட்டன.... ... ... ... *

அன்றையத்திதி வாரநக்ஷத்திரங்களை அவ்வவ்வாதியாகக்கணக்கிட்டுக் கண்டதொகையை- உ-ல்-பெருக்கி-எ-க்குக் கொடுத்து மிச்சங்காணில் மகிழ்ச்சி; முன்தொகையை-ங-ல்-பெருக்கி- அ - க்குக் கொடுத்து மிச்சங்காணில் இன்பம்;முனதொகையை-ச-ல்-பெருக்கி-சு-க்குக் கொடுத்து மிச்சங்காணில்-சுபம்,மூன்றிலும் - சேடங்காணில்-உத்தமம். உ-ல்-காணில் மத்திமம். ஒன்றில்காணில் பரியாயம். சேடமில்லாவிடின் யாத்திரைபோகலாகாது. ... ... ... ... ... *

(யாத்திரைச்சூலம்.)

ங-சூலமெழுதி-ஒவ்வொன்றின் அடிக்காம்பின் நடுவில் -சு- மூன்றோன்றாரும்படி-மும்மூன்று வரையிட்டால். உ௰அ-மூன்றோன்றும் - இடதுபக்கச் சூலத்தினடுவில்

யாத்திரைநாளைவைத்து-வலமிடமாகக் கீழும்மேலும் ௳
நநாள்வரையெண்ண-நடுவரை-௰உ- லும்வரின் உத்தம
ம்-வெளிப்பக்கம்-௬-வரையிலும்வரின் பறவைபோ லலை
வான்-சூலமுளை-௬-லும்-வரின்-மரணம். ... *

(கவி.)

இலைதெரியச்சூலங்கள்மூன்றுகீறி ... ... *
இடைச்சூலத்தியாத்திரைநாள்தன்னைவைத்து ... *
வலமிடமாயிருபத்தேழ்நாளுமெண்ணில்... ... *
வழிப்போவான்பிறந்தநாள்நடுவீராறேல் ... *
பலமிகவேயுண்டாகும்பக்கவாறில் ... ... ... *
பறவைபோலலேந்திடுவான்பகர்ந்தசூலம்... ... *
தலையளவேயாமாயிற் சாவான்றிண்ணம் ... *
சத்தியமாயிந்நூலேச்சாத்திரமே. ... ... *

---

வினவுறுவிண்டுவில்லுவிதீபாதமூர்கோள்வட்டம்... *
துனிவுறுகிரணம்சூலம்தூயசங்கிராந்திதூரம் ... *
வணிதைகேளிடித்தல்மின்னல் மழைபெய்தலிடறல்தும்
இணையவைசெய்யப்போகிலெய்திடுநாசந்தானே. [மல்

---

ஆடுகன்னிவின்மிதுனமல்லற்படுத்துவிக்கும் ... *
நீடுமகரஙினைவழிக்கும்—நாடுங்கால் ... ... *
மீனமிணைவாக்குமிகுமழையாங்கும்பத்தில் ... *
ஊனமில்லாலக்கினத்தையோது... ... ... *

விற்பகையைவெல்விக்குமேலாமெருதுசுபம் ... ✳
எப்பகையும்வெல்லுமிருங்கடகம்—சொற்பெரிய ...✳
மன்னனுஞ்சிங்கமகிழ்வாம்விருச்சிகத்தில்... ... ✳
தன்னுடம்பிற்காட்டுந்தழும்பு. ... ... ✳

(இராசிவிசேஷம்.)

| | | | |
|---|---|---|---|
| விவாகத்துக்கு... | மேஷம் | திதிகொடுக்க ... | ரிஷபம் |
| யாத்திரைக்கு... | மிதுனம் | மரம்வைக்க ... | கர்க்கடகம் |
| குருவைக்காண... | சிங்கம் | புணர்ச்சிக்கு... ... | கன்னி |
| வீடுகட்ட ... ... | துலாம் | உழவுக்கு... ... | விருச்சிகம் |
| கிணறுவெட்ட... | தனுசு | கப்பல் யாத்திரைக்கு— | மகரம் |
| மயிர்கழிக்க ... | கும்பம் | வித்தியாரம்பத்துக்கு -- | மீனம் |

ஆகாவாம்.

(மட்சுத்தம்.)

குடிபுக-௰௨-ம், முடிசூட்ட-௰௧-ம், ... ... ✳
அன்னப்பிராசனத்துக்கு-௰-ம், மயிர்கழிக்க-௯-ம். ... ✳
உபநயனத்துக்கு-௮-ம், விவாகத்துக்கு-௭-ம், ... ...✳
கோடியுடுக்க-௬-ம், யாத்திரைக்கு-௫-ம், ... ✳
வித்தியாரம்பத்துக்கு-௪-ம், பொன்பூண-௨-ம், ... ✳
நிஷேகத்துக்கு லக்கினமுஞ்சுத்தமாகஇருக்கவேண்டும்

(அருக்கனிலை.)

சனிக்கிழமை இராத்திரி-௩௰-நாழிகையும், நாயிற்றுக்கிழமைபகல்-௩௰-நாழிகையும், தெற்கிலும்; ஞாயிற்றுக்கிழமைராத்திரி-௩௰-ம், திங்கட்கிழமை-௪௰-ம்-தென்மேற

கினும்; செவ்வாய்க்கிழமை - பகல்-௩௰-ம்-இராத்திரியில் ௰-ம்-மேற்கிலும்; மற்ற-உ௰-ம்-புதன் கிழமை-பகல்-௩௰-ம்-வடமேற்கிலும்; புதன்கிழமை இராத்திரி - ௩௰ - ம், வியாழக்கிழமை பகல் - ௩௰- ம், இராத்திரியில்-௰-ம்-வடக்கிலும்; மற்ற-உ௰-ம்-வெள்ளிக்கிழமை-௬௰-ம்-வடகிழக்கிலும்; சனிக்கிழமை பகல்-௩௰-ம்-கிழக்கிலும்; அருக்கனிருக்கும். அக்கினிமூலைபாழாம்.

(திசையோனிநிலை.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கருடன் | ... ... | கிழக்கு | பூனை | ... | தென்கிழக்கு |
| சிங்கம் | ... ... | தெற்கு | நாய் ... | ... | தென்மேற்கு |
| பாம்பு | ... ... | மேற்கு | எலி | ... ... | வடமேற்கு |
| யானை | ... ... | வடக்கு | முசல் | ... | வடகிழக்கு |

அருக்கனில் கருடனைவைத்து, முறையே பார்க்கும்போது எதிருக்கெதிர் பகையோனி நிற்கும். அவைகளுள் - கருடன் திசையிலிருந்து பாம்பு திசைக்குப் போகலாம்- பாம்பு திசையிலிருந்து கருடன்றிசைக்குப்போகலாகாது. ஏனெனில், கருடன்இரையெடுக்கப்போகும் பாம்பு இரையாகவரும் ஆதலாலென்க. ஒருவன் யாத்திரைக்கு பக்ஷிமுதலிய சகுனங்கள் பார்க்கும்போது இரையாகும் யோனித்திசையி லிருந்து இரையெடுக்கும் யோனித்திசைக்குப் போகலாகா.

---

அருக்கனிலையிற்கருடனைதொருபூனை ... ✻
நெருக்கியநற்சிங்கமொடுநின்றிலகுநேர்நாய் ... ✻

தருக்கமுடனுகமெலியானைமூசலெட்டும் ... *
இருக்குமுதலிந்திரனேராம்பகையெதிர்த்தே ... *

---

(மனை நூல்.)

மனையை-தச்சுமுழத்தாலளந்து, குழியாக்கி - அந்தக் குழியை-அ-ல்-பெருக்கி-௰உ-ல்-கழித்தமிச்சம் ஆதாயம். கூ-ல்-பெருக்கி-௰-ல்-கழித்தமிச்சம்-செலவு. ச ல்- பெருக்கி-சா-ல்-கழித்தமிச்சம்வயது. அ-ல்-பெருக்கி-உ௰எ-ல் கழித்தமிச்சம் நட்சத்திரம். ௩-ல்-பெருக்கி-அ-ல்-கழித்தமிச்சம் யோனி. கூ-ல்-பெருக்கி-எ-ல்- கழித்தமிச்சம்-வாரம். கூ-ல்-பெருக்கி-ச-ல்-கழித்தமிச்சம் ஜாதி. ச-ல் - பெருக்கி-கூ-ல்-கழித்தமிச்சம் அம்சம். கூ-ல்-பெருக்கி-௩௰-ல்-கழித்தமிச்சம்- திதி. இதில் - ௰ரு-இ-உட்பட்டால்வளர்பிறையாகவும், ௰ரு-இ-மேல் தேய்பிறையாகவுங்கொள்க. ச-ல்-பெருக்கி-௰உ-ல்-கழித்தமிச்சம் இராசி. அ- ல் பெருக்கி-ரு-ல்-கழித்தமிச்சம் சூத்திரமாகக் கொள்ளவும். இவற்றுள் - யோனி-க-இ-கருடன், உ-இ-பூனை, ௩-இ-சிங்கம், ச-இ-நாய், ரு-இ-பாம்பு, சு- இ-எலி, எ-இ - யானை, அ-இ-முசல், எனக்கொள்க. இவற்றுள்-பூனை-எலி-முசல்-ஆகாவாம், அம்சம்-க-இ-சோரம், உ-இ-புத்தி, ௩-இ-சத்தி, ச-இ-தானியம், ரு-இ-ராச்சியம், சு-இ-கிலீபம், எ-இ-வருத்தம், அ-இ-ரோகம், கூ-இ-சுபம், க-சு-எ- அ-ஆகாவாம். சூத்திரம்-க-இ-பாலன், உ-இ-குமரன், ௩-இ-ராசன், ச-இ-கிழவன், ரு-இ-மரணம், இவற்றுள்-ச-ரு- ஆகாவாம். வீட்டின்

அகலத்தை-௯-பங்காக்கிவலத்தில்-௩-பங்கும்,இடத்தில்-௫-பங்குந்தள்ளி நின்றபங்கில் தெருவாசற்படி வைக்கவும். வலத்தில்-௨-பங்கும், இடத்தில்-௩ - பங்குந்தள்ளி நின்றபங்கு-௪-உள்முற்றமாக்கவும் நல்லது. பிராமணருக்குத் தெற்குவடக்கு நீளமாகிய சந்திரபத்தியாகவும், மற்றவர்களுக்குக் கிழக்குமேற்கு நீளமாகிய சூரியபத்தியாகவும், முற்றமிருக்கவேண்டும். ... ... *

---

இட்டவெட்டுடன்பன்னிரண்டாக்கமாம் ... ...*
ஏற்றுமொன்பதோடீரைந்தழிவதாம்... ... *
முட்டில்மூன்றுடனெட்டுமேயோனியாம் ... ...*
மொழிந்தவெட்டுடன்மூவொன்பானுளதாம் *
விட்டிரண்டுடனேழுங்கிழமையாம் ... ... *
விடாதவொன்பதும்வேதமுஞ்சாதியாம் ... *
சிஷ்டிநாலுமணியுமாமங்கிசம் ... ... *
சிறந்தவொன்பதுமுப்பதும்பக்கமே ... *

---

நாலிற்பெருக்கி நானூறுக்கிய ... *
சீலமாமாயுளெனத்தேர் ... *

---

தச்சுமுழம் ஒன்றுக்கு-கைமுழம் இரண்டு. இதுவீட்டெசமானனுடைய கையாற்கொள்க. ... ...*

வீட்டின் உத்தளவைத்தச்சுமுழத்தால் அளந்து குழியாக்கி-௯- ல்-பெருக்கி - ௨௰-ல்-கொடுத்தமிச்சத்தில்-

௬-தள்ளி-எ-இ - நாசம், அ-இ-இடையூறு நீங்கும். ௯-இ திருக்கோடும், ௰-இ-பாலுமன்னமுண்டு. ௰௧-இ-புத்திர ஹானி. ௰௨-இ-புத்திரருண்டு. ௰௩-இ-பகை-நோய் குடிநீ ங்கும். ௰௪-இ-பாக்கியம். ௰௫-இ-பொருளும் உயிருநீங்கு ம். ௰௬-இ-சுபம். ௰௭-இ-மத்திமம். ௰௮-இ- குடிநிலையாது. ௰௯-இ-பொருளழிவு. ௨௰-இ-இன்பமுமுண்டு. மிச்சம் ஆறு வரையிலுண்டாயிருக்கலாகாது ஆகையால் எட்டுவரும் படியாகச்செய்து கொள்ளவும்.

சந்திரனின்ற லக்கினத்தில் அஸ்திபாரஞ்செய்து, புத னின்ற லக்கினத்தில்கட்டி, சுக்கிரனின்றலக்கினத்தில் வேய்ந்து வீடுமூடி, குருநின்ற லக்கினத்தில் கிரகப்பிர வேசம்செய்தால் இந்திரபோகமுண்டு.

---

மதியுதிக்கக்கால்நாட்டிமாலுதிக்கக்கட்டி ... *
விதிவெள்ளிதானுதிக்கவேய்ந்து—பதிதனிலே ... *
மந்திரிதானுதிக்கமாடங்குடிபுகுந்தால் ... *
இந்திரன்போல்வாழ்ந்திருக்கலாம். ... ... *

---

துறைஇரட்டித்தும், கை-தூலம் முதலியன ஒற்றை யாயும், தூண்குத்து உண்டானவீடு எஜமானனுக்குக்கெ டுதிதரும்.

---

எஜமானனுடைய லக்கினத்துக்குக் கிரகப்பிரவேசல க்கினமும், அஸ்திபாரலக்கினமும், வலமாய்-௬-இராசிக்

குள்ளிருக்கின் நலம்.இடமாய்-௬ - இராசிக்குள்ளிருக்கி ன் - ஆகாவாம்.

வலம்-௬-இம்-முத்தித்தனுவென்றும், இடம்-௬-இ-ம்-பேதித்தனுவென்றும் பெயர்.

(கவி.)

நன்னுளினில்மனைகோலிடநானரிடராசி
முன்னாகியவலமாகுதல் முத்தித்தனுவென்றும்
பின்னாகியவிடமாகுதல் பேதித்தனுவென்றும்
பொன்னாவதுமுயிராவதும்போமாறிதுதிண்ணம்

(வாசற்படிவைக்க.)

வீட்டினகலத்தை - ௯-கூறுசெய்து வாமத்தில்- ரு-பங்கும், வலத்தில்-௩-பங்கும் விட்டுவாசற்படிவைக்கவும்

கிழக்குமேற்கு வீதிக்கு-வலம்- கிழக்காகவும், இடம் மேற்காகவும், தெற்குவடக்கு வீதிக்கு -வலம்-வடக்காகவும்,இடம்தெற்காகவும் கொள்க.

(கவி.)

வீட்டினளவைவிளங்கொன்பான்கூறுசெய்து
நீட்டியளந்தநிலைக்கோலால்—கூட்டிடுவாய்
வாமத்தேயைந்தும்வலத்தேயொருமூன்ருய்
சேமத்தேவாசலிடச்செப்பு.

(ஆகாதமாதம்.)

ஆடித்திங்களில் ராவணன்பட்டது மாலமேய்பெரும் பாரதமார்கழி,வீடிட்டான்புரட்டாசியிரணியன்மேவியீ

சனஞ்சுண்டதுமாசியில், பாடிக்காமனெரிந்ததுபங்குனி பார்க்குளேகினன்மாபலியானியில், வீடிட்டில்லங்குடி புகவேண்டினோரோடிட்டேயிரந்துண்பருலகினே.

(நிலைச்சூலம்.)

ச-மூலையுள்ள ஒருசதுரங் கீறி-ச-மூலையிலும் சூலமிட்டுச்சதுரத்தின்-கிழக்கில் -௬-வரையும், தெற்கில்-௨-வரையும்,மேற்கில்-௩-வரையும்,வடக்கில்-௨-வரையும்,கீற-௨௰அ-முனையாம்.கிழக்கிலுள்ள-நடுவரையில் ரவிநின்ற நாளைவைத்து வலமாகஅபிசித்துடன்-எண்ணக் கிழக்கிலுள்ளவரை-௬-ம்-மேற்கிலுள்ளவரை-௩-ம்-ஆக ௰௨-ம்-ஆகியநாள் - வாசக்கால்வைக்க ஆகாவாம். மற்றயநாள்-௰௫-ம் உத்தமம்.

(சாதகப்பொருத்தம்.)

லக்கினத்துக்கு-க-௨-எ-அ-ல்- பாபக்கிரகங்களிருந்தால் முழுப்பாபமென்றும், ச-௰௨-ல். இருந்தால் -காற்பாபமென்றும்,பேராம். மேலும் - செவ்வாய் நீங்கிய பாபிகளுக்கு-ச-ம்-௰௨-ம்- ஆட்சிவீடாயில்- அரையும், உச்சவீடாயில்-முக்காலும், நட்புவீடாயில்-காலும், பகைவீடாயில்-முழுமையும்,நீச்சவீடாயில்-முழுமையிற் குரூரமாகிய பாபமாம். பெண்சாதகபாபம் - பிள்ளைசாதக பாபத்துக்குக் குறைந்திருக்கவேண்டும் - சமனுயுமிருக்கலாம் அதிகப்படலாகாது சில நூல்கள் சுக்கிரன் நின்ற ராசியைத்தொட்டும்-சந்திரனின்ற ராசியதைத்தொட்டும்-பார்க்கும்படி சொல்லுகின்றன.

(கவி.)

திட்டஞ்சொல்பாபர்கேது செய்ரவிமந்தன்ராகு *
எட்டுவாக்கொன்றதேழிலிருந்திடின்முழுதும்பாபம் *
கட்டுநான்கிராறுயிற்காலதாங்குசனுக்கொன்றும் *
இட்டமாய்ப்பார்க்கவெள்ளியிந்துலக்கினத்தைப்பாரோ *

---

ஓர்பாவிமாதருக்காணேறிநிற்கிலொக்கும் *
சீர்காலோடமுக்கால்சேர்சரிநன்றாகும் *
நாரியர்க்குக்காற்பாவிகூடிலாண்மரணம் *
சேர்சிங்கம்வில்கயல்கோறேளாடாஞ்செப்பே *

(க-வது-நட்சத்திரப்பொருத்தம்.)

பெண்ணினுடைய நாள்முதல் புருஷனுடையநாள்வரையில்-எண்ணும்போது உ-௪-௬-௮-௯ - ௰உ-௰௪-௰௬-௰௯-உஉ-உ௩-உ௬-உ௮-உ௯-ம் - நட்சத்திரங்களுத்தமம் பத்துநட்சத்திரமானபின் மறுபடியும் பத்தா நட்சத்திரந்தொடங்கியும், இருபதுநட்சத்திர மானபின் மறுபடியும் இருபதா நட்சத்திரந் தொடங்கியும் எண்ணிக் கொள்ளவும்.

(உ-வது-கணப்பொருத்தம்.)

பெண்ணுடைய நட்சத்திரமும், புருஷனுடையநட்சத்திரமும், ஒரேகணமானால்உத்தமம்; இராக்ஷதகணமும், தேவகணமுமாகில் சிலுகுண்டாம்;இராக்ஷதகணமும், மனுஷகணமுமாகில்மரணம்; மனுஷகணமும், தேவகணமுமாகில் மத்திமம்.

(ங.-வது-மகேந்திரப்பொருத்தம்.)

பெண்ணாள்முதல் - புருஷனாள்வரை எண்ணும்போது-௪-௭-௰-௰௩-௰௬-௰௯-௨௨-௨௫-ஆனால் - உத்தமம்.

(௪- வது-ஸ்திரிதீர்க்கப்பொருத்தம்.)

பெண்ணாள்முதலாக வெண்ணும்போது புருஷனாள் ௰௩-க்கு-மேலானால் உத்தமம்.

(௫-வது-யோனிப்பொருத்தம்.)

யானைக்குப்பகை-மனுஷர், குதிரைக்குப்பகை - பசு, மானுக்கும்-எருமைக்கும் பகை-புலி, பாம்புக்குப்பகை-ஆடு, குரங்குக்குப்பகை-நாய், எலிக்குப்பகை - பூனையாம். இவையுமன்றி இரண்டும் புருஷயோனியானால் ஆகாவாம்.பெண் ஸ்திரீயோனியும்,புருஷன்- புருஷயோனியுமானால் உத்தமம். மாறியிருந்தாலாகாது.

(௬-வது- இராசிப்பொருத்தம்.)

பெண் ராசிமுதல்- புருஷன் ராசிவரை எண்ணினால்-௬-இராசிக்குமேலாயின் உத்தமம்.

(௭-வது-இராசிக்கதிபதிபொருத்தம்.)

பெண்ராசிக்கும், புருஷன்ராசிக்கும், அதிபதிகள் நட்பாயிருக்கில் உத்தமம்.

(அ-வது-வசியப்பொருத்தம்.)

மேஷத்துக்குச்சிங்கமும், விருச்சிகமும்; இடபத்துக்கு - கர்க்கடகமும், துலாமும்; மிதுனத்துக்கு - கன்னி

யும்; கர்க்கடகத்துக்கு - விருச்சிகமும், தனுசும்; சிங்கத்துக்கு-மகரமும்; கன்னிக்கு-ரிஷபமும்,மீனமும்;துலாத்துக்கு-மகரமும்; விருச்சிகத்துக்கு-கர்க்கடகமும், கன்னியும்; தனுசுக்கு-மீனமும்; மகரத்துக்கு-கும்பமும்; கும்பத்துக்கு-மீனமும்;மீனத்துக்கு-மகரமும் வசியமாம்.

(௬-வது-ரச்சுப்பொருத்தம்.)

நேரே மூன்றுமுக்கோணங்கீறி குறுக்காக நான்கு கீற்றுக்கீறினல் - ௨௭-பொருத்தாம். குறுக்காகக்கீறிய அடிவரைக்கு-காலென்றும்,அதன்மேல்வரைக்கு-தொடையென்றும், அதன்மேல்வரைக்கு-வயிறென்றும், அதன்மேல்வரைக்கு - கழுத்தென்றும்,முக்கோணத்துச்சி மூன்றுக்கும்-தலையென்றும்பெயராம்.--முன்சொன்னபொருத்து-௨௭-லும், முதல்பொருத்தில் அச்சுவினியைவைத்து மேல்கீழாய்வலமாகமுறையே யெண்ணும்போது புருஷனுடைய நட்சத்திரமும், பெண்ணுடையநட்சத்திரமும், குறுக்காகக்கீறிய வரைகளில் ஒருவரையிலிருக்கலாகா. கால்வரையில் வந்தால்பொருளழிவு. தொடைவரையில் வந்தால்மலடி. வயிற்றுவரையில்வந்தால் புத்திர ஹானி. கழுத்துவரையில்வந்தால் புருஷனிறப்பு. சிரசுவரையில்வந்தால் பெண்ணிறப்பு இப்படிப் பார்த்துக்கொள்ளவும்.

(௰-வது-வேதப்பொருத்தம்.)

ஒருமுக்கோணங்கீறி மூன்றுமூலையிலும் நன்னான்கு வரைகீறில்-௨௭ - பொருத்தாம்.முன்போல அச்சுவினி

முதலாக எண்ணும்போது இருவர்நாளும் ஒரு குறுக்கு வரையி லிருக்கலாகாது... ... ... ... *

(௰க-வது-மரப்பொருத்தம்.)

முன்சொன்ன மரங்களுக்குள்ளே பலாசு-புன்னை-நாவல்-மகிழ்-பலா-மா-இலுப்பை-சண்பகம்-எருக்கு-வஞ்சி அரசு-ஆல்-அத்தி - மாதுளை- பிராய் என்னும் - ௰௪-ம்-பாலுள்ள மரமாம். மற்றவை வயிரமுள்ள மரமாம்- புருஷன் வயிரமரமும், பெண்-பால்மரமுமானல் புத்திரனுண்டு. பெண்வயிரமரமும்-ஆண் பால் மரமுமானல்- மலடு-இருவரும் வயிரமரமானல் புத்திரசேதம்- இருவரும் பால்மரமானல் அதிநலம். ... ... ... *

(௰௨-வது-பக்ஷிப்பொருத்தம.)

மயிலுக்கும்- கோழிக்கும் - வல்லூருபகை; வலியனுக்கு-ஆந்தையும், ஆந்தைக்கு-வலியனும்,பகை; வல்லூறுக்குவலியனெழிய எல்லாம்பகை. இப்படியே புருஷனுக்கும்-பெண்ணுக்கும் உள்ள பக்ஷிகளில் பகையில்லாதிருக்கவேண்டியது ... ... ... ... *

(௰௩-வது- ஆயுட்சோதனைப்பொருத்தம்.)

பெண்நக்ஷத்திரமுதல்-புருஷனுடைய நக்ஷத்திரம்வரை எண்ணினதொகையை எழிற்பெருக்கி யிருபத்தேழிற்கீந்து நின்றமிச்சமும், புருஷன் நாள்முதல் பெண்ணுள்வரையில் எண்ணிமுன்போற் பெருக்கிக் கழித்த

மிச்சமும் பார்க்கும்போது பெண்நாட்குறையில் பெண் முன்னும், புருஷநாள்குறையில் புருஷன் முன்னும் பத வியடைவனென்பதாம் ... ... *

---

அன்றுபெண்பிறந்தநாடொட்டாணி னுளளவுமெண்ணி
னின்றவன்நாட்கடொட்டுநேரிழைநாளீருகச்
சென்றதையேழிற்ருக்கியிருபத்தேழ்க்கீந்தசேடம் [லே
மன்றலங்குழலாய்தாழ்ந்தோர்மரணமுன்னென்றுசொல்

(௰௪-வது- சாதிப்பொருத்தம்.)

கர்க்கடகம்-மீனம்-தனுசு-மறையவராம்,மேஷம்-விருச்சிகம்- அரசராம், கும்பம்- துலாம் - வைசியராம், இடபம்-மகரம் சூத்திரசாதியாம், மிதுனம்-சிங்கம் - கன்னி-அன்னியசாதியாகும்;ஆதலால்-பெண்சாதிக்கு-புருஷன் சாதி உயர்ந்திருக்கவேண்டும்... ... ... *

(௰௫-வது. ஊர்ப்பொருத்தம்-நரச்சக்கரம்.)

ஊர்ப்பெயர் முதலெழுத்துக்கும், பொருத்தங்கேட்போன்பெயரின் முதலெழுத்துக்கும்,நக்ஷத்திரங்கண்டு, மனித உருவமெழுதி,சிரசில்-௫;முகத்தில்-௩;வயிற்றில்-௫;காலில்-௬;கண்ணில்-௧; குய்யத்தில்-௧; குதத்தில் - ௧; மார்பில்-௪; புஜத்தில்-௧; ஆக உ௰எ- நக்ஷத்திரங்களுமெழுதுக. எவ்வாறெனின், தலையில் - ஊர்நாளைவைத்து பாதபரியந்தம் எண்ண - தலைவன் நாள் - தலை- ௫-ல்-வரின்-நன்று.முகம்-௩-ல் வரின் ஆகாது. வயிறு-௫ம்-உத்

தமம். கால்-௬-ம்-கண், குதம், குய்யம்-௩-ம், ஆ ௬-ம்-ஆ கா. மார்பு-௪-ம், புஜம்-௧-ம், ஆ ௫-ம்- உத்தமம்.

(கவி.)

படிதன்னிலூரின் முதனுடொடங்கிப்பகர்சன்மநாளி னளவாய், முடியைந்துநன்றுமுகமூன்றுதீது முதிர்தொ ந்தியைந்துநன்று, அடியாறிஞேடுநயனத்திலொன்றுமடி யோனிரண்டுமெசடாம், வடிமார்பினுன்கும் புயமீதிலொ ன்றும்மணமேமகிழ்ச்சிதருமே.

(௰௬-வது-நக்ஷத்திரவேதைப்பொருத்தம்.)

அசுபதி-க்கு-கேட்டை, பரணி-க்கு-அனுஷம், கார்த்தி கைக்கு-விசாகம், ரோகணிக்கு-சோதி, திருவாதிரைக்கு திருவோணம், புநர்பூசத்துக்கு-உத்திராடம், பூசத்துக்கு பூராடம், ஆயிலியத்துக்கு-மூலம், மகத்துக்கு-ரேவதி, பூ ரத்துக்கு-உத்திரம், அஸ்தத்துக்குச்-சதயம், பூரட்டாதி க்கு-உத்திரட்டாதி, இவைஒன்றுக்கொன்று வைரம்-மிரு கசிரம்-சித்திரை-அவிட்டம்- இம்மூன்றும் ஒன்றுக்கொ ன்று பரஸ்பரவைரம்-புருஷனுக்கும் பெண்ணுக்கும்- இ ந்தநாள் பொருந்தாது. ... ... ... *

(௰௭-வது-சேவகன்பொருத்தம்.)

தன்னுடைய நக்ஷத்திரமுதல் சேவகன் நக்ஷத்திரம் வரைஎண்ணிக் கண்டதொகையை ௰௨-ல்-கொடுத்தசே டம் ௧-௫-௯-ஆயின்-உத்தமம். ௨-௬-௰-ஆயின்- ஆகாது. ௩-௭-௰௧-ஆயின்-மத்திமம்.

(ய அ-வது கூட்டாளிப்பொருத்தம்.)

தன்பெயரை-ஒற்றுள்பட எழுத்தெண்ணி-ய- ல்-பெருக்கினதொகையுடன் கூட்டாளிபெயரை அவ்வாறெண்ணிக்கூட்டி-அ-ல்-கொடுத்தசேடம்-க-ங-ரு-எ-உத்தமம் உ-ச-சு-அ-ஆகா.

(நித்தயோகினிநிலை.)

பகலை-எட்டுப்பங்காக்கி, க-வது- கிழக்கிலும்,உ-வது-வடமேற்கிலும், ங-வது-தெற்கிலும்,ச-வது வடகிழக்கிலும், ரு-வது-மேற்கிலும், சு - வது- தென்கிழக்கிலும், எ-வது-வடக்கிலும், அ-வது- தென்மேற்கிலும், நித்தியயோகினிநிற்கும்.இது யாத்திரைக்கு பின்பக்கமும்,இடதுபக்கமும், இருக்கவேண்டும். இது நித்தியம் கிழக்குப்பக்க முதலாகக்கொள்ளவும்.

(கவி.)

சீர்பெறுநித்தியயோகினியதனைச் ... ... *
செப்பிடிற்கிழக்குடன்வடமேற் ... ... ...*
கேர்பெறுதெற்கோடாகுமீசானம் ... ... *
எழில்பெறுமேற்குதென்கிழக்கு ... ... *
பார்புகழ்வடக்குப்பகருதென்மேற்குப் ... ... *
படியொருதினத்திலோர்முகூர்த்தம்... ... *
நேருடன்கிழக்கையாதியாக்கொண்டு ... ... *
நிகழ்த்திடுயோகினிநிலையே. ... ... ... *

(திதி நக்ஷத்திர யோகங்களின் விர்த்தி க்ஷயம்.)

| | | | |
|---|---|---|---|
| நக்ஷத்திரவர்த்தனை | நாழிகை, ௬௨, | க்ஷயம், | ௪௰ |
| யோகவர்த்தனை | நாழிகை க, | க்ஷயம், | ௮ |
| திதிவர்த்தனை | நாழிகை ரு௰ | க்ஷயம், | ௬௨ |

(வருஷமகாதிசை.)

ஜனனநக்ஷத்திரமுதல் பங்குனிப்பூர்வபக்ஷ பிரதமையன்றையநக்ஷத்திரம் வரையெண்ணி-ரு-ல்-பெருக்கி-௯ல்-கொடுத்தமிச்சம்-க-இ-ச்சூரியன்-நாள்-உ௰,உ-இ-செவ்வாய், நாள்-உ௰௮,௩-இ-குரு நாள்-ரு௰௮,௪-இ-கேது நாள் - உ௰க,ரு-இ-புதன் நாள்-ரு௬, ௬-இ-சுக்கிரநாள் -எ௰, எ-இ-சனி நாள்-௩௬,௮-இ-சந்திரநாள்-ரு௰, ௯-இ-இராகு நாள்-உ௰க-ஆ நாள் - ௩௱௬௰ - இதில் எந்ததிசைமுதல் தோன்றுகிறதோ அதுமுதலாக மேற்சொன்னமுறைப்படி வருஷதிசைபார்ப்பது. மகாதிசைபோல் பலன் கொள்ளவும்.

(மாதமகாதிசை.)

சனன நக்ஷத்திரமுதல் மாதம்பிறந்த நக்ஷத்திரம் வரை எண்ணிக்கண்டதொகையை எ-ல்- பெருக்கி - ௯-ல் கொடுத்தமிச்சம்-க-க்கு சூரியதிசை,உ-க்கு-புததிசை,௩-க்கு- இராகுதிசை,௪-க்கு-குருதிசை,ரு-க்கு-கேதுதிசை, ௬-க்கு-சந்திரதிசை,எ-க்கு-சனிதிசை, ௮-க்கு - சுக்கிரதிசை, ௯-க்கு-செவ்வாய்திசையாகக்கொள்வதாம்.

கிரகங்களின் மகாதிசை௵ க-க்கு-நாள்-காலாகக்கொள்வது. இவற்றின்பலன். சூரியதிசை-நாள்-க௨-க்கு-அலை

ச்சல், கபாலரோய்; புததிசைநாள்- சவ-க்கு-இலாபம்,ப ந்துதரிசனம்; இராகுதிசை-நாள்-சஉ-க்கு-நீச்சசிநேகம்; குருதிசை-நாள்-ச-க்கு-போஜநசௌக்கியம்,தனலாபம்; கேதுதிசை-நாள்-கஜ-க்கு - தேகபீடை; சந்திரதிசைநா ள்-உஉ-க்கு-சுக்கிலபக்ஷமாயின் தனலாபம், கிருஷ்ணப க்ஷமாயின்தன நஷ்டம்;சனிதிசைநாள்-சஜ-க்கு-விரோ தம், குடும்பகலகம். ஆயுதவிரணம்;சுக்கிரதிசைநாள்-ரு- க்கு-ரத்திஞபரணலாபம்; செவ்வாய்திசை - நாள்-கஜ- க்குபோஜந அசவுக்கியம் கலகம்-என்றறிவதாம்.

(நித்தியமகாதிசை.)

சூரியனின்ற நக்ஷத்திரமுதல் அன்றையநக்ஷத்திரம் வரையெண்ணிக்கண்டதொகையை-உ-ல்-பெருக்கி-இத ஞேடு அவனவன் சனன நக்ஷத்திரமுதல் அன்றைய ந க்ஷத்திரம்வரை- எண்ணிக்கண்டதொகையும்; ஞாயிறு முதல் அன்றையவாரம் வரையுள்ளதொகையையுங்கூட் டி-கூ-ல்கொடுத்துவந்தமிச்சப்-க-க்கு- சூரியதிசை, உ-க் கு-சந்திரசை,ங-க்கு - செவ்வாய்திசை, ச-க்கு - ராகுதி சை, ரு-க்கு-குருதிசை, சு-க்கு- சனிதிசை, எ-க்கு - புத திசை, அ-க்கு- கேதுதிசை, கூ-க்கு - சுக்கிரதிசையாகக் கொண்டுபலன்சொல்லுவதுஇதுநித்தியமகாதிசையாம்.

(மாதபலன்.)

ஜன்மநக்ஷத்திர முதல்-மாதம்பிறந்த - நக்ஷத்திரம்வ ரையெண்ணிக் கண்டதொகையை ஏழிற்பெருக்கி எட்

டிற்கழித்தசேடம் -க-க்கு- ரோகம்,உ-க்கு - இலாபம்,௩-க்கு-செலவு,௪-க்கு-அலைச்சல்,௫-க்கு-போஜநசவுக்கியம்,௬-க்கு-ஐஸ்வரியம்,எ-க்கு-கலகம்,அ-க்கு-கஷ்டமாம்.

(தினபலன்.)

ஜன்மநக்ஷத்திரமுதல் - அன்றய நக்ஷத்திரம் வரை எண்ணிக் கண்டதொகையுடன்-ஞாயிறுமுதல் அன்றய வாரம்வரையிலும்,பிரதமைமுதல் - அன்றைத்திதிவரையிலும்,கண்ட தொகையைச்சேர்த்து, ஒன்பதிற்கழித்த மிச்சம்-க-க்கு-வியாகூலம்,உ-க்கு-சுபம்,௩-க்கு- துர்வார்த்தை,௪-க்கு-பந்து,௫-க்கு-பெண்போகம்,௬-க்கு- சுபம், எ-க்கு-கலகம்,அ-க்கு - ரோகம், ௯ - க்கு - ஞானவாக்கியமாம். ... ... ... *

(தாராபலன்.)

ஜன்மநக்ஷத்திரமுத லன்றயநக்ஷத்திரம்வரை எண்ணிக்கொண்டு வந்த தொகையை ஒன்பதிற்கழித்து, நின்ற மிச்சத்தில்-உ-௪-௬-அ-உத்தமம்.

| | | | |
|---|---|---|---|
| க-வது | ஜன்மம் | ௬-வது | சாதகம். |
| உ-வது | சம்பத்து | எ-வது | வதை. |
| ௩-வது | விபத்து | அ-வது | மைத்திரம். |
| ௪-வது | க்ஷேமம் | ௯-வது | பரமமைத்திரம். |
| ௫-வது | பிரத்தியக்கு | | |

சிலர் ௯ - வது தாரைசுபமென்பர். சிலர்-முதற்பரியாயத்தில்- ஜன்மதாரையும், இரண்டாம்பரியாயத்தில்- விபத்துதாரையும், மூன்றாம்பரியாயத்தில்-பிரத்தியக்குதா

ளையும், மூன்றுபரியாயத்திலும் வதைதாவாயும் ஆகா வென்பர். மற்றவை கூடுமென்பர்.

க-க்கு - சூரியனும்,உ-க்கு-புதனும், ந-க்கு-ராகுவும், ச-க்கு-குருவும்,ரு-க்கு- கேதுவும்,சு-க்கு-சந்திரனும்,எ-க்கு-சனியும், அ-க்கு-சுக்கிரனும், கூ-க்கு- செவ்வாயுமதிபதியாகக்கொள்வது. பலன்முறையே - தாபம்,லாபம், நாசம், தைரியம், கீர்த்தி, லயம், ஆனி,பிரமோதம், மிருத்தியு.

க-க்கு-எ, ந-க்கு-ந, ரு-க்கு-ம்-எ-க்கு-ம்-அ,ஆகநாழிகை நீங்கியமற்றயநாழிகை சுபமாம்.

மயில், குதிரை, ஆடு, யானை, காக்கை, நரி, சிங்கம், கருடன்,அன்னம்,இவைமுறையே தாராவாகனங்களாம்

(பரிகாரம்.)

க-க்கு - சாகதானம்-ந-க்கு-வெல்லம்,ரு-க்கு-உப்பு,எக்கு-எள்ளு, கூ- க்கு -பொன் தானஞ்செய்ய.

(சந்திரபலன்.)

ஜன்மராசிமுதலன்றயதினஞ் சந்திரனிருக்கிற ராசிவரைக்குமெண்ணிக்கொண்டு வந்ததொகையில்,

| | |
|---|---|
| க-க்கு-தேகசௌக்கியம் | எ-க்கு-சௌக்கியவிர்த்தி |
| உ-க்கு-தனஹானி | அ-க்கு-ரோகவிர்த்தி |
| ந-க்கு-திரவியலாபம் | கூ-க்கு-காரியதாமஸம் |
| ச-க்கு-ரோகபயம் | ௰-க்கு-உத்தியோகவிர்த்தி |
| ரு-க்கு-காரியவிக்கினம் | ௰க-க்கு-இஷ்டார்த்திசித்தி |
| சு-க்கு-சத்துருநாசம் | ௰உ-க்கு-தனவிரயம் |

சிலர்சுக்கிலபக்ஷத்தில்—௨-௫-௯-உத்தமமென்றும்,கிருஷ்ணபக்ஷத்தில்—௪-௮-௰௨-உத்தமமென்றும்சொல்லுவார்கள்.

(சித்திரைமாதப்பிறப்பின்பலன்.)

சித்திரைமாதப்பிறப்பு ஞாயிற்றுக்கிழமையாகில் அற்பமழை. திங்களாகில் வெள்ளங்காணும். செவ்வாயாகில்-கலகமுண்டு. புதனாகில்-காற்றதிகம். வியாழமாகில்-சுபமுண்டு. வெள்ளியாகில்-பெருமழையுண்டு. சனியாகில் - மழையில்லை. மேலும்விஷ்டி, அஷ்டமி,உவா,இருத்தை ஆகாவாம்.மூன்றுத்திரங்கள்,அஸ்தம்,திருவோணம்,அவிட்டம்,ரேவதி,மிருகசிரம்,மூலம் உத்தமம். சோதி,சித்திரை,ரோகணி,சதயம்,புனர்பூசம்,பூசம்,மகம், அச்சுவினி,அனுஷம்,மத்திமம்மற்றவை ஆகாவாம்.

(அர்க்கபலன்.)

ஞாயிறுமுதல் சங்கிரமவாரம்வரையிலும், பிரதமைமுதல் சங்கிரமதிதிவரையிலும், அச்சுவினிமுதல் சங்கிரம நக்ஷத்திரவரையிலும் எண்ணி மூன்றுதொகையும் கூட்டி மூன்றிற்கழித்த மிச்சம், க-க்கு-சமார்க்கம், உ-க்கு-அதியார்க்கம், ௩-க்கு-சூனியார்க்கம், இப்படியாக மாதமாதம் தானியவிலையறிகவும். ஆடிமாதம் சூனியார்க்கமாகவேண்டும்.

(ஆவணிமுழக்கம்-ஆவணிமூலம்.)

ஆவணிமீ ௲௨-க்கு-மேற்றினால் நல்லமழையுண்டு.

(ஆவணிபொழுதுகட்டுங்குறி.)

ஆவணிமூலத்துதயங்கதிர்மறையின் ... ... *
மேவுமூலகில்விளைவுண்டாம்—பூவில்... ... *
வெயிலெறிக்குமாயின்வீணேயுலகில் ... ... *
எரிபரக்குமென்றேயியம்பு. ... ... ... *

(நக்ஷத்திரம்விழுமாதங்களின்பலன்.)

சித்திரை, பங்குனி, கார்த்திகை, மார்கழி, ஆவணி மாதங்களில் நக்ஷத்திரம் உதிருமாயின் அரசனுக்குப்பீடை. தை, ஐப்பசி, ஆடி, மாசி மாதங்களில் உதிருமாயின் தானியம்குறையும். ஆனியில் உதிருமாயின் மந்திரிக்கரிஷ்டம். புரட்டாசியில் விழுமாயின் நோயுண்டாம். வைகாசியில் விழுமாயின் மழையில்லையென்றறிக. ... *

(கவி.)

ஆடுகயல்தேள்தனுசுசிங்கமெழுமீன்விழுமேலரசழிவாம்
கோடுமகரந்துலையலவன்கும்பமஃகங்குறைந்திடுமே *
தேடுமிதுனமந்திரிசாம்தெரிவையுந்தம்பிணிபெரிதாம் *
ஓடுமிடபமழையில்லையுடுவீழ்குறியென்றறிந்துரையே.*

(ஆடிஐந்தாந்தேதிப்பலன்.)

ஆடிபிறந்தவைந்தாநாளன்றுபுதனேயாமாயின் ... *
நாடுவிளையுமொருபோகநல்லவியாழமிருபோகம் *
நீடுசெவ்வாய்கதிர்சாவிநெடியபுகர்க்குமழையுண்டாம் *
கூடுதிங்கள்மழைமந்தன்குலவுவெய்யோன்பயிர்நாசம் *

(ஆடிமீ உத்திராடக்காற்று.)

ஆடிமாதம் உத்திராட நக்ஷத்திரத்தில் உதயத்தில் கீழ்காற்றடித்தால் பின்மாரியுண்டாம். அக்கினிமூலைக்காற்றும், தென்காற்றுமடித்தால், கலகமும் பஞ்சமுமுண்டாம். தென்மேற்குக் காற்றடித்தால் விளைவில்லை. மேல்காற்றும், வடகாற்றும், அடித்தால் நல்லமழையுண்டு. வடமேற்குக் காற்றடித்தால் மிருகபலிப்பும், விட்டிலும், புழுவும், உண்டாகும். வடகிழக்குக் காற்றடித்தால், முன்மாரியுண்டாம். அப்போது பூரணையுங்கூடினால் உத்தமம். அன்று உதயத்தில் பொழுதுகட்டினால் நல்ல மழையுண்டு.

(ஆடிமீ பஞ்சமிக்குறி.)

ஆடிமாதம் வளர்பிறைப்பஞ்சமி - ஞாயிற்றுக்கிழமையில்வரில் கொஞ்சமழையுண்டு, திங்கட்கிழமையில்வரில் வெள்ளங்காணும், செவ்வாய்க்கிழமையில்வரில் சண்டையுண்டாம், புதன்கிழமையில்வரில் பெருங்காற்றடிக்கும், வியாழக்கிழமையில்வரில் நல்லவிளைவு, வெள்ளிக்கிழமையில்வரில் பெருமழையுண்டு, சனிக்கிழமையில்வரில் விளைவில்லை.

(ஆடிமீ த் திதிக்குறி.)

ஆடிமாதம்-வளர்பிறை நவமியும், சோதி நக்ஷத்திரமுங்கூடின நாளில் மந்தாரமாவது, மழையாவது, காற்றாவது, குமுறலாவது, மின்னலாவது, உண்டானால் முன்ம

ழை; தசமியும், விசாகமும், கூடினபோது இக்குறியுண்டாயின் நடுவில்மழை; ஏகாதசியும், அனுஷமுங் கூடினபோது இக்குறியுண்டாயின் பின்மழையாம்; ஆடிமாதம் தேய்பிறைத் தசமியுடனேயாவது, ஏகாதசியுடனேயாவது, ரோகணிநக்ஷத்திரங் கூடினபோது பொழுது கட்டினால் நல்லமழையுண்டு.

(கர்ப்போட்டம்.)

ஆனிமாதத்துக்கு-கர்ப்போட்டநாள்-௧௬;
ஆடிமாதம்-ழூ-கார்த்திகைமாதம்வரை- மாதம்-௧-இ- நாள்-௨௰-ஆ மாதம்-௫-இ-நாள்-௰௧௰; மார்கழிமாதத்து-இ நாள்-௧; தை-ழூ-வைகாசிவரை-மாதம்-௫-இ-மாதம்-௧இ-நாழிகை-௰௨-ஆ நாள்-௧. ஆ கர்ப்போட்டநாள்-௰௬-இவைபூராட நக்ஷத்திரத்தில் சூரியன்வரும் நாளாம்.

(கவி.)

பானுதனுவிற்பதின்மூன்றேமுக்கால்மேல் ... ... *
ஆனிக்குக் கர்ப்ப மறுகாலம்-மானேகேள்... ... *
நண்டுமுதற் றேளளவு நாலரை நான்மாகாணி ...*
கொண்டதனுவுக்கொன்றேகூறு ... ... *
தைமுதல்வை காசிவரைத் தானஞ்சாகும்மதிக்கு... *
மெய்யாய்நா ளொன்றே விளம்பு... ... ... *

(பரிவேடக்குறி.)

ஆடிமாதம், பூரணையில்-முதற்பத்து நாழிகையில் - சந்திரனைப்பரிவேடமிட்டால்-ஐப்பசியிலேயும்; ௨-ம்பத்திலிட்டால்-கார்த்திகையிலேயும்; ௩-ம் பத்திலிட்டால்-மார்க

ழியிலேயும்;மழையுண்டு;அன்றிராத்திரிமுழுமையும்இட்டிருந்தால் அம்மூன்றுமாதங்களிலும் அடைமழையாம்.

(கவி,)

கடகமாதப் பூரணைராத்திரி ... ... ... *
கனத்தசந்திரனைப்பரிவேடமே ... ... *
இடின்முதற்பத் திலேப்பசிக்காமழை ... ... *
இலங்குகார்த்திகைக் காருடுப்பத்ததே ... *
விடியநேரங் கடைமார்கழிப்பரி... ... ... *
வேடமுப்பது நாழிகையும்மிட ... ... ...*
அடைமழையந்த மூன்றுமதிக்குமென் ... ... *
ருய்ந்தமுத்தமி ழோர்களறைந்தனர் ... *

சந்திரனை-குரு-சுக்கிரருடனே பரிவேடமிட்டால் நல்லமழையுண்டு. செவ்வாய்-சனியுடன்-பரிவேடமிடில் மழையில்லை. கிரகணகாலத்தில் பரிவேடமுண்டானால்ராஜாக்களுக்கு ஆகாது.

(மகவோட்டம்.)

மாசிமாதம்பௌர்ணிமியில்-சந்திரனும், மகநக்ஷத்திரமும், உச்சமாகும்போது.

| மதிக்குவடக்கில் நக்ஷத்திரம் | | | | | மதிக்குத்தெற்கில் நக்ஷத்திரம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க- | தள்ளில்- | வ- | பங்கு - | நாசம் | க- | தள்ளில்- | வ- | பங்கு- | சுபம் |
| உ- | ,, | -௨- | ,, | ,, | உ- | ,, | -௨- | ,, | ,, |
| ௩- | ,, | ஔ | ,, | ,, | ௩- | ,, | ஔ | ,, | ,, |
| ௪- | ,, | முழு | ,, | ,, | ௪- | ,, | முழு | ,, | ,, |

(கவி.)

காணுமாசிக் கலைமதியைக் கருதுமகமீ னுன்கதனில் *
பேணுந்தென்பான்மீன்சேரிற் பெரிதாமஃகந்தானென்ப
பூணிலிரண்டுமுக்காலாம்பொருந்துமூன்றிற்பாதியதாம்
சேணில்வடபால்மீன்சேரில்செகத்திலன்னஞ்சிறிதாமே

(மூன்றாம்பிறை.)

பங்குனியும்-சித்திரையும் - தென்கோடுயரவேண்டும். வைகாசி- ௲- மார்கழிவரை - வடகோடுயரவேண்டும். தையும்-மாசியும்-சமனாக இருக்கவேண்டும். இல்லாவிடின்-கலகமும்-பஞ்சமும்-உண்டாகும்.

(கவி.)

மீனுடுதெற்குயரமிக்கெட்டு மேவடக்காம் ... ... *
தான்மகரகும்பஞ் சரியாக-மானேகேள்... ... *
சொன்னபடிசோம னிரானெனிலோகோன்மடிவன் *
அன்ன மரிதாய் விடும். ... ... ... *

பிரதமை-துதியையும் - ஞாயிறு - வியாழம் - வெள்ளியும்-பிறைபார்க்க நல்லது.சதுர்த்தசி ஆகாது. ... *

(வானவிற்குறி.)

ஆனி, ஆடி, ஆவணி, இந்த மாதங்களில் கிழக்கே இந்திரவில்லுண்டானல் பஞ்சமுண்டாகும்.

(கவி.)

ஆனியுடனடி யாவணியித்திங்களிலே ... ...*
கூனியேவான்விற்குண திசையில்—மானேகேள்... *

மேவின்மழையறுமேவிண்ணுடருக்குமே ... *
பூவின்விழவறுந்துபோம். ... ... ... *

(சோதிமின்னல்.)

ஐப்பசிமீ சோதிநக்ஷத்திரத்தில் சூரியன்வரும்நாளில் கிழக்கில் மின்னின்மழையுண்டு. ... ... *

(மழைக்குறி.)

வைகாசிமீ தேய்பிறைச்சதுர்த்தியில் மழைபெய்யின்நல்லமழையுண்டு. ... ... ... ...*

(தேதிமழை.)

ஆனிமீ ൰-உ, ஆடிமீ அ-உ, ஆவணிமீ கூ-உ, புரட்டாசிமீ ச-உ, ஐப்பசிமீ உ-உ, கார்த்திகைமீ க-உ, மார்கழிமீ க-உ இவைகளில் மழைபெய்யின் நல்லமழையுண்டு.

(பஞ்சகம்பார்க்க.)

பஞ்சகம்பார்க்கவேண்டிய காலம்வரையில் - ஞாயிறுமுதலாக அன்றயவாரம் வரையும், பிரதமைமுதலாக அன்றயத்திதிவரையும், அச்சுவினிமுதல் அன்றயநக்ஷத்திரம்வரையும், மேஷமுதல் அப்போதய லக்கினம் வரையும் எண்ணிக்கண்ட தொகையை - ஒன்பதிற்கழித்து மிச்சம்-௩, ௫, ௭, ௯, உத்தமம். மற்ற-க, உ, ச, சு, அ, நீக்கப்படும்.

ஒன்றுமிருத்தியுபஞ்சகம்,௨-அக்கினிபஞ்சகம்,௪-ராஜபஞ்சகம்,௬-சோரபஞ்சகம்,௮-ரோகபஞ்சகம்- இவ்வாறுகண்டுகொள்க.

அவசியமாய்ப் பார்க்கவேண்டும்பொழுது மத்தியானத்தில்-ராஜபஞ்சகமும்,அக்கினிபஞ்சகமும்;இராத்திரியில்-சோரபஞ்சகமும்,ரோகபஞ்சகமும்; எல்லாக்கர்மங்களிலும்-மிருத்தியுபஞ்சகமும்-ஆகாவாம்.

புதனில் மிருத்தியுபஞ்சகமும்; சனியில் சோரபஞ்சகமும்; வியாழம் வெள்ளியில் இராஜபஞ்சகமும்; செவ்வாயில் அக்கினிபஞ்சகமும்; ஞாயறில் ரோகபஞ்சகமும்ஆகாவாம்.

சிலர் திங்களில் ராஜபஞ்சகமும்; புதன் வியாழங்களில் சோரபஞ்சகமும்; வெள்ளிசனியில் மிருத்தியுபஞ்சகமும் ஆகாவென்பர்.முக்கியமாய்விலாகத்து துருவங்கூட்டிப்பார்க்கவேண்டும். வடதேசங்களில் சுக்கிலபிரதமை முதலாகக் கூட்டவேண்டுமென்பர் - இப்படிப்பலவிதமாகக் கூறினும், தேசவழக்கப்படியே பார்க்கவேண்டுமென்பதேதுணிவு.

(பஞ்சிகதுருவம்.)

ஞாயிற்றுக்கிழமைக்கு-௰௫,திங்களுக்கு-௰,செவ்வாய்க்கு-௰௨,புதனுக்கு-௩;வியாழத்துக்கு-௮,வெள்ளிக்கு-௮,சனிக்கு-௩,இவ்வாறு துருவங்கூட்டிப்பார்க்கவும்.

திங்கள்பத்துத்தினகான்மூவைந்து ... *
தங்குபொன்புகர்தானுமோரொட்டதாம் ... *
துங்கமால்சனிமூன்ருரலீராரும் ... ... *
பொங்கமாகுந்துருவம்புகன்றிடின். ... *

(இன்னுமொரு வித துருவம்.)

மேஷசிங்கங்களுக்கு-௪,இடபகர்க்கடகங்களுக்கு-ரு, மிதுனத்துக்கு-௬, துலாகும்பங்களுக்கு-௨, கன்னிமீன ங்களுக்கு-௩,விருச்சிக தனுசு மகரங்களுக்கு-க, இவ்வா று துருவங்கூட்டிப் பார்ப்பதும் ஒன்று.

(கவி.)

மரியரியொருநான்காமற்றெருதுநண்டைந்ததாகும் *
பெருகியமிதுனமாறும்பெருந்துலேகுடமும்மொண்டாம் *
அரிவைமீன்மூன்றதாகுமானதேள்தனுமாஞென்றே *
வருவதுபஞ்சிகத்தில்வண்மையாந்துருவங்கூட்டே. *

(இன்னுமொருவித துருவம்.)

மிருத்துபஞ்சகத்துக்கு-௪,கோரபஞ்சகத்துக்கு - ரு, இராஜபஞ்சகத்துக்கு - ௰, அக்கினிபஞ்சகத்துக்கு-௰௨, ரோகபஞ்சகத்துக்கு - ௰ரு, இவ்வாறு துருவங்கூட்டிப் பார்க்கவும். ... ... ... *

(கவி.)

திதிவாரமிராசியுடனுண்மீன்சேர்த்து ... *
செப்பியநான்கெட்டீனாந்தீராறேடு ... *
பதிபுகழுமூவைந்துமுறையேகூட்டிப் ... *
பகரொன்பதிற்கிந்தசேடமொன்று ... *

விதியாறுநான்குமோரிரண்டுமெட்டும் ... *
மிருத்திசோரம்ராஜமக்கினிரோகம் ... *
மதிமகற்குஞ்சனிக்குநற்குருபுகர்க்கு ... *
மவிர்திங்கள்செவ்வாய்நல்லருக்கற்காகா. *

(அன்றயநக்ஷத்திரம்பார்க்க.)

சித்திரைமாதமுதல் சென்றமாதத்தை இரட்டித்து, இதனோடு சுக்கிலபக்ஷப் பிரதமைமுதல் அமாவாசியை வரையிலுஞ்சென்ற திதிகளையுங்கூட்டி, உஎ-இ-உட்படின் அதில் ஒன்றுதள்ளவும். உ௰எ-இ-மேற்பட்டால்-உ௰எ-ம்-தள்ளிநின்றதை அசுபதிமுதல் எண்ணிக்கண்டநாள் அன்றயநாளாம்.

(நக்ஷத்திரகந்தாயபலன்.)

பங்குனிமாதம் பூர்வபக்கப்பிரதமையில் - அன்றயதிதிவாரநக்ஷத்திர யோககரணங்களை அவ்வவாதிதொட்டெண்ணிக்கண்டதொகையை - ௩-ல்-பெருக்கி- அ-ல்-கொடுத்தசேடம்-முதற்கந்தாயம், எ-ல்-பெருக்கி - ௩-ல் கொடுத்தசேடம்-இரண்டாங்கந்தாயம்,௩-ல் - பெருக்கி-ரு-ல்-கொடுத்தசேடம்-மூன்றுங்கந்தாயமாம். முதல் பூச்சியம்-வியாதி.உ-வதுபூச்சியம்-கடன்.௩-வது பூச்சியம் சொற்பபலன்.மூன்றும் பூச்சியம் அசௌக்கியம். மூன்றும் பூச்சியமில்லையாயின்-சௌக்கியமாம்.

(ஆண்பெண்ணறிய.)

பெண்ணினுடைய பெயரெழுத்தை ஒற்றுள்படவெண்ணி-௩-ல்- பெருக்கி - வளர்பிறைத்திதியாதி அன்றய

வஸ்த்திதியுங்கூட்டி - எ-இ-கொடுத்து மிச்சம்- ஒற்றை யாயின் ஆண்-இரட்டையாயின் பெண்ணென அறிவது.

(கவி.)

காரிகைகர்ப்பந்தன்னைக் கருத்தினலறியவேண்டின் *
பேரெழுத்தொற்றேடெண்ணிப்பெட்புடன்மூன்றிற்ற
வாருறுமாதேமுன்னுமருவாதிபக்ஷங்கூட்டி [க்கி
ஏருமேழ்க்கீந்தசேடமிரட்டைபெண்ணொற்றையாணே.

(உதய ஆருடக்கவிப்புராசிகள்.)

ஆருடங்கேட்டராசி - உதயராசியாம். ஆருடங்கேட்போன் சொன்னலக்கமுதலியவைகளின்ராசி ஆருடராசியாம். கவிப்புராசி-கன்னி துலா மீனங்களுக்கு- இடபமும், மிதுனகர்க்கடக சிங்கங்களுக்கு மேடமும், தனுசுமகரவிருச்சிக கும்பங்களுக்கு மிதுனமுமாகும்.

(கவி.)

கன்னிகோல்மீனமாயின்கவித்திடும்விடையாமென்பர்,*
மன்னுசெவ்வரியாழ்நண்டுவரின்மேடங்கவிக்குமென்பர்
கொன்னவிற்சுறாதேள்கும்பங் குலவினல்மிதுனமாகும்
இன்னவாறுதயராசிக்கியம்புவர்கவிப்புத்தானே. *

(ஆருடம்.)

ஆருடராசிமுதலாகச்சூரியனின்ற இராசிவரையெண்ணிக்கண்டதொகையை உதயராசிமுதலாக வெண்ணிக்கண்டராசிநாதனைக் கொண்டுபலன்சொல்லவும்.

(கவி.)

ஆருடராசிதொட்டேயாதித்தனளவுமெண்ணிச் *
சேருமத்தொகையையப்போசிறந்தராசியில்வைத்தெண்
நேருறுராசிநாதனின்றவனாருடத்தைச் [ண
சீருடனுரைப்பதென்றேசெப்பினர்கணிதநூலோர் *

(இன்னுமொருவிதம்.)

உதயலக்கினந்தொட்டு அந்தலக்கினாதிபதி நின்ற இராசிவரை எண்ணினதொகை ஒற்றையாயினுத்தமம். இரட்டையாயின் மத்திமமாம்.

(வியாதிப்படிகன்தீராதநாள்.)

சோதிசதயமுப்பூரஞ்சொல்லுமாயிலுடன்கேட்டை *
தீதாம்பரணியாதிரைநாள்செவ்வாய்சனிஞாயிறுவாரம்*
ஓதுநவமிதுவாதேசியுற்றசதுர்த்திசஷ்டியினில் [யாரோ.
பேதைமடவாய்பிணிகொள்வோர்பிரமன்வரினும்பிழை

(வியாதிச்சக்கரம்.)

ஒன்றுக்குள்ளொன்றாக- ௩-சதுரங்கீறி,௪ - மூலைகளிலும்-௩-சதுரத்தின் மூலைகளும்- சேரும்படி ஒவ்வொருவரைகீறி-௪-பக்கங்களிலும் நடுவில் மூன்றுவரையும் சேரும்படி ஒவ்வொருவரைகீறில்-௨௪-பொருத்தாகும்.இவற்றுடன் உள்சதுரத்தின் நடுவரை நான்கின் முனையிலும் -௪- புள்ளியிட்டால்-௨அ-ஆகும். இதன்கீழ். திசையில்சூரியனின்றநாளைவைத்து அபிசித்துடன் வலமாகவி

யாதிப்பட்டவன் சனனநக்ஷத்திரவரையெண்ணிக் கண்டநாள்-பிராணன். கீழ்த்திசையில் வியாதிப்பட்டவனைவைத்து முன்போல் சந்திரனின்றநாள்வரை யெண்ணிக்கண்டநாள் தேகம். கீழ்த்திசையில் கார்த்திகையை வைத்து அபிசித்துடன் இடமாக வியாதிப்பட்டவனாள் வரை யெண்ணிக்கண்டநாள் மிருத்தியுவென்றறிந்து-மிருத்தியுந்தேகமும்-ஒருவரையில்-அல்லது- ஒருபொருத்தில்-வந்தாலும், மிருத்தியும்பிராணனும் முன்போல்வந்தாலும் வருத்தப்பட்டுத் தேறுவான். பிராணன், தேகம், மிருத்தியு இம்மூன்றும் ஒருவரையிலாவது ஒருபொருத்திலாவது நின்றால் உடனேமரணம்- மேற்சொன்ன மூன்றும் ஒருபொருத்தி லிருப்பது அதிகுரூரமென்றறிக.

(திசாபுத்திபிரிக்க.)

திசாநாதனுடைய மகாதிசைவருஷத்தையும் புத்திநாதனுடைய மகாதிசைவருஷத்தையும் பெருக்கிக் கண்டதொகையின் எண்-க- இ-ந - நாளாகக் கொள்வதுபுத்தியாம்.

(கவி.)

கோள்களின்றிசையிற்புத்திகுறித்திடத்திசையோனுண்
நீள்புத்திநாதனுண்டானேர்படப்பெருக்கிக்கண்ட [டை
வாளமர்தொகையொன்றிற்குமருவுநாண்மூன்றதாகும்*
வாள்கடல்கொண்டைவண்டுவனசமாம்விழியினளே *

(அந்தரம்பிரிக்க.)

கிரகங்களின் புத்தியில்வந்தவருஷம்-க-இ-நாள்-௩- ஆகவும்,மாதம்-க-இ-கால் நாளாகவும்,நாள்-க-இ - அரைநாழிகையாகவும் கண்டு- அவ்வக்கிரகங்களின் திசாவருஷங்களில் பெருக்கினதொகை- அவ்வக்கிரகங்களின் அந்தரமென்றறிவது.

(கவி.)

அவரவரபகாரத்திலுண்டொன்றில்மூன்றுநாளும்
நவிலுமாதங்கால்நாளுநாளொன்றிற்பாதிக்கன்னல்[லந்த
இவைமூன்றுதொகையுங்கோட்கடிசையாண்டிற்பெருக்கி
தவலறுதொகையைச்சேர்க்கத்தான்வருமந்தரந்தான்.

(அந்தராந்தரம்பிரிக்க.)

கிரகங்களின் அந்தரத்தில் வந்நாள்-க-இ-அரைநாழிகையாகவும்,நாழிகை-க-இ- அரைவிநாடியாகவும்,கண்டு-அவ்வக்கிரகங்களின் திசாவருஷங்களாற் பெருக்கின தொகை அவ்வக்கிரகங்களின்-அந்தராந்தரமாகும்.

(கவி.)

ஒருநாளைக்கோரரைநாழிகையாத்தோற்றும்
ஒருநாழிகைக்கரைவிநாடி-துருவமாம்.
எந்தத்திசைக்குமிவர்வருடங்கொண்டெண்ண
அந்தமாமுள்ளந்தரம்.

(சூக்ஷமம்பிரிக்க.)

கிரகங்களின்-நாழிகை-க-இ- அரைவிநாடியாகவும், விநாடி-கஇ-அரைவிகலையாகவுங் கொண்டு - முன்போலப் பெருக்கிக்கொள்ளவும்-இதுசூக்ஷமமாம்.

(ருதுவாரம்.)

| | |
|---|---|
| ஞாயிறு — புத்திரரில்லை | வியாழம்— —தனமுண்டு |
| திங்கள் — — பதிவிரதை | வெள்ளி— சுகமுடையாள் |
| செவ்வாய் — — விதவை | சனி — — தரித்திரியாம் |
| புதன் — புத்திரருண்டாம் | |

(ருதுநட்சத்திரம்.)

| | |
|---|---|
| அச்சுவினி... ...விதவை | சோதி ... ... குடும்பி |
| பரணி ... ... புத்திரவதி | விசாகம் ... ... அமங்கலை |
| கார்த்திகை ... ...மலடி | அனுஷம் ... ... ரோகி |
| ரோகணி நன்மையுடையள் | கேட்டை ... ...பரஸ்திரி |
| மிருகசிரம்-புருஷற்கினியள் | மூலம் ... பாலுடையவள் |
| ஆதிரை-வெறுப்புள்ளவள் | பூராடம் ... அடிமைதேடும் |
| புநர்பூசம்... சுகமுடையள் | உத்திராடம் ... தர்மிஷ்டி |
| பூசம்... ... சீருடையவள் | திருவோணம் -பாக்கியவதி |
| ஆயிலியம் ... வயிறழிவு | அவிட்டம்- பொருளுடைய |
| மகம்...பத்தாவுக்குநல்லள் | சதயம்...பொருளழிவு [வள் |
| பூரம் ... ... ...மலடி | பூரட்டாதி ... ... மலடி |
| உத்திரம்...பிரயோசனவதி | உத்திரட்டாதி ... தரித்திரி |
| அஸ்தம் ... ... நல்லள் | ரேவதி ... ... ... ரோகி |
| சித்திரை... அறிவுள்ளவள் | |

(ருதுலக்கின இடம்.)

மேஷம் ... சிங்கம் வீட்டிற்குப்புறத்தில் ❋
ரிஷபம் ... ... ❋ பசுத்தொழுவத்தில் ❋
துலாம் ... கன்னி நால்வர்க்குநடுவில் ❋
விருச்சிகம் மிதுனம் துயிலவிழ்த்துடுக்கையில்
தனுசு ... கும்பம் வீட்டிற்குள்ளே... ❋
கடகம் மகரம் மீனம் தண்ணீர்க்கரையில் ❋

மேஷம்-விருச்சிகம்-பரஸ்திரி,ரிஷபம் - தனுசு - கன்னி❋
மிதுனம்-வியபிசாரி,கர்க்கடகம்-ஒழுக்கமில்லாதவள், ❋
சிங்கம்-கன்னி-நெறியுடையாள், துலாம்-பாட்டாளி, ❋
மகரம்-கற்புடையவள்;கும்பம் பொருளுண்டாம். ❋

(ஆரூடத்திற்கு.)

| (திக்கு.) | (உடை.) | (பலன்.) | (சந்ததி.) |
|---|---|---|---|
| கிழக்கு | வெள்ளை | சோரம்போவள் | எ |
| தென்கிழக்கு | கறுப்பு | | க |
| தெற்கு | நீலம் | | ௦ |
| தென்மேற்கு | வெள்ளை | ரோகி | ௪ |
| மேற்கு | அழுக்கு | நல்லது | ரு |
| வடமேற்கு | மஞ்சட்கலந்தசிவப்பு | சக்களத்தியுடையவள் | ரு |
| வடக்கு | துவணாவண்ணம் | செல்வமுண்டு | ௦ |
| வடமேற்கு | நல்ல | தரித்திரம் | ௦ |

## (ருதுத்திதி.)

| | |
|---|---|
| பிரதமை — — — கன்னி | நவமி — — — — துக்கி |
| துதியை — — — அழகு | தசமி — தர்மிஷ்டி |
| திரிதியை - இன்பமுடையள் | ஏகாதசி — துக்கி |
| சதுர்த்தசி — சத்துருவுண்டு | துவாதசி - பலமுடையவள் |
| பஞ்சமி — புத்திருருண்டு | திரயோதசி — — கோபி |
| சஷ்டி — ஆசாரமுடையவள் | சதுர்த்தசி - சோரம்போவள் |
| சத்தமி — புத்திரருண்டு | அமவாசியை } பாட்டாளி |
| அஷ்டமி — பெற்றிழப்பாள் | பௌர்ணிமி } |

## (கவி.)

உத்திராடமாதியாமாறுமாறுமுத்தமம் ... *
பித்தனர்பிறந்தநாள்மற்றையேழுமத்திமம் *
அத்தமோடுசித்திரையனந்தவாழ்வுகுன்றிடும் ... *
மற்றையாறுதன்னிலேமங்கைநூலிழப்பளே *

## (ருதுப்பாவம்.)

ரவியும், இராகுமிருந்தால் ... ... விதவை
மதியிருந்தால் ... ... ... புத்திரநாசம்
செவ்வாயிருந்தால் ... ... ... வேசை
புதனிருந்தால் ... ... ... ... மலடி
குருவிருந்தால் ... ... ... ... நல்லது
சுக்கிரனுஞ்சனியுமிருந்தால் - குலவீணியாவள்
கேதுவிருந்தால் ... ... உறவுக்குவிரோதி

௭-ஆம்-இடம்சுத்தமாயின்-எல்லாருக்கு நல்லவளாக விருப்பாள்.

(கவி.)

கன்னிதிரண்டநாழிகையிற்கண்டராசிதனக்கேழில் ...*
மன்னிப்பரிதியுறவிதவைமதியாகிற்புத்திரநாசம் [றே
துன்னுஞ்சேயேல்வேசைபுதன் சொல்லுமலடியாமென்
பொன்னின்றிடில்நன்றாம்புகரும்பொல்லாச்சனியேல்கு
———— [லவீணி
ஈனராகுவெனில்விதவையென்பார்கேதுநின்றிடிலோ *
மானவுறவோர்க்குப்பகையேயாவாள்மகிழுமேழிடமோ
மானேசுத்தமாவிருக்கின்மற்றுள்ளோர்களனைவருக்கும்
தானேநல்லளாயிருப்பள்சம்பத்துடனேவாழ்வாளே. *

(அஷ்டகவர்க்கம்.)

| | | | |
|---|---|---|---|
| சூரியன் பரல் ௪௮-க்கு விபரம். | ரவி- | ௧-௨-௪-௭-௮-௯-௰-௰௧- | ஆக ௮. |
| | மதி- | ௩-௬-௰-௰௧- | ஆக ௪. |
| | குசன்- | ௧-௨-௪-௭-௮-௯-௰-௰௧- | ஆக ௮. |
| | புதன்- | ௩-௫-௬-௯-௰-௰௧-௰௨- | ஆக ௭. |
| | குரு- | ௫-௬-௯-௰௧ | ஆக ௪. |
| | புகர்- | ௬-௭-௰௨- | ஆக ௩. |
| | சனி- | ௧-௨-௪-௭-௮-௯-௰-௰௧- | ஆக ௮. |
| | லக்கினம்- | ௩-௪-௬-௰-௰௧-௰௨. | ஆக ௬. |

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் பரல் ௪௯-க்கு விபரம். | ரவி- | ௩-௬-௭-௮-௰-௰௧. | ஆக ௬. |
| | மதி- | ௧-௩-௬-௭-௰-௰௧. | ஆக ௬. |
| | குசன்- | ௨-௩-௫-௬-௯-௰-௰௧. | ஆக ௭. |
| | புதன்- | ௧-௩-௪-௫-௭-௮-௰-௰௧. | ஆக ௮. |
| | குரு- | ௧-௪-௭-௮-௰-௰௧-௰௨. | ஆக ௭. |
| | புகர்- | ௩-௪-௫-௭-௯-௰-௰௧. | ஆக ௭. |
| | சனி- | ௩-௫-௬-௰௧. | ஆக ௪. |
| | லக்கினம்- | ௩-௬-௰-௰௧. | ஆக ௪. |
| செவ்வாய் பரல் ௩௯-க்கு விபரம். | ரவி- | ௩-௫-௬-௰-௰௧. | ஆக ௫. |
| | மதி- | ௩-௬-௰௧. | ஆக ௩. |
| | குசன்- | ௧-௨-௪-௭-௮-௰-௰௧. | ஆக ௭. |
| | புதன்- | ௩-௫-௬-௰௧. | ஆக ௪. |
| | குரு- | ௬-௰-௰௧-௰௨. | ஆக ௪. |
| | புகர்- | ௬-௮-௰௧-௰௨. | ஆக ௪. |
| | சனி- | ௧-௪-௭-௮-௯-௰-௰௧. | ஆக ௭. |
| | லக்கினம்- | ௧-௩-௬-௰-௰௧. | ஆக ௫. |
| புதன் பரல் ௫௪-க்கு விபரம். | ரவி- | ௫-௬-௯-௰௧-௰௨. | ஆக ௫. |
| | மதி- | ௨-௪-௬-௮-௰-௰௧. | ஆக ௬. |
| | குசன்- | ௧-௨-௪-௭-௮-௯-௰-௰௧. | ஆக ௮. |
| | புதன்- | ௧-௩-௫-௬-௯-௰-௰௧-௰௨. | ஆக ௮. |
| | குரு- | ௬-௮-௰௧-௰௨. | ஆக ௪. |
| | புகர்- | ௧-௨-௩-௪-௫-௮-௯-௰௧. | ஆக ௮. |
| | சனி- | ௧-௨-௪-௭-௮-௯-௰-௰௧. | ஆக ௮. |
| | லக்கினம்- | ௧-௨-௪-௬-௮-௰-௰௧. | ஆக ௭. |

| | | | |
|---|---|---|---|
| குரு பரல் ௫௬-க்கு விபரம். | ரவி- | ௧-௨-௩-௪-௭-௮-௯-௰-௰௧. | ஆக ௯. |
| | மதி- | ௨-௫-௭-௯-௰௧. | ஆக ௫. |
| | குசன்- | ௧-௨-௪-௭-௮-௰-௰௧. | ஆக ௭. |
| | புதன்- | ௧-௨-௪-௫-௬-௯-௰-௰௧. | ஆக ௮. |
| | குரு- | ௧-௨-௩-௪-௭-௮-௰-௰௧. | ஆக ௮. |
| | புகர்- | ௨-௫-௬-௯-௰-௰௧. | ஆக ௬. |
| | சனி- | ௩-௫-௬-௰௨. | ஆக ௪. |
| | லக்கினம்- | ௧-௨-௪-௫-௬-௭-௯-௰-௰௧. | ஆக ௯. |
| சுக்கிரன் பரல் ௫௨-க்கு விபரம். | ரவி- | ௮-௰௧.௰௨. | ஆக ௩. |
| | மதி- | ௧-௨-௩-௪-௫-௮-௯-௰௧-௰௨. | ஆக ௯. |
| | குசன்- | ௩-௫-௬-௯-௰௧-௰௨. | ஆக ௬. |
| | புதன்- | ௩-௫-௬-௯-௰௧. | ஆக ௫. |
| | குரு- | ௫-௮-௯-௰-௰௧. | ஆக ௫. |
| | புகர்- | ௧-௨-௩-௪-௫-௮-௯-௰-௰௧. | ஆக ௯. |
| | சனி- | ௩-௪-௫-௮-௯-௰-௰௧. | ஆக ௭. |
| | லக்கினம்- | ௧-௨-௩-௪-௫-௮-௯-௰௧. | ஆக ௮. |
| சனி பரல் ௩௯-க்கு விபரம். | ரவி- | ௧-௨-௪-௭-௮-௰-௰௧. | ஆக ௭. |
| | மதி- | ௩-௬-௰௧. | ஆக ௩. |
| | குசன்- | ௩-௫-௬-௰-௰௧-௰௨. | ஆக ௬. |
| | புதன்- | ௬-௮-௯-௰-௰௧-௰௨. | ஆக ௬. |
| | குரு- | ௫-௬-௰௧-௰௨. | ஆக ௪. |
| | புகர்- | ௬-௰௧-௰௨. | ஆக ௩. |
| | சனி. | ௩-௫-௬-௰௧. | ஆக ௪. |
| | லக்கினம். | ௧-௩-௪-௬-௰-௰௧. | ஆக ௬. |

(வெண்பா.)

அட்டவர்க்கவிந்திரவிக்காறெட்டாமம்புலிக்கொன் *
றெட்டுசனிசேய்முப்பத்தொன்பதாம்-இட்டபுதற் *
கைம்பத்துநான்குகுருக்காறெட்டோடெட்டா *
மைம்பத்திரண்டுபுகர்க்காம். *

இந்தப்படி அந்தந்தக் கிரகங்களுக்குச் சொன்னபரலை அந்தந்தக் கிரகங்களிருக்கிற வீடுமுதலாகக்கொண்டும், லக்கினத்தைதத்தொட்டும் எண்ணிப்போடுவது.

(திரிகோணசோதனை)

திரிகோணராசிமூன்றிலும் பரல் சரியாக இருந்தால் மூன்றையும் எடுத்துப்போடவும், ஒருராசியிற்குறைந்திருந்தால் அப்படியே மற்றராசிகளின் பரலையும் குறைத்துப்போடவும், ஒருராசியில் பரலில்லாதிருந்தால் சோதனையில்லை.

(ஏகாதிபத்தியசோதனை.)

திரிகோண சோதனையானபின்பு மேஷ விருச்சிகமும், ரிஷப துலாமும், மிதுன கன்னியும், தனுசு மீனமும், மகர கும்பமுமாகிய ராசிகளில் கிரகமிருந்த ராசிப்பரல்குறைந்தும், கிரகமில்லாதராசிப் பரல் அதிகமாகவும், இருந்தால் குறைந்தபடி சரிசெய்யவும். சரியாகவிருந்தாலும், கிரகமில்லாத ராசிப்பரல்குறைந்திருந்தாலும் கிரகமில்லாத ராசிப்பரலை எடுத்துப்போடவும்... *

இரண்டுராசிகளிலும் கிரகமில்லாம விருக்கப் பரல்ஏ ற்றக்குறைச்சலாகவிருந்தால் குறைந்தபடி சரிசெய்யவும். சரியாகவிருந்தால் இரண்டுராசிப்பரலையும் எடுத்துப் போடவும். இரண்டுராசியிலும் கிரகமிருந்து பரல் ஏற றக்குறைச்சலாக விருந்தாலும், சரியாகவிருந்தாலும், ஒருராசியிற் பரலில்லாமலிருந்தாலும்,இரண்டுராசியிலும் கிரகமில்லாமலிருக்க ஒருராசியிற் பரலில்லாதிருந்தாலும்சோதனையில்லை. கிரகமிருந்தராசியில் பரலில்லாமலிருக்க மற்றொன்றில் பரலிருந்தால் அதை எடுத்துப் போடவும். ... ... ... *

(இராசிகுணகாரம்.)

ஏகாதிபத்தியசோதனையானபின் நின்றபரலை-ரிஷபசிங்கத்திற்குப் பத்திலும்,மிதுன விருச்சிகத்துக்கு எட்டிலும், மேஷ துலாத்துக்கு ஏழிலும், கன்னி மகரத்துக்கு ஐந்திலும், கர்க்கடகத்துக்கு நாலிலும், தனுசுக்கு ஒன்பதிலும், கும்பத்துக்குப்பதினொன்றிலும், மீனத்துக்குப் பன்னிரண்டிலும், பெருக்கிக் கண்டமொத்தம் ராசிகுணகாரமாம். ... ... ... *

(கிரககுணகாரம்.)

குருவிருந்தராசிப்பரலைப்பத்திலும்,செவ்வாயிருந்தராசிப்பரலை-எட்டிலும், சுக்கிரனிருந்தராசிப்பரலை- ஏழிலும், மற்றகிரகங்கள் நின்ற ராசிப்பரலை ஐந்திலும் பெருக்கிக் கண்டதொகை கிரககுணகாரமாம். *

இராசிகுணகார - கிரககுணகாரத்தொகைகளை ஒன்றாகக்கூட்டினதொகை குணசமூகமாம். இதை எ-ல்-பெருக்கி-உஎ-க்கீந்தபலன் வருஷமாகவும்,மிச்சத்தை ௰உல்-பெருக்கி-உஎ-க்கிந்தபலன் மீமாகவும்,மிச்சத்தை ௩௰-ல்-பெருக்கி - உஎ-க்கீந்தபலன் நாளாகவுமிச்சத்தை ௬௰-ல்-பெருக்கி-உஎ-க்கீந்தபலன் நாழிகையாகவும்கொள்க.

இவ்வாறே எல்லாக்கிரகங்கள் கொடுத்தவைகளை ஒன்றாகக்கூட்டிக்கண்டதொகையில் - வருஷ - க - இ- ௩௬ நாளும்,மீ-க-இ-௩-நாளும், நாள்-க-இ-௬ - நாழிகையும், நாழிகை-க-இ-௬-விநாடியுங்கழித்துக்கண்டதொகையில் நீச்சக்கிரகம் அஸ்தமனகிரகம்கொடுத்ததிற்பாதியும்,பகைவீட்டிலிருந்த கிரகங்கொடுத்ததில் மூன்றிலொன்று கழித்து மற்றவிரண்டுபங்கும்நட்பு ஆட்சிமூலத்திரிகோணங்களிருக்குங் கிரகங்கள் கொடுத்ததை முழுமையும் உச்சக்கிரகங்கொடுத்ததை இரட்டித்துக்கொண்டு ஒன்றாகக்கூட்டிக் கண்டதொகை சாதகனுக்கு ஸ்தூலபரமாயுளாம் செவ்வாய் சனி சுக்கிரன் பகைவீட்டிலிருந்தாலவர்களுக்குமரணமில்லை. மற்றவருக்குண்டு. ... ✻

இக்கிரகங்கள் தசவர்க்கமேறும்போது சுபவர்க்கமதிகமாகவிருந்தால் நல்லபலன் கொடுக்கும். பாபவர்க்கமதிகமாகவிருந்தால் பலன்கொடுக்காது. இன்னும் மகாதிசைமுதலான திசைகளில் - ௬ - திசைவிடுதி ஒருகாலத்திலிருந்தாலுமாகாது. இவைகளையும் பிராண தேகமி

ருத்திஸ்புடங்களின் தொகையும் ஆராய்ந்தறிந்து இஷ்டதேவதையின் வரத்திஞலும், நவக்கிரகசகாயத்திஞலும், குருகடாக்ஷத்திஞலும் நிரியாணகாலஞ் சொல்லவேண்டும். ... ... ... ... ... ❋

(அஷ்டகவர்க்கபலன்.)

(சர்வாஷ்டகவர்க்கசமுதாயப்பரல்)

சர்வாஷ்டகவர்க்கப்பரல் - ௩௱௩௭-ல் - ராசி-க-ல் ௩௰-இ-மேலிருந்தால் பூரணம். உரு-இ - கீழிருந்தால்மத்திமம். உ௰-இ கீழிருந்தால்-அற்பமாம். ... ... ❋

திரிகோணசோதனைக்குமுன் - கிரகம்-க-இ-ராசி-க-ல் ௩-பரலுக்குள்ளிருந்தால் - அற்பபலன் - ச - லிருந்தால் சமபலன்,ரு-முதல்-அ-வரை-விசேஷபலனும்.விபரம்-க இ-திரவியநாசம். உ-இ-அபிமானம்-பீடை.௩-இ-சஞ்சலம்-வித்தைநாசம்-ச-இ - லக்ஷ்மீகரம்.ரு-இ தனவருத்து-விவாகசுத்தி. சு-இ-வித்தியாலாபம் லக்ஷ்மீகரம்.எ-இ-ஐஸ்வரியம். அ-இ-ராஜயோகமாம். பரல்குறைந்திருக்கிற ராசியில் சூரியன்வரும்போது தீமை, பரல் குறைந்தராசி சூரியனுக்குப்பகை- நீச்சமாஞல் அதிகநஷ்டம், பரல் அதிசப்பட்ட ராசியில் சூரியன் வரும்போதுலாபம். ❋

லக்கிஞதிபதி லக்கினகேந்திரத்தில் - ரு - சு-பரலுடன் இருந்தால் அதிகலாபம். சூரியன் ச-கிரகத்துடன்கூடி-ரு-சு-பரலோடு நின்றுல் அதிகலாபம். உச்சமும், ஆட்சியும்,நட்புமாக இருக்கும் கிரகங்கள்-ச-பரலுக்குமே

லான் பரலுடன் லக்கினகேந்திரம்பெற்றால் அதிராஜ யோகமாம். ... ... ... ... ... *

சூரியன் நின்றராசிக்கு- ௯ - ம் - ராசியின்பரலை எண்ணிக்கண்டதொகை பிதாவின்சகோதரராம். அந்தப்பரல் பெண்கிரகங்கொடுத்ததானால் சகோதரியென்றும், புருஷகிரகங் கொடுத்ததானால் சகோதரனென்றும், அலிக்கிரகங்கொடுத்ததானால் சகோதரமில்லையென்றுங் கொள்ளவேண்டும். ... ... ... ... *

லக்கினமுதல் - ச - ராசிப்பரலைகூட்டிக் கண்டதொகை முதற்கண்டமாம். ரு-ம்-ராசிமுதல்-அ-ம்-ராசிவரையிற்கண்டதொகை இரண்டாங்கண்டமாம். ௯-ம் - ராசிமுதல்-௰௨-ம்-ராசிவரையிற் கண்டதொகை மூன்றுங்கண்டமாம். இந்தமூன்றுகண்டத்தில் முதற்றொகை அதிகமானால் பாலியத்திலும், உ-வது- அதிகமானால் யவ்வனத்திலும், ௩-வது-அதிகமானால் - வயோதிகத்திலும் சவுக்கியமாம். ... ... ... ... ... *

இராவிழிப்பு ராசிப்பர லதிகமானால் இராத்திரியிலும், பகல்விழிப்பு ராசிப்பரலதிகமானல் பகலிலும்வெற்றியுண்டு. ... ... ... ... *

இப்படியே திக்குப்பரலுக்கும்-ஆண்-பெண்-ராசிகளின் பரலுக்கும் உயர்ந்ததைப்பற்றிப் பலன்சொல்லவும் ௰,ம்-இடம்-௰௨-ம்- இடம் பரல்குறைந்தும்-௰௧-ம் - இடம்பரல் அதிகமாகவுமிருந்தால் ராசயோகம். ௰௧-ல்-பரல் குறைந்தும்-௰௨-ல்-அதிகமானல் - வரவுக்குமிஞ்சினசெ

லவு.ம-ல்-பரல்குறைந்தும்-ம௨-ல்- அதிகமாகவுமிருந்தால் செய்தொழிலில் லாபமில்லை இவன் எடுத்தகாரியமும் முடியாது. ... ... ... *

(சூரியனஷ்டகவர்க்கபலன்.)

சன்மலக்கினத்திலும், சந்திரலக்கினத்திலும், பரல்குறைந்திருந்தாலும், சூரியன் நீச்சனாகவிருந்தாலும் பிதாவுக்கரிஷ்டம். ரு-ம்-கூ-ம்-ராசியில்-ரு ம-இ-குறைந்த பரலோடு சூரியனின்றால்பிதாவுக்கும். ௨-ரு-ல் - ரு - பரலோடு சூரியனிருக்க-கூ-ல்-ராகுவிருக்கப் பிதாவுக்கு-ரு-ஷூ த்தில் நிரியாணம். குறைந்தபரலோடு-ரு-ல்- சூரியன்-சந்திரன்-செவ்வாய்-சனி யிருந்தால்- சாதகனுடைய-பிதாமாதா-சகோதரருக்கு அரிஷடம். ... *

(சந்திரனஷ்டகவர்க்கபலன்.)

சந்திரனின்றராசிக்கு-சு-லாம்ராசிப்பரலை யெண்ணிக்கண்டதொகை-மாதாசகோதரர். இதுவும்முன்போலப் பெண்கிரகங்கொடுத்ததும்,ஆண்கிரகங் கொடுத்ததுங் கண்டுசொல்லலாம். லக்கினத்துக்கு-சு-ம்-ராசியைக்கொண்டும்சொல்வது.லக்கினத்திலும், சந்திரலக்கினத்திலும்பரல் அதிகமாகவிருந்து அதில்சுபரிருந்தாலும், பார்த்தாலும், அதிபதிபலத்தாலும் - மாதாவுக்குதீர்க்காயுள். ஏகாதிபத்தியசோதனையானபின் சந்திரனின்றராசியின் பரலையும்,லக்கினமுதல்-சு-ராசிப்பரலையும்பெருக்கி-௨எல்-கழித்தமிச்சத்தில் பூர்வபக்ஷத்தில் பிறந்தவனுக்கு-அச்சுவினிமுதலாகவும் அமரபக்ஷத்தில் பிறந்தவனுக்

கு-அவிட்ட முதலாகவும் எண்ணிக்கண்டநக்ஷத்திரத்தில் சனிவருங்காலம்-மாதாவுக்குப்பீடை, சந்திரன்வருங் காலம் சுகம். ... ... ... *

(செவ்வாயஷ்டகவர்க்கபலன்.)

செவ்வாய்நின்ற ராசிக்கு-௩-ம் - ராசிக்கதிபதிநின்ற ராசியின்பரலை யெண்ணிச் சகோதரபலன் சொல்லவும். செவ்வாய் நின்றராசிக்கு-௩-ம்-ராசியின்பரலைக்கொண்டு இளயசகோதரஞ்சொல்லவும். இதுவுமுன்போல ஆண்பெண் கிரகங்களாற்சொல்லவும். செவ்வாய்நின்ற ராசியின் சோத்தியப்பரலை-௩-ம்- ராசிப்பரலால் பெருக்கி-உ௭-ல்-கழித்து முன்போல வளர்பிறை தேய்பிறையறிந்து எண்ணிக்கண்ட நக்ஷத்திரத்தில் சனிவரச் சகோதரபீடை - குருவரச் சகோதரசவுக்கியம்- ... *

(புதனஷ்டகவர்க்கபலன்.)

புதன்கேந்திரத் திரிகோணங்களில்-௫-இ- மேற்பட்ட பரலோடிருக்க குருபார்க்க - நல்லவித்தையுண்டு. உ-இ- அதிபதி-௫-பரலோடுபகை-நீச்சம் நீங்கின விடத்திலிருக்க கணிதமும், சிற்பமும், வரும் புதனிருக்கும் ராசிக்கதிபதி சுபனுய்க்கேந்திரத் திரிகோணமேற அதில்- ௫-பரலுக்கு மேலிருந்தால் வித்துவானும்.... ... *

(குருஅஷ்டகவர்க்கபலன்.)

குருநின்றராசிக்கு ௫-ம்-ராசிப்பரல் எத்தனையோ அத்தனைபுத்திரருண்டு-இதையும் முன்போலவே - ஆண்-

பெண்-சொல்லவும்.லக்கினத்துக்கு - ரு-ம்-ராசியினுலும் சொல்லலாம்-குரு பலவானாக விருக்கவேண்டும் லக்கினத்திலும் - ரு - ம்-இடத்திலும் பாபக்கிரகமிருந்தால் புத்திர ஆனி-லக்கினத்துக்கு-ரு-ல் - மூன்றுபரலிருந்தால் அற்பபுத்திரயோகம் - ரு - ம் - ராசி சமுதாயப்பரலை சோத்தியப்பரலாலே பெருக்கி-உஎ-ல் - கழித்தமிச்சம்-முன்போல அச்சுவினி-அவிட்டமுதலாகவெண்ணிக் கண்ட நக்ஷத்திரத்தில் - குருவருங்கால் புத்திரருண்டு.*

(சுக்கிரனஷ்டகவர்க்கபலன்.)

சுக்கிரன்னின்ற ராசிக்கு-எ-ம்-ராசியில்- எத்தனைபரலிருக்கிறதோ அத்தனை களத்திரமாம். அது-சூரியன்கொடுத்த பரலாயின்-பிதுர்வர்க்கத்தித்திலும், சந்திரன்கொடுத்த பரலாயின் - தாய்வர்க்கத்திலும், சனி- செவ்வாய்-கொடுத்தபரலாயின் - அன்னியவர்க்கத்திலும், களத்திரமுண்டாம்.லக்கினத்துக்கேழில் சுக்கிரனிருந்தால் களத்திரபலன், சனியிருந்தால்- ரோககளத்திரம், புதனிருந்தால் களத்திரயீனம்,செவ்வாய்-சூரியனிருந்தால் - காந்தருவ களத்திரமாம். ... ... ... ... *

(சனி அஷ்டகவர்க்கபலன்.)

லக்கினத்துக்கு-அ-ம்-ராசியிலிருந்த சமுதாயப்பரலையும், சனிநின்றராசியின் சோத்தியப்பரலையும் பெருக்கிக் கண்டதொகை வருஷத்தில் சாதகனுக்குத்தத்து ஷ தொகையை-உஎ-ல்-கழித்து மிச்சத்தை- அச்சுவினி-அவிட்டமுதலாக முன்போல எண்ணிக்கண்ட நக்ஷத்திர

த்தில் சனிவருங்காலம்தேகபீடை.சனிநின்ற ராசிச்சோ த்தியப்பரலையும், லக்கினத்தின் சமுதாயபரலையும் பெரு க்கிக்கண்டதொகையை-உஎ-ல்-கழித்தமிச்சத்தில்-முன் போற் கண்டநக்ஷத்திரத்தில்-சனிவருங்கால் தேகபீடை லக்கினமுதல் சனியிருந்தராசிவரையுமுள்ள சோத்திய ப்பரல்களையும் குளிகனிருக்கிற ராசிமுதல் லக்கினம் வ ரையிலு முள்ள ராசிகளின்சோத்தியப்பரல்களையும்பெ ருக்கி உயஎ-ல்-கழித்துசேடத்தைமுன்போலஎண்ணிக் கண்ட நட்சத்திரத்தில் சனிவருங்காலம் நிரியாணமாம்.

சோத்தியப்பரலென்று சொல்லாதவைகள் சமுதாய ப்பரலாம்.　...　...　...　*

சர்வாஷ்டகவர்க்கில்-யக-லும்-யஉ- லும்குறைந்து - ய ல் அதிகப்பட்டால் இராஜயோகம்.ய-ல் - குறைந்து யஉ ல்-அதிகப்பட்டால் அதிகசெலவு.யக-ல்-குறைந்து ய-ல் அதிகப்பட்டால் செய்தொழிலில் லாபமில்லை. லக்கின முதல் சனிநின்றராசிவரை யுள்ளபரலையெண்ணிக் கண் டதொகைவருஷத்தில்கண்டமுண்டு.ஏகாதிபத்தியசோ தனையானபின் அ-லுள்ளபரலையும் லக்கினப்பரலையும் பெருக்கி உயஎ-ல் - கழித்தசேடத்தை அசுபதிமுதலெ ண்ணிக்கண்டநக்ஷத்திரத்தில் சனிவரும்போது கண்ட முண்டு.திரிகோண சோதனையானபின்னும் பார்க்கலாம் வளர்பிறையிற்பிறந்தவனுக்கு அசுபதிமுதலாகவும்,தே ய்பிறையிற் பிறந்தவனுக்கு அவிட்டமுதலாகவு மெண் ணிக்காணவும்-　...　...　...　*

(தசவர்க்கம்.)

க-வது—கிரகமிருக்கிற ராசிவர்க்கமாம். ... ... *

(உ-வது-சூரிய-சந்திரவோரை.)

கிரகமிருந்தராசியை-உ-கூறிட்டது-ஓரை. ஆண்ராசிக்கு-௰ரு-பாகைக்குள் சூரியவோரையாகவும், ௩௰-பாகைக்குள்-சந்திரவோரையாகவும்; பெண்ராசிக்கு-௰ரு-க்குள் சந்திரவோரையாகவும், ௩௰-க்குள்-சூரியவோரையாகவுங் கொள்க. ... ... ... ... ... *

(௩-வது-திரைக்காணம்.)

கிரகமிருந்தராசியை-௩-கூறிட்டது-திரைக்காணம். ௰ பாகைக்குள் - அந்தலக்கினமாகவும், உ௰-பாகைக்குள்-ரு-ம்-லக்கினமாகவும், ௩௰-பாகைக்குள் - கூ-ம்-லக்கினமாகவுங் கொள்க. ... ... ... ... *

(ச-வது-திரிம்சாங்கிசம்.)

திரிம்சாங்கிசம், ஆண்ராசிக்கு-ரு- பாகைக்குள் - செவ்வாயாகவும், ௰-பாகைக்குள்- சனியாகவும், ௰அ-பாகைக்குள்-குருவாகவும், உரு- பாகைக்குள் புதனாகவும், ௩௰-பாகைக்குள்-சுக்கிரனாகவும்; பெண்ராசிக்கு- ரு - க்குள்-சுக்கிரனாகவும், ௰-க்குள்-புதனாகவும், ௰அ- க்குள் - குருவாகவும் - உரு-க்குள்-சனியாகவும், ௩௰-க்குள்-செவ்வாயாகவும், கொள்க. ... ... .. ... *

(ரு-வது-சத்தமாங்கிசம்.)

கிரகமிருந்தராசியை-எ-கூறிட்டது சத்தமாங்கிசம். ஆண்ராசிக்கு * உதயமுதல்நேரும், பெண்ராசிக்கு-எ-ம்-ராசிமுதல்நேருமாகக் கொள்ளவும்... ... *

(சு-வது-நவாங்கிசம்.)

கிரகமிருந்தராசியை-கூ-கூறிட்டது நவாங்கிசம். அந்தந்தக்கிரகங்களின் அங்கிசலக்கினமாகக்கொள்க.

(எ-வது-தசாங்கிசம்.)

கிரகமிருந்தராசியை-ய-கூறிட்டது தசாங்கிசம். ஆண்ராசிக்கு உதயமுதல்நேரும், பெண்ராசிக்கு-எ-ம்-ராசிமுதல் நேருமாகக்கொள்க... ... ... ...*

(அ-வது-துவாதசாங்கிசம்.)

கிரகமிருந்தராசியை-யஉ-கூறிட்டது துவாதசாங்கிசம். ஆண் ராசிக்கும் பெண் ராசிக்கும் உதயமுதல் நேரேகொள்க. ... ... ... ... ... *

(கூ-வது-கலாங்கிசம்.)

கிரகமிருந்தராசியை-யசு-கூறிட்டது கலாங்கிசம். கூறு-க-க்கு-பாகை-க-ம், கலை-ருஉ-யுமாம். ஆண்ராசிக்கு மேஷமுதல் நேராக-யஉ-ராசியும். பிரமன்-மாயோன்-ருத்திரன்-ரவியாகவும், பெண்ராசிக்கு-ரவி-ருத்திரன் மாயோன்-பிரமனாகவும் மேஷம்வரையிடமாகக்கொள்க

---

* உதயம் - ஜன்மலக்கினம்.

(௰-வது-சஷ்டியாங்கிசம்.)

கிரகமிருந்தராசியை-௬௰-கூறிட்டது - சஷ்டியாங்கிசம்.கூறு-க-இ-௩௰-கலையாம்.இதுவும், ஆண்ராசிக்குநேராகவும், பெண்ராசிக்குக் கடைசி முதலாகவும் கொள்க.

| | | | |
|---|---|---|---|
| க-கோரம்... ... | * | உக-கோமளம் ... | * |
| உ-இராக்கதம்... ... | * | உஉ-பதுமம் ... | * |
| ௩-தேவபாகம் ... | * | உ௩-லக்ஷ்மி ... ... | * |
| ௪-குபேரம் ... | * | உ௪-வாகீசுரம் ... | * |
| ௫-ரக்ஷோகணம் ... | * | உ௫-திகம்பரம்... ... | * |
| ௬-கின்னரம் ... | * | உ௬-இந்திரம் ... | * |
| எ-பிரஷ்டம்... ... | * | உஎ-கலியம் ... | * |
| அ-குலக்கினம் ... | * | உஅ-நாசபாகம் ... | * |
| ௯-விஷம்... ... | * | உ௯-பூமீசுரம் ... | * |
| ௰-கிரீசம் .. ... | * | ௩௰-கமலாகாரம் ... | * |
| ௰க-மாயம் ... | * | ௩க-காரகுளிகன் ... | * |
| ௰உ-பிரேதபுரி ... | * | ௩உ-மந்தாத்திரியம் ... | * |
| ௰௩-அபரபதி ... ... | * | ௩௩-அவமிருத்து... | * |
| ௰௪-தேவகணம் ... | * | ௩௪-காலமிருத்து ... | * |
| ௰௫-ஈசபாகம் ... | * | ௩௫-தபாக்கினி ... | * |
| ௰௬-காலபாகம் ... | * | ௩௬-அகோரம் ... | * |
| ௰எ-அக்கினிபாகம் ... | * | ௩எ-யமகண்டம் ... | * |
| ௰அ-மிருதம் ... | * | ௩அ-சுதம் ... ... | * |
| ௰௯-சந்திரம் ... ... | * | ௩௯-ஞானமிர்தம் ... | * |
| உ௰-மிருத்தி ... | * | ௪௰-பரிபூரணம் ... | * |

| | |
|---|---|
| ௪௧-விஷப்பிரதி ... * | ௫௧-இந்துலேகம் ... * |
| ௪௨-குலநாசம் ... * | ௫௨-பிரவீணம் ... * |
| ௪௩-முக்கியம்... ... * | ௫௩-காலாக்கினி ... * |
| ௪௪-வம்சக்ஷயம் ... * | ௫௪-தண்டாயுதம் ... * |
| ௪௫-உற்பாதம் ... * | ௫௫-நிர்மலம் ... ... * |
| ௪௬-காலரூபம் ... * | ௫௬-சுபம் ... ... * |
| ௪௭-சவுமியம் ... * | ௫௭-அதிசீதளம் ... * |
| ௪௮-மிருத்துவம் ... * | ௫௮-சுபதாபத்தியம் ... * |
| ௪௯-சுசீதளம் ... ... * | ௫௯-பிரமணம் ... * |
| ௫௰-தமிஷ்டார்க்கம் * | ௬௰-இந்துரேகை ... * |

இதனால் தேவாங்கிசமறியும்விபரம் - நவக்கிரகங்களுடைய தசவர்க்கங்களை யெல்லாந் தனித்தனிக்கூட்டி ஒவ்வொருகிரகமேறியவர்க்கங்களில் இரண்டு சுபவர்க்கங் கண்டால்-பாரிசாதம். ௩-இ - உத்தமாங்கிசம். ௪-இ-கோபுரம். ௫-இ-சிங்காசனம். ௬- இ- பாராவதம். ௭ -இ-தேவலோகம். ௮-இ-வைசேஷிகம். ௯-இ-ஐராவதம். ௰-இ-தேவேந்திரமாம்.இவற்றுள்-௧-இ- துர்ப்பலன். ௨-இ-சுகி. ௩-இ-ரோகி.௪-இ-வாகனம்,தனம்,பசுவிர்த்தியுடையவன்.௫-இ-செல்வன். ௬-இ-வித்தை, செல்வம், கீர்த்தியுடையோன்.௭-இ-ம்-௮-இ-ம்-சைந்நியபதி,லோகாதிகாரி.௯-இ- அஷ்டைஸ்வரியன்.௰-இ-இந்திரபோகி,சார்வபௌமனாகும்.

(துவாதசலக்கினவிபரம்.)

௧-வது - சன்மலக்கினம்.இது அந்தந்த மாதராசியின் நாழிகையை ஷமாதத்தேதியின் ஈவுப்படிக்கழித்துமின்

ற உதயாபரநாழிகைமுதலாகச் சனனகால வரையெண்ணிக் கண்டநாழிகையில் வரும்லக்கினமாம். ... ❋

உ-வது - ஓராலக்கினம். இது உதயமுதல் சனனகால வரையெண்ணிக் கண்டநாழிகையை உதயமுதல் இராசி-க-இ-உ ௦-நாழிகையாகக்கழித்துக்கண்டலக்கினமாம். இது ஆண்ராசிக்கு வலமாகவும், பெண்ராசிக்கு இடமாகவும் பார்த்துக்கொள்ளவும். ... ... ... ❋

ங-வது - கடிகாலக்கினம். இது உதயமுதல் சனனகாலவரையெண்ணிக்கண்ட நாழிகையை உதயமுதல் ராசி-க-இ-நாழிகையொன்றாகக்கழித்துக் கண்டலக்கினமாம். இதையும் முன்போல - ஆண்ராசி பெண்ராசிகளுக்குச் சொன்னபடி இடம்வலமாகப்பார்த்துக்கொள்ளவும். ❋

ச-வது-ஆரூடலக்கினம். இது லக்கினமுதல் லக்கினாதிபதிநின்றராசிவரை யெண்ணிக் கண்டதொகை எத்தனையோ அதை லக்கினாதிபதிநின்ற ராசிமுதலாக எண்ணிக் கண்டலக்கினமாம்- அவன்லக்கினத்திலும், ஏழிலுமிருந்தால் அவையே ஆரூடலக்கினமாம். ... ❋

ரு-வது-நக்ஷத்திரலக்கினம். இது சென்மநக்ஷத்திரத்திற் சனனவரை சென்றநாழிகையை ராசி-க- இ - ரு-நாழிகையாககழித்துக் கண்டலக்கினமாம். அச்சுவினி, மகம், மூலத்துக்கு இடமாகவும்; மற்றவைகளுக்கு வலமாகவும், சனனலக்கினமுதல் எண்ணிக்கொள்ளவும். ... ❋

௬-வது - காரகலக்கினம், இது உதயாதி சன்மவரை சென்றநாழிகையை ராசி-க-இ-ரு-நாழிகையாகக்கழித்துக் கண்டதொகையை எந்தக்கிரகஸ்புடத்தில் அதிகபாகையிருக்கிறதோ அந்தக்கிரகமிருக்கிறராசி முதலாகயெண்ணிக் கண்டலக்கினமாம். ... ... ... *

எ-வது - ஆதெரிசலக்கினம். இதுசன்மலக்கினத்துக்கு ஏழாம்லக்கினமாம். ... ... ... *

அ-வது-ஆயுர்லக்கினம். இது உதயாதி சென்றநாழிகையை ராசி-க-இ-ரு - நாழிகையாகக்கழித்துக் கண்டதொகையை சந்திரனின்ற அங்கிச லக்கினமுதலாக எண்ணிக்கண்டலக்கினமாம் ... ... ... *

௯-வது-திரேக்காணலக்கினம் - இதுலக்கினத்தை மூன்றுகூறிட்டுச் சரத்துக்கு-க-ரு-௯-ஆகவும், ஸ்திரத்துக்கு-௯-க-ரு-ஆகவும், உபயத்துக்கு ரு-௯-க-ஆகவும்,எண்ணிக்கண்டலக்கினமாம். ... ... ... *

௰-வது-அங்கிசலக்கினம்-இது முன்சொன்ன காரககிரகத்தின் துவாதசாங்கிசலக்கினமாம். ... *

௰க-வது-நவாங்கிசலக்கினம். இது லக்கினத்தை - ௯-பங்காக்கி எத்தனையாம்பங்கில் சனனமோ அதை அந்த ராசித்திரிகோண சராசியாகஎண்ணிக்கண்டலக்கினம்

௰உ-வது - பாவலக்கினம். இதுஉதயாதிசென்மவரை சென்றநாழிகையை ராசி - க - இ-ரு-நாழிகையாகத் தள்

ளிக்கண்டதொகையை மேஷமுதலாக எண்ணிக் கண்டலக்கினமாம். ... ... ... ... *

(கிரகாவஸ்தை.)

லக்கினத்தை-ரு-கூறுசெய்து-க-இ - வாலிபம்,உ-இ-எவ்வனம், ங-இ-கௌமாரம்,ச-இ- விர்த்தம், ரு-இ-மரணம் எனக்கண்டு ஆண்ராசிக்கு-பாலன்முதலாகவும், பெண்ராசிக்கு மரணமுதலாகவும் கொள்க. ராகுகேதுக்கு எந்தராசிக்குமிடமாகவே பார்த்துக்கொள்ளவும்.

சனி,ராகு,கேதுக்கு, விர்த்தாவஸ்தையும்; சுக்கிரனுக்கு - வாலிபமும், மரணமுந்தவிர மற்றுவஸ்தையும்; செவ்வாய்க்கு விர்த்தமும், மரணமுந்தவிர மற்றுவஸ்தையும்; புதனுக்கு மரணந்தவிர மற்றுவஸ்தையும்; சூரியனுக்கும் குருவுக்கும், மரணநீங்கிய அவஸ்தைகளும்; சந்திரனுக்கு எவ்வனமும் உத்தமம். சந்திரனுக்கு வாலிபமும், கௌமாரமும், மத்திமம். மற்றவை ஆகாவாம்.

(கிரகசமயம்.)

மேஷமுதல் சாதகனுடைய சன்மலக்கினம்வரை எண்ணினதொகைக்கும், லக்கினமுதல் அந்தந்தக்கிரகமிருக்கிற லக்கினம்வரை யெண்ணின தொகைக்கும், பெருக்கி - உஎ-ல் - கழித்து நின்ற மிச்சத்தையும் அவரவர்கள் திசாவருஷத்தையும்பெருக்கி-உஎ-ல்-கழித்து நின்றமிச்சம் சமயமாம். ... ... ... ... *

| சமயம். | பலன். | சமயம் | பலன். |
|---|---|---|---|
| ௧-ஸ்நானம் | ம | ௰௫-கோபம் ... | ச |
| ௨-அலங்காரம் | உ | ௰௬-தாம்பூலம்... | உ |
| ௩-விபூதிசந்தனமிடல் | உ | ௰௭-இராசாங்கம் ... | உ |
| ௪-செபம் ... | உ | ௰௮-கிரீடம்பூணல் | உ |
| ௫-சிவபூசை ... | ம | ௰௯-சலபானம்... | ம |
| ௬-அவுபாசனம்... | ச | ௨௰-ஆலிங்கனம் ... | உ |
| ௭-விஷ்ணுபூசை | ச | ௨௰௧-சயனம் ... | ம |
| ௮-பிராமணபூசை... | ம | ௨௰௨-அமுதபானம் | உ |
| ௯-நமஸ்காரம் ... | ச | ௨௰௩-மதனலங்காரம் | உ |
| ௰-பிரதக்ஷணம்... | உ | ௨௰௪-லீலை ... ... | உ |
| ௰௧-வைசுவதேயம் | உ | ௨௰௫-போகம் ... | ச |
| ௰௨-அதிதிபூசை | ச | ௨௰௬-நித்திரை ... | ம |
| ௰௩-போசனம் | உ | ௨௰௭-ரத்தினபரீக்ஷை | உ |
| ௰௪-புராணப்பிரசங்கம் | உ | | |

(உ—உத்தமம்.)   (ம—மத்திமம்.)   (ச—சமம்.)

(பல்லி-காக்கை-மூஞ்சூரு-தும்மல்.)

எழுவாய்மேஷம்படைபூசல் ... ... *
இடபங்கடகங்குடிபோக்கும் ... ... *
நழுவாய்மிதுனநல்வசனம் ... ... *
நண்டுவிருந்துகளிப்பாகும் ... ... *
கழிவேயாகுந்தனுஞ்சிங்கம் ... ... *
கன்னிபழங்காய்வெற்றிலையாம் ... ... *

தொழுதேதூதன்றுலாமாகும் ... ... ✻
தூங்குந்தேள்பொன்பெண்வருத்தே ... ✻

---

வில்லில்விருந்துமிகவுண்டு ... .. ✻
வேண்டுமகரம்விண்ணமுதம் ... ... ✻
நல்லகும்பநோயுண்டாம் ... ... ... ✻
நாட்டுமீனங்களிப்பாகும் ... ... ✻
அல்விற்சிறந்தகுழன்மடவா ... ... ✻
யறியச்சொன்னேமவனிமிசை ... ...✻
சொல்லும்பல்லிகொடிகூரன் ... ... ✻
தும்மலென்றேயறிவாயே ... ... ✻

(பதினாறுதிக்குப்பல்லிக்காதல்.)

அருக்கன்மேற்பயநாசம்மொண்டிற்சாவு ... ... ✻
அகன்றவர்பின்மீண்டிடுவார்மூன்றேயாகில் ✻
உருக்கமுள்ளசாவதனைக்கேட்கநாலு ... ✻
ஒருசண்டையுண்டைந்தாமுறவாமாறு ... ... ✻
விரிதலையுமழுகுரலுமழையுநோயு ... ... ✻
மென்மேலுந்துக்கமுமுண்டாகுமேழு ... ✻
தரித்திடுபூச்சந்தனமுமணமுங்கொண்டு ... ✻
தகுதியுள்ளார்கூடிவரவாகுமெட்டே ... ✻

---

சித்தமிகமகிழ்ச்சியுண்டாநாலோடைந்து ... ✻
தீதாகவேயுணாக்குந்தெரியும்பத்து ... ✻

அத்தமிசையாத்திரைகாணுறேடைந்து ... *
அகமகிழ்ச்சிக்கலியாணமாறேடாறு ... *
பத்திவருங்காணிக்கைபதின்மூன்றிற்குப் ... *
பறந்துவருமிழவோலைபதினாலுக்கு ... *
மெத்தவருமுறவின்முறையேழுமெட்டு ... *
மென்மேலும்யோகமுண்டாம்பதினாறுக்கே ...*

(ஆந்தைக்காதல்.)

ஒருரையுரைக்குமாகிலுற்றதோர்சாவுசொல்லும் ... *
ஈருரையுரைக்குமாகிலெண்ணியகருமன்றும் ... *
மூவுரையுரைக்குமாகில்யோகமாமங்கைசேர்வள் *
நாலுரையுரைக்குமாகில்நாழியிற்கலகஞ்சொல்லும் ... *
ஐந்துரையுரைக்குமாகி லங்கொருபயணஞ்சொல்லும் *
ஆறுரையுரைக்குமாகிலடுத்தவர்வரவுசொல்லும் *
ஏழுரையுரைக்குமாகிலிறந்தபண்டங்கள்போதும் *
எட்டுரையுரைக்குமாகில்திட்டெனச்சாவுசொல்லும் *
ஒன்பதும்பத்துமாயிலுத்தமமிகவுநன்றே ... *

(சகுனம்.)

வலியன்-கருடன்-கட்டுக்காடை-கழுகு-ஆந்தை-உடும்பு-கீரி-குரங்கு-வலமிருந்து இடமாகப் போகவேண்டும்.

நாரை-விச்சுளி-காக்கை-செம்போத்து-கிளி-கொக்கு-மயில்-கோழி-ஓணன்-புள்ளிமான்-புனுகுபூனை-புலி- நரி இடமிருந்துவலமாகப்போகவேண்டும்.

யாம்பு-பூனை-முசல்-குறுக்காகலாகாது.

(சுபச்குணங்கள்.)

குடை-கொடி-சாமரை - கரும்பு-அட்சதை- மாமிசம்-தயிர்-கள்-தேன்-பொரி-ரிஷபம்-யானை-குதிரை-பசுக்கள் பக்ஷிக்கூட்டம்-சலவைவஸ்திரம்-மங்கலவாத்தியம்-புஷ்பம் - மணக்கோலம் - சுபவரிசை-தாசி-சுமங்கலை-கன்னிகை-நிறைகுடம்-பழங்கள்-செந்தணல்- இரட்டைப்பார்ப்பார்-சாதம்-அரசன்-மூத்து.

சிலர்-பால் சுபசகுனமென்பர்.

(அசுபசகுனங்கள்.)

பயித்தியக்காரர்-குருடர் - நொண்டி-விரூபிகள்-விறகுகட்டு-மொட்டந்தலை-விரிதலை- எண்ணெய்த்தலை-நோயாளி-அம்பட்டன்-வாணியன்-தட்டான்-ஒற்றைப்பிராமணன்-இரட்டைச்சூத்திரர்-மூன்றுகோமட்டிகள்-கணக்கன் கணக்கோலை-சந்நியாசி - சடாதாரி-நம்பி- தூரஸ்திரி- அமங்கலை-அலி-எண்ணெய்க்குடம்-பால் - பயங்கரமானவேஷதாரி- அரிவாள்-கோடாலி - கட்டபாறை-புதுப்பானை.

மூஞ்சூரின்சத்தம்-வேதஓசை-கழுதை-குதிரைகள்கூப்பிடுதல்-நாய்உதறல்-ஆந்தைகிளை கூட்டல் -உத்தமம்.

அழுகுரல்-ஒற்றைக்குரலழுதல் - பன்றியுறுமல்-அபானவாயுபறிதல்-கொக்கரித்தல்-ஓங்காரம்போடல் - காலிடறல்- தலைதட்டல்-உண்டுபோவெனல்-போகாதேயெனல்- கூடவருகிறேனெனல்- அகாலமழைதூறல்-ஆகாது.

உபவாசகாலத்திலும்;க்ஷவரஞ்செய்துகொண்டும்;பெண்சாதியோடு சொல்லிக்கொண்டும்,அவள்கையிற் றும்பூலம் வாங்கிக்கொண்டும் பயணம்போகலாகாது.

(சகுனபரிகாரம்-கவி.)

பாப்பூருப்பாப்பும்பனைமரத்துப்பல்லியுந்
தோப்புக்குளாந்தைசீறியதும் - தாப்புக்குள்
ஆட்டுக்குக்கீழ்வலியனுனைக்குமேல்வலியன்
பாட்டுக்குள்வேண்டோம்பயன்.

(இதுவும்சகுனபலன்.)

கூரையிற்காகம் கூப்பிடுகருடன்
நாழிகைவலியன்நாளொன்று நரையான்
போத்துச்சகுனம் போகிறவரைக்கும்

ரு-அடிவைப்பதற்குள் காக்கை சகுனமும், கூப்பிடுதூரவரை கருடன்சகுனமும்,ஒருநாழிகைதூரவரை வலியன்சகுனமும், ஒருநாள்வரை நரையான்சகுனமும்,செம்போத்துச்சகுனம் போமிடம்வரைக்கும்பலனும்.

(பஞ்சசகுனம் பார்க்குநாள்.)

விஜயதசமியின்காலையில் பரிசுத்தனுக நித்தியகர்மமுடித்துப்பட்டுடுத்திக்கொண்டு வடக்கில்- ரு-ஆம் ஊர் எல்லைவரைபோகும்போது கருடன், வலியன், கட்டுக்காடை,இடமாகவும்; செம்போத்து, விச்சுளி வலமாகவும், ஆகிய இவ்வைந்துஞ் சகுனமாயின்-௰உ-மாதம்வரை சகலநன்மையுமுண்டு.இவற்றுள்-ச-ஆயில்-கூ-மாதமும், ரு-ஆயில்-சு-மாதமும், உ-ஆயில்-ச-மாதமும், க.ஆயில்-

உ-மாதமும், பலனுண்டாம் ஆயினும் முறையே-க-௩-உ-வ-ஐ-ஆ பலனுண்டு. சூனியமாயின் பலனில்லை. சிலர்-காக்கை-நரையானையுங்கூட்டிச்சப்த சகுனமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| கருடன் ... | வசிஷ்டர் | காக்கை ... | புலத்தியர் |
| வலியன் ... | பாரத்துவாசர் | நரையான் ... | நாரதர் |
| கட்டுக்காடை ... | கௌதமர் | மயில் ... | அகஸ்தியர் |
| செம்போத்து ... | தூருவாசர் | கிளி ... | விஸ்வாமித்திரர் |
| விச்சுளி ... | காசிபர் | எனவறிக ... ... | ...* |

(தேங்காய்ச்சகுனம்.)

ஒருகாரியந் தொடங்கும்போது விநாயகருக்குமுன் பரிசுத்தராகப்போய்த்தேங்காய் உடைத்துச்சகுனம்பார்க்கவும்.

(கவி.)

முடிசிறுத்துவட்டமிடிற்றிருவந்தெய்தும்
 மூன்றிலொருபங்குடைந்தாலினச்சந்தோஷம்
நெடியவொருவைந்திலொன்றுதொலையாச்செல்வம்
 நீணரம்பிணறுகோணநிதானவாழ்வு
அடியதனுள்வெடித்திட்டால்ரத்னஞ்சேரும்
 அடித்துடைக்கிளிரண்டுசமனகண்டபூசை
அடியவருக்கிடாறுக்குமரன்றன்மைந்த
 னைங்கரனார்முன்றேங்காய்ச்சகுனம்பாரே. (க)

---

ஆணிமுடிதானிரண்டுகூறதானால்
 அக்கினியாற்பொருளுக்குச்சேதமாகும்

பேணியதிலோடுடனேதெரித்துவீழ்ந்தால்
பிணியாலேவாதையுண்டுபொருளுஞ்சேதம்
நீணியதோர்கண்தெரித்தால்மரணமாகும்
நீளமதாய்ப்பிளந்துவிட்டானிதியுஞ்சேதம்
தாணுவிலேதவறிவிடின்குடும்பநாசம்
தந்திமுகன்முன்தேங்காய்ச்சகுனம்பாரே. (உ)

---

சிலர்-ஏறுபொழுதில் பரிசுத்தராகஏற்றமிறைக்குமிடத்திற்குப்போய்-சூல-பானைக்குமேல் பாடுவது நலமாயின் உத்தமமென்றும், தீதாயின் ஆகாதென்றுஞ்சொல்வர்

(எழுத்தாணி நூல்.)

ஆதிமுனிசொன்னவளவேயெழுத்தாணி
சோதிபெருவிரலாற்றொட்டளந்து - நீதியுடன்
ஆறிற்பெருக்கியேயாமேழிற்கீந்தமிச்சந்
தேறிப்பொருளுணாப்பதே.

---

ஏகஞ்சதிமரணம்ரெண்டோதனபதியாம்
ஆகமிகுநோய்சேருமூன்றுமே-போகம்
பொருள்சேருநான்குபோர்வெல்லுமைந்து
அருளாமேழ்நாசமாறே.

எழுத்தாணியைப்பெருவிரலாலளந்து-சூ-ல்-பெருக்கி எ-ல்-கொடுத்தமிச்சம்-க-க்கு- மனைவிமரணம்.உ-க்கு-சம்பத்து.ங-க்கு-ரோகம்.ச-க்கு-லாபம். ரு-க்கு - சத்துருநாசம்.சூ-க்கு-நாசம்.எ-க்கு-நல்லது.

(நால்வர்முத்தியடைந்தநாள்.)

சித்திரைச்சதயமப்பர்சிறந்தவைகாசிமூலம்
சத்தியமறையோர்போற்றுஞ்சம்பந்தராகுமென்ப
எத்திசைபுகழுமாணியெழின்மகம்வாதவூரர்
சுத்தமாமாடிச்சுவாதிசுந்தரர்கைலைசென்றார்.

(வணக்கவிதி-நின்றுவணங்கல்.)

திரிமூர்த்திகளுக்கும் சிரசின்மேல்-௰உ-அங்குலம் உயர்த்திக் கைகூப்புதல்:மற்றையதேவர்களுக்குச் சிரசின்மேற் கைகூப்பிவணங்குதல்.

குருவுக்குநெற்றியில் கைகூப்பிவணங்குதல். அரசருக்கும்,பிதாவுக்கும்வாய்க்குநேர் கைகூப்பிவணங்குதல். அந்தணருக்குமார்பில் கைகூப்பிவணங்குதல். தாய்க்குவயிற்றில் கைவைத்துவணங்குதல்.

(தண்டாகாரமாகவணங்குதல்.)

மாதாபிதா குருதெய்வங்களுக்கு மாத்திரம் அஷ்டாங்கமும் நிலத்திற்படும்படி வணங்குதல். மற்றையோருக்குத்தண்டாகாரங்கூடாது.பெண்கள்முன்சொன்னவர்களுக்கும் - முக்கியமாய்க்கணவனுக்கும் ஐந்தங்கங்களும் நிலத்திற்படும்படி வணங்குவதாம்.

(சீதாசக்கரத்தில் தொடச்சொல்லிப் பலன்சொல்லவும்.)

| | | |
|---|---|---|
| அ. | ங. | ச. |
| க. | ரு. | கூ. |
| சா. | எ. | உ. |

க-தனலாபம் | ச-பீடை | எ-தனம்
உ-நாசம் | ரு-க்ஷேமம் | அ-மரணம்
ங-சிநேகம் | சா-கலகம் | கூ-சந்தோஷம்

இராமசக்கரத்தில் தொடச்சொல்லிப்பலன் சொல்லவும்.

| | | | |
|---|---|---|---|
| ௯ | ௧௬ | ௫ | ௪ |
| ௭ | ௨ | ௧௧ | ௧௪ |
| ௧௨ | ௧௩ | ௮ | ௧ |
| ௬ | ௩ | ௰ | ௧௫ |

| | |
|---|---|
| ௧-ஸ்தாநநாசம் | ௯-கலியாணம் * |
| ௨-துக்கம் | ௰-நாசம் * |
| ௩-காரியசித்தி | ௰௧-சர்வலாபம் * |
| ௪-லாபம் | ௰௨-தீர்க்காயசு * |
| ௫-மரணம் | ௰௩-கலகம் * |
| ௬-குலக்ஷயம் | ௰௪-சுகம் * |
| ௭-ராசாங்கம் | ௰௫-நன்மை * |
| ௮-பந்துதரிசனம் | ௰௬-க்ஷேமம் * |

| (வாரபஞ்சபக்ஷி.) | | (எழுத்துப்பக்ஷி.) | |
|---|---|---|---|
| ஞாயிறும், செவ்வாயும் | வல்லூறு * | அ-ஆ... | வல்லூறு * |
| திங்களும்புதனும்... | ஆந்தை * | இ-ஈ | ...ஆந்தை * |
| வியாழம்... ... | ...காக்கை * | உ-ஊ... | காகம் ...* |
| வெள்ளி ... ... | கோழி * | எ-ஏ-ஐ... | கோழி * |
| சனி ... ... | ...மயில் * | ஒ-ஓ ஔ | மயில்... * |

(கவி.)

செவ்வாய்ஞாயிறுவல்லூறுசிறந்ததிங்கள்புதனுந்தை
கௌவாம்வியாழங்காரண்டங்கருதுங்கோழிவெள்ளியதா
மவ்வார்சனியோமயிலாகுமானேயிவைநாட்பக்ஷியதாஞ்
செவ்வாய்மயிலேயிவையறிந்துசெப்பாய்பலன்கள்திறம்
[படவே.

அகரமேவல்லூறுமாந்தையிகரம்
உகரங்கருங்காகமுன்னிப் - பகரில்

எகரமதுகோழியாமெஞ்ஞான்றுமஞ்ஞை
ஒகரமதுமெய்யாமுணா.

---

உன்னியொருவனுணாத்தமுதலெழுத்தைப்
பன்னிப்பறவையாப்பாவித்து - மன்னு
முதயாதிபக்ஷியுறுதொழிலேயோர்ந்து
சிதையாதுசெப்பாய்பலன்.

(நக்ஷத்திரபக்ஷி.)

பரிமுதல்வல்லூறைந்தாம்பகர்செங்கைமுதலாறுந்தைத்
திருவுமுத்திரந்தொட்டைந்துஞ்செப்பியகாகமாகும்
மருவுதேளாதியாறுமன்னியகோழிமற்றைப்
பொருவிலாநாட்களைந்தும்புகன்றனர்மயிலாமென்றே.

(இ-ள்.) அசுபதி முதல்-ரு-ம்-வல்லூறு. திருவாதிரை முதல்-சா-ம்-ஆந்தை. உத்திரமுதல்-ரு-ம் -காகம். அனுஷ முதல்-சா-ம்-கோழி. அவிட்டமுதல்-ரு-ம்-மயிலாம்.

(பக்ஷிதொழிலின்நாழிகை.)

ஊண்-கஉ, நடை-கவ, அரசு-உ, தூக்கம்-ஞ, சாவு-உ, நாழிகைகளாகும்.

(கவி.)

ஊண்பக்ஷியொன்றனையாமொன்றேகால் தானடையாம்
ஆம்பக்ஷிரெண்டேயரசாளும் - வீண்பொழுது
தூங்குவதுமுக்காற்றுயரனையாந்துஞ்சுவது
ஆங்கடிகையென்றேயறை.

சுக்கிலபக்ஷப்பகலில்-ஊண்-நடை-அரசு- தூக்கம்-சாவு ஆகவும்;இரவில்-ஊண்-அரசு-சாவு-நடை-தூக்கம் ஆகவும்; அமரபக்ஷப்பகலில்-ஊண்-சாவு-தூக்கம்- அரசு-நடை ஆகவும்; இரவில்-ஊண்-தூக்கம்-நடை-சாவு- அரசு ஆகவுங்கொள்க.

(கவி.)

ஊணடையரசுநித்திரைமரணமுயர்பகலிரவினிலுண்டு நீணிலத்தரசுசெய் துபின்செத்துநெறியினினடந்துமேயுறங்கும், ஊணுறுமமரபக்கநற்பகலூண்பொன்றியுந்துயின்றரசாகிச், சேணுறுநடையுண்டுறங்கியேசென்றுசெத்தரசாகுநல்லிரவே.

(படுபக்ஷி.)

நாயிறு, வெள்ளி ஆந்தை. திங்கள் காகம். செவ்வாய் கோழி.புதன் மயில். வியாழம், சனி வல்லூறு.

வெள்ளியுஞாயிறுநல்லாந்தைமேவுஞ்செவ்வாய்கோழியதாம், ஒள்ளியதிங்கள்காரண்டமொப்பறுபுந்தியுயர்மஞ்ஞை, நள்ளியவியாழநாளினுக்குநயமறுசனிக்கும்வல்லூறும், கள்ளவிழ்கோதாயிந்நாளிற்கண்டிடுபடுபக்ஷிகளென்றே.

நாளை ம-பங்குபண்ணில்-பகலில்-ரு-பங்கும்இரவில்-ரு பங்குமாகப்பங்கு.க-இ-௬-நாழிகையாகும்-அந்தந்தவாரங்களுக்குச் சொன்னகணக்குப்படி பக்ஷிகளின் தொழில்கண்டு-வளர்பிறை தேய்பிறைக்கு உள்ளவிதிப்படி பலன் சொல்லவும்.

(உண்டி.)

போஜனமாகிறபதிவாழும்போனார்மீள்வார் போங்கவலை
காசினிவாழுமழைபொழியுங்களவுமில்லைக்கதிர்விளையும்
பேசுவன்கன்னிப்பேறுகும்பிணியுந்தீரும்பெண்பெறுவா
ள்,வாசிசெழும்பொன்வாணிபமாமன்னவர்வெல்வார்மா
[ங்குயிலே.

(நடை.)

யாத்திரையாயினிலைகுலையுமொன்னார் வெல்வாரிருநி
திபோம், காத்திரமில்லாக்கதிர்விளைவாங்கன்னியர்வாழ்
க்கைநன்றாகா, மாத்திரள்சொல்லும்பொருள்கூடாவாழ்
க்கைதவிர்ந்துமணங்கூடா, சூத்திரஞ்சொன்னபடியறிந்
துசொன்னார்பெரியோர்சுரிகுழலே.

(அரசு.)

அரசேயாயிற்புவிப்பேறுமரசாலேபலனைப்தும் [ம்
முரசமதிரும்வரிசையுடன் மூண்டகருமந்தான்விளங்கு
பரிசும்பெரியோர்திருவிடுவார்பழையபிணிபோம்பயமில்லை
புனைபோங்களவுந்தான்காணும்போக்குமில்லைபுரிகுழலே

(தூக்கம்.)

தூங்குமாயினேய்மாறுந் தூரம்போனார்தாமீளார்
ஆஙகேள்கருமநன்றாகாவரிவைவாழ்க்கைதாழ்வாகும்
தீங்கேயன்றிமழைபொழியாசெந்நெல்விளையாசெழுனா
ஓங்கிமணமுமாறுகுழுண்ணமாகவுணாத்தீதாமே[யனும்

(சாவு.)

துஞ்சுமாயிற்சாவுசொல்லுந் தொலையாப்பிணியுந் தானெய்தும், நெஞ்சினினைத்தபொருள்கூடா நிதியும்போகுநிலைகுலையும், வஞ்சிநோயுமிகவுண்டாமனையாள் வெறுக்கினுறவாகாள், கஞ்சமலரார்குழலாளே கருத்தாயுணர்த்தபடியறியே.

(பல்லிவிழும்பலன்.)

| | |
|---|---|
| தலையில் ... கலகம் | ஸ்தனம் ... ... பீடை |
| புருவமத்தியம்-ராஜசிநேகம் | வயிறு ... தானியலாபம் |
| மேலுதடு ... விரயம் | மார்பு ... லாபம் |
| கீழுதடு ... ... லாபம் | தொப்புள் - ஆபரணலாபம் |
| மூக்கு ... ரோகம் | இரண்டுபக்கமும் ... லாபம் |
| வலதுகாது - ஆயுள்விருத்தி | தொடைகள் - தாய்தந்தைய |
| இடதுகாது-வர்த்தகலாபம் | [ர்க்குப்பீடை |
| கண்கள் ... சிறைப்படல் | முழங்கால்-கணைக்கால்-சுகம் |
| முகவாய்க்கட்டை-அரசபய | பாதம் ... அலைச்சல் |
| கழுத்து...பகை-நாசம் [ம் | புட்டம்... ... சுபம் |
| வலதுதோள்-ஆரோக்கியம் | நகம் ... பொருட்சேதம் |
| இடதுதோள்-ஸ்திரிபோகம் | குதம் } ... ... வறுமை |
| வலதுமணிக்கட்டு...பீடை | குய்யம் } |
| இடதுமணிக்கட்டு...மேன்மை | மயிர் ... மரணம் |

(எண்ணெயிடநாள்.)

அருக்கனெண்ணெயழகழிக்கும்
அணியார்திங்களாகாது

திருக்காஞ்செவ்வாயுயிர்போக்குஞ்
செய்யபுதனற்பொருளுண்டாம்
கருத்தையழிக்குங் கவின்வியாழம்
கைப்பொருள்போக்குங்கனவெள்ளி
பெருக்கமுண்டாஞ்சனியெண்ணெய்
பேணன்முழுகவல்லாரோ

(பரிகாரம்.)

எண்ணெயிடலாகாவிருங்கிழமைதன்னிலே
எண்ணெயிடவேண்டியிருந்தக்கால்-விண்ணியலும்
ஞாயிறுபூசெவ்வாய்மண் ணல்லவியாழம்மறுகு
நேயவெள்ளிநீறிடுகவே.

எண்ணெயிடலாகாதவாரங்களிலே அவசியம் எண்ணெயிடவேண்டியிருந்தால்?

| | | |
|---|---|---|
| ஞாயிறு - பூ | | |
| செவ்வாய்-மண் | } | எண்ணெயிற்சேர்த்து இடவும் |
| வியாழம்- அறுகு | | |
| வெள்ளி - திருநீறு | | |

நித்திரையசனமெண்ணெய்நிறைமயிர்ச்சவரநான்கும்
உத்தமங்கிழக்குநன்றுமோங்குயிர்வளருந்தெற்குச்
சித்தமேகலங்குமேற்குத்திசைகேடுநாலுமூலை
அத்தமுமகமும்போக்குமானதோர்வடக்குத்தானே.

நித்திரை, போசனம், எண்ணெயிடல், க்ஷவரம், இவை நான்குக்கும்-கிழக்கு உத்தமம், தெற்கு - ஆயுள்விருத்தி, மேற்கு-மனவருத்தம், வடக்கு-பொருளும்- வீடுமுதலியவும்போக்கும்மற்றமூலைத்திசைகள்-கேடுதரும்.

(கௌரிபஞ்சாங்கம்.)

நாள்-௧-க்கு-முகூர்த்தம்-௮, முகூர்த்தம்-௧-க்கு-நாழிகை-௩-¾; இந்தப்படி அந்தந்தவாரங்களின் உதயமுதலாக ஒவ்வொருமுகூர்த்தங்களுக்கும் பலனறிக.

| (ஞாயிறு.) | (திங்கள்.) | (செவ்வாய்.) | (புதன்.) | |
|---|---|---|---|---|
| பகல். | பகல். | பகல். | பகல். | |
| உத்யோகம் | அமுதம் | ரோகம் | லாபம் | ௧ |
| அமுதம் | விஷம் | லாபம் | தனம் | ௨ |
| ரோகம் | ரோகம் | தனம் | சுகம் | ௩ |
| லாபம் | லாபம் | சுகம் | சோரம் | ௪ |
| தனம் | தனம் | சோரம் | விஷம் | ௫ |
| சுகம் | சுகம் | உத்யோகம் | உத்யோகம் | ௬ |
| சோரம் | சோரம் | விஷம் | அமுதம் | ௭ |
| விஷம் | உத்யோகம் | அமுதம் | ரோகம் | ௮ |
| இரா. | இரா. | இரா. | இரா. | |
| தனம் | சுகம் | சோரம் | உத்யோகம் | ௧ |
| சுகம் | சோரம் | உத்யோகம் | அமுதம் | ௨ |
| சோரம் | உத்யோகம் | விஷம் | ரோகம் | ௩ |
| விஷம் | அமுதம் | அமுதம் | லாபம் | ௪ |
| உத்யோகம் | விஷம் | ரோகம் | தனம் | ௫ |
| அமுதம் | ரோகம் | லாபம் | சுகம் | ௬ |
| ரோகம் | லாபம் | தனம் | சோரம் | ௭ |
| லாபம் | தனம் | சுகம் | விஷம் | ௮ |

| (வியாழம்.) | (வெள்ளி.) | (சனி.) | |
|---|---|---|---|
| பகல். | பகல். | பகல். | |
| தனம் | சுகம் | சோரம் | க |
| சுகம் | சோரம் | உத்யோகம் | உ |
| சோரம் | உத்யோகம் | விஷம் | ங |
| உத்யோகம் | விஷம் | அமுதம் | ச |
| அமுதம் | அமுதம் | ரோகம் | ரு |
| விஷம் | ரோகம் | லாபம் | சா |
| ரோகம் | லாபம் | தனம் | எ |
| லாபம் | தனம் | சுகம் | அ |
| இரா. | இரா. | இரா. | |
| அமுதம் | ரோகம் | லாபம் | க |
| விஷம் | லாபம் | தனம் | உ |
| ரோகம் | தனம் | சுகம் | ங |
| லாபம் | சுகம் | சோரம் | ச |
| தனம் | சோரம் | உத்யோகம் | ரு |
| சுகம் | உத்யோகம் | விஷம் | சா |
| சோரம் | விஷம் | அமுதம் | எ |
| உத்யோகம் | அமுதம் | ரோகம் | அ |

(பஞ்சசலாகசக்கரம்.)



இந்தப்பஞ்சசலாக சக்கரத்தினாலே- நக்ஷத்திரங்களுக்குப்பாபக்கிரகவேதை தெரிந்துகொள்ளலாம், எப்படியென்றால் - எந்த ரேகையிலாவது இருக்கிறநக்ஷத்திரத்திலே பாபக்கிரகமிருந்தால் அந்தரேகைக்கு-எதிரிலிருக்கிறநக்ஷத்திரத்துக்குவேதை. இப்படிக்கு - எல்லாநக்ஷத்திரத்துக்கும் தெரிந்துகொள்ளவேண்டியது. அதற்குத்திருஷ்டாந்தரம் கார்த்திகையில் பாபக்கிரகமிருந்தால் விசாகம்-எதிராகையால் அந்தவிசாகத்துக்குவேதை சூரியன்- குஜன்-சனி - ராகு-கேது-இவர்கள் பாபக்கிரகங்களாகையால்-இவர்களிருக்கிற நக்ஷத்திரத்தில் சுபகாரியங்கள் செய்யக்கூடாது.

## (லத்தைகளறியும்படி.)

சூரியனிருக்கிறநக்ஷத்திரத்துக்கு ௧௨-வது-நக்ஷத்திரமும், சந்திரனிருக்கிற நக்ஷத்திரத்துக்கு-௭-வது-நக்ஷத்திரமும், குஜனிருக்கிறநக்ஷத்திரத்துக்கு-௩-வது-நக்ஷத்திரமும், புதனிருக்கிற நக்ஷத்திரத்துக்கு-௨௩-வது-நக்ஷத்திரமும், குருவிருக்கிற நக்ஷத்திரத்துக்கு-௬-வது-நக்ஷத்திரமும், சுக்கிரனிருக்கிற நக்ஷத்திரத்துக்கு-௨௫-வது-நக்ஷத்திரமும், சனியிருக்கிறநக்ஷத்திரத்துக்கு-௮-வது-நக்ஷத்திரமும், இராகுவிருக்கிற நக்ஷத்திரத்துக்கு ௨௧-வது - நக்ஷத்திரமும்,கேதுவிருக்கிறநக்ஷத்திரத்துக்கு-௨௧-வது-நக்ஷத்திரமும், லத்தையென்று சொல்லப்படும், இதில் சூரியன்-அங்காரகன்-சனி-ராகு-கேது-இவர்கள்-௫- பேரும்-பாபக்கிரகமாகையால்-இவர்களுடைய லத்தையுண்டாகிய நக்ஷத்திரங்களிலே சுபகாரியங்கள்செய்யக்கூடாது.

சப்தசலாக
(சக்கரம்.)




இந்த சப்தசலாக சக்கரத்திலே நக்ஷத்திரங்களுக்கு வேதாக்கிராந்தங்களை அறிந்து கொள்ளலாம்.

## பாலாரிஷ்டமறிய.

ஒருவர்முகம் ஒருவருக்குக்காணப்படுங்காலமுதல் சூரியமண்டலத்தின் அர்த்தோதய சமயவரையுள்ள இரண்டுநாழிகைவரையும் காலைச் சந்தியாம்.

சூரியமண்டலத்தின் அர்த்தாஸ்தமய சமயமுதல் நக்ஷத்திரப்பிரகாசங் காணப்படுங்காலவரையுள்ள இரண்டுநாழிகைவரையும் மாலைச் சந்தியாம்.

இச்சந்தியாகாலங்களில் சந்திரஹோரை ஜனனகாலமாய் எந்தஇராசிகளிலாயினும் கடைசி நவாம்சையைப் பெற்ற பாபிகளால் பிறந்த மகவு பிழைத்திராது.

கேந்திரங்களாகிய இலக்கின சதுர்த்த சத்தம தசமங்களில்மூன்றுபாபிகளும் சந்திரனும்ஓவ்வொருதானத்து ஒவ்வொருவராயிருந்தால் பிறந்தகுழவி பிழைத்திராது. ☞ இதுரோகவிஷயப்பிரஸ்னேயிலும்உபயுக்தமாகும்.

இலக்கினத்தில் எத்தனைபாகைகள் கழிந்தனவோ அத்தனைபாகைகளையும்தசமபாவத்திற் கழித்து,கழிபடவேண்டிய பாகைகளெத்தனையோ அவற்றைத்தசமத்திலும், ஏகாதச துவாதச லக்கின துவிதீய திரிதீயங்களிலும் சதுர்த்தத்தில் இலக்கினத்தில் எத்தனைபாகைகள் கழிந்தனவோ அத்தனைபாகைகள்வரையிலும் சக்கரபூர்வார்த்தம் என்றும்,

சதுர்த்தத்தில் மிகுந்திருந்தபாகைகளும் பஞ்சம சஷ்டம சப்தம அஷ்டம நவமங்களும் தசமத்தில் இலக்கின

த்தில் எத்தனைபாகைகள் கழிந்தனவோ அத்தனைப்பாகைகள் வரையிலும்சக்கிரோத்தரார்த்தம்என்றும்,சொல்லப்படும்.

பாபக்கிரகங்கள் பூர்வார்த்தத்திலும். சுபக்கிரகங்கள் உத்தரார்த்தத்திலும் இருக்க விருச்சிகலக்கினத்தாயினும், கடகலக்கினத்தாயினும் பிறந்தசிசுவு உயிர்த்திராது.

இலக்கினத்திற்கும் ஏழாமிடத்திற்கும் இரண்டுபன்னிரண்டாகிய இரண்டுபக்கங்களில் பாபக்கிரகங்கள் இருந்து, சுபர்களாற் பார்க்கப்பெருமலும் சுபருடன்கூடாமலுமிருந்தால் சிசுவுமரணமடையும்.

பன்னிரண்டுக்குடையோன் இலக்கினத்தும், ஆறுக்குடையோன்-ஏழிலும், சு-ய௨-களில் பாபிகளுமிருக்கப் பிறந்தபிள்ளை மரிக்கும்.

சிலர்-இரண்டுக்குடையோன் இலக்கினத்தும், அட்டமத்துக்குடையோன் ஏழிலும் இருந்து பாபிகள்-உ-அ-களிலிருந்தால் பாலாரிஷ்டமுண்டாமென்பர்.

இலக்கினத்தொருபாபியும் ஏழிலொருபாபியு மிருந்து சந்திரன் பாபிகளுடன்சேர்ந்து சுபர்நோக்கில்லாமல் எந்தராசியி லிருந்தபோதிலும் பிறந்தபாலன் சீக்கிரத்தில்மரிப்பான்.

க்ஷீணசந்திரன் - ய௨ - லும், பாபிகள் இலக்கினத்தும் எட்டிலுமிருக்கச் சன்மம் - சு - எ - ய - ஆகியகேந்திரங்

களில் சுபக்கிரகங்கள் இல்லாதிருக்கப் பிறந்தபாலன் சீக்கிரத்தில்மரிப்பான்.

பாபக்கிரகங்களோடுகூடின சந்திரன் ஜன்மலக்கினம்-எ-அ-௰உ-ஆகிய இடங்களொன்றில் இருந்து கேந்திரவியதிரிக்தஸ்தானங்களிலிருந்த சுபர்களால் பார்க்கப்பெருனுயின் சிசுமரிக்கும்;சுபக்கிரகங்கள்கேந்திரத்திலிருந்தால் அரிஷ்டமில்லை என்றுகிக்கவும்.

சஷ்டாஷ்டமங்கள் ஒன்றிலிருக்கும் சந்திரனைப் பாபிகள்பார்க்கச் சுபர்கள்பாராமலிருந்தால் பிறந்தபிள்ளை ஒரு மீ' த்திில்மரிக்கும்.

இலக்கினத்துக்கு -சு-அ-லிருக்கும்சந்திரன் சுபரால் பார்க்கப்பெற்றுப் பாபிகளால்பார்க்கப்பெருவிடினும்பிறந்தபிள்ளை எட்டுவருஷம் பிழைத்திருக்கும். மேல்மரிக்கும்.

இலக்கினத்துக்கு-சு-அ-லிருக்கும் சந்திரன் சுபாசுபர்களால் பார்க்கப்பெற்றுல் நான்குவருஷம் ஜீவித்திருக்கும். மேல்மரிக்கும்.

இந்த-சு-அ-களிலிருந்த சந்திரன் அசுபத்தானத்திருந்துபாபிகளால் பார்க்கப்பெற்றுல் பிறந்தபோதே மரணமென்றும்;சு-அ - களிலிருந்தசந்திரன் சுபத்தானத்திருந்தாலும் அசுபத்தானத்துச் சுபருடன் கூடினுலும் மரணமுண்டாகாதென்று அறியவும். சு-அ-களிலிருக்கும்சந்திரன் எந்தக்கிரகங்களாலும்பார்க்கப்பெருமலிருந்தால்

ஒருவருஷத்திலும் பாபக்கிரகங்களால் பார்க்கப்பெற்றால் ஒருமாதத்திலும் அரிஷ்டமுண்டாகும்.

சுக்லபக்ஷம் இராத்திரியிலும், கிருஷ்ணபஷம்பகலிலும் சனித்தபிள்ளையை-சு-அ-களிலிருக்கும் சந்திரன்சுபாசுபர்களால் பார்க்கப்பெற்றால் ஆபத்துக்காலங்களிலே பிதாவைப்போற்காப்பாற்றுவான்.

இவ்வரிஷ்டம் சுக்லபக்ஷத்துப்பகலிலும், கிருஷ்ணபக்ஷமிராத்திரியிலும் சனித்தவற்கே சம்பவிக்கும்.

இந்த-சு-அ-களிற் சுபனிருந்து பலீயமானபாபிகளால் பார்க்கப் பிறந்தசிசுவு - க - ஸ்ரீ பிழைக்கும். சு - அ-களிலிருந்த சுபக்கிரகத்தை மற்றொருசுபன் பார்த்தால் அரிஷ்டமில்லை.

இலக்கினாதிபதி பாபியால் யுத்தத்தில் வெற்றிகொள்ளாமல் ஏழிலிருக்கப்பிறந்தபிள்ளை ஒருமாதத்தின்மீது பிழைத்திராது.இலக்கினாதிபதிபாபிகளால் யுத்தத்தில் வெற்றியடையப்பட்டு ஏழிலிருக்கப்பிறந்தபிள்ளை-க-ஸ்ரீ பிழைத்திருக்கும்.

க்ஷீணசந்திரன் சன்மலக்கினத்திருக்க அஷ்டமத்திலும்கேந்திரங்களிலும் பாபிகளிருக்கச்சிசுமரணமடையும்.

சு-எ-அ- ஆகியஇடங்களொன்றிலிருக்கும் சந்திரன் இரண்டுபாபிகள்நடுவேயிருக்கப்பிறந்தபிள்ளை மரிக்கும்.

(தாய்சிசுமரணமறிய.)

சந்திரன் பலீயர்களான சுபர்களால் பார்க்கப்பெறும ல்பாபிகள்நடுவே சன்மலக்கினத்திருக்கப் பாபிகள் - எ அ-லிருக்கப் பிறந்தபிள்ளையுந்தாயும் மரிக்கும்.

சிலர்சந்திரன் பலீயர்களானசுபர்களால் பார்க்கப்பெ ற்றுப் பாபிகள்நடுவே சன்மலக்கினத்திருக்கப் பாபிகள் எ-அ-லிருக்கப் பிறந்தபிள்ளைமாத்திரம் மரிக்குமென்று ம்; சிலர்தாய்க்கும் மகவிற்கும் வியாதியுண்டாமென்றும் சொல்லுவார்கள்.

(சிசுமரணமறிய.)

எந்தராசியிலாயினும் ஒன்பதாவதுநவாம்சையைப்பெ ற்ற சந்திரன்சுபர்களால்பார்க்கப்படாமலிருக்க ஐந்தொ ன்பதுகளிலிருந்தபாபிகளால்பிறந்தபிள்ளைமரிக்கும்.

சந்திரன்லக்கினத்திருந்து ஏழில் பாபிகளிருக்கப்பிற ந்தபிள்ளைமரிக்கும்.

(தாய்சிசுமரணமறிய.)

சனியுடன்சேர்ந்தசந்திரன் இலக்கினத்திருக்கக் கிரக ணகாலத்தில் இராகுபிடிக்கும்பொழுதுசெவ்வாய்-அ-லி ருக்கப்பிறந்தபிள்ளையுந் தாயும்மரிக்கும்.

சனியுடன்சேர்ந்தசூரியன் * புதனுடன் இலக்கினத்தி ருக்கக் கிரகணகாலத்தில் இராகுபிடிக்கும்பொழுதுசெ வ்வாய்-அ-லிருக்கப்பிறந்த பிள்ளையுந்தாயும்மரிக்கும்.

* சூரியனுடன்கூடுகையால்புதன் அசுபனானன்.

பலீயமான சுபர்களுடன்கூடாமலும் அவர்களாற்பா ர்க்கப்பெருமலுமிருக்கின்ற சூரியனுயினும், சந்திரனுயி னும் இலகஇனத்திருக்க-ரு-அ-கூ-களில் பாபிகளிருக்கம ரணமுண்டாம். சுபர்கூடப்பார்க்கமரணமுண்டாகாது.

௰௨-ல்-சனியும்,கூ-ல்-சூரியனும், இலக்கினத்தில் - சந் திரனும், அ-ல்-செவ்வாயுமிருக்க இவர்களைப் பலீயனு ன குரு பாராவிடின் பிறந்தபிள்ளை விரைவில்மரிக்கும். இவர்களிற் சிலரைப்பலீயனுன குருபார்த்தும் சிலரைப் பாராதிருக்கினும்; குருபலஹீனனுய்இவர்களெல்லாரை யும் பார்த்தாலும் பிறந்தபிள்ளைசிலகாலம் பிழைத்திரு ந்து மரிக்கும். பலீயனுய்-குரு-ரு-விருந்து அந்நால்வரை யும் பார்த்தால் அரிட்டமில்லை.

இலக்கினம்-ரு-எ-அ-கூ-௰௨-ல் - க்ஷீணசந்திரன் பாபி யுடன்கூடிப்பலீயர்களான புதகுருசுக்கிரர்களிலொருவ ருடன்கூடாமலும், இவர்களிலொருவராற் பார்க்கப்பெ ருமலும் இருந்தால் பாலாரிஷ்டமுண்டாகும்.

இலக்கினம்-ரு-எ-அ-கூ-௰௨ - ல்-க்ஷீணசந்திரன் பாபி யுடன் பலீயர்களான புதகுருசுக்கிரர்களி லொருவருட ன்கூடினுலும், இவர்களிலொருவராற் பார்க்கப்பெற்று லும் பாலாரிஷ்டமில்லை.

செவ்வாய் சுபர்பாராதிருக்க இலக்கினத்திருந்து - சு- லாயினும் - அ - லாயினும் சனியிருந்தாலும் அவ்விருவ ர்-எழிலிருந்துசுபர்பாராவிடினும்பிறந்தபிள்ளைமரிக்கும்.

(சந்திரசாரத்தாலரிஷ்டமறிய.)

அரிஷ்டயோககர்த்தர்களிலே பலீயனுடையஸ்தானத்தை ஒருவருஷத்துக்குள்ளே அநேகபாபிகளாற் பார்க்கப்பெற்ற பலீயனுனசந்திரன் அடையும்போதுபாலாரிஷ்டமுண்டாம்.

பாபவீக்ஷிணியம்பெற்ற பலீயனுனசந்திரன் ஜனனகாலத்தில் தானிருந்தராசியிலும், அல்லது சன்மலக்கினராசியிலும் வரும்போது பாலாரிஷ்டமுண்டாகும். இதன்தாற்பரியவிவரம் அரிஷ்டயோக கர்த்தக்கிரகங்களிலே பலீயமானகிரகம் சன்மகாலத்தில் எந்தராசியிலிருக்குமோ அந்தராசியில் சந்திரன் அனேகபாபக்கிரகநோக்குடையவனும் பலீயனும் ஒருவருஷத்துக்குள்ளே எப்போது பிரவேசிக்கிறுனோஅப்போதாவது,சந்திரன் சன்மகாலத்தில் தானிருந்தராசியில் அனேகபாபக்கிரகநோக்குடையவனும் பலீயனும் ஒருவருஷத்துக்குள்ளே மறுபடியும் எப்போதுபிரவேசிக்கிறுனே அப்போதாவது, சன்மலக்கினராசியில் மேற்சொன்னகுணமுடையசந்திரன் எப்போது பிரவேசிக்கிறுனே அப்போதாவது சிசுவிற்குமரணமுண்டாகும்.

(பிதுருமாதுருசிசுமுதலானவர்களுக்கரிஷ்டமறிய.)

இவ்வரிட்டங்கள் சன்மகாலத்துததிரோக்காணங்களாலேயும், சந்திரன்நின்ற நக்ஷத்திரத்தினுலேயும்,சந்திரன் ஏறிநின்றநவாம்சையினுலேயும், சன்மகாலக்கிரககதியினுலேயும், இந்நாலுவிதங்களாலும்சம்பவிக்கின்றன.

பாலாரிஷ்டபங்கமறிய-

பிரகஸ்பதிமிகவும் பலீயனாய் இலக்கினத்திருந்தால் ஸ்ரீஹரிபதியைப்பக்தியுடன்செய்யும் அஞ்சலிகள் அநேகபாபங்களை யெப்படிப்போக்குமோ அதுபோல சகல அரிஷ்டங்களும்போகும்.

இலக்கினாதிபதி பாபிகளால் பார்க்கப்பெறாமல் மிகவும்பலீயனாய் கேந்திரஸ்தானங்களிலிருந்து-சுபர்களால் பார்க்கப்பெற்றால் அரிஷ்டபங்கஞ் செய்து அநேகசத் குணசம்பத்தோடு தீர்க்காயுளையுந்தருவான்.

சந்திரன் இலக்கினத்துக்கு - எட்டிலிருந்தாலும் புதன் குருசுக்கிரர்களுடைய திரேக்காணமேறினும் அரிஷ்டபங்கமாகும்.

பூரணசந்திரன் சுபக்ஷேத்திரத்திலிருந்து சுபர்கள்மத்தியிலிருத்தலாலேயே அரிஷ்டபங்கமாம். சுக்கிரனால் பார்க்கப்பெற்றாலோ மிகவும் விசேஷம்.

புதகுரு சுக்கிரர்களில் ஒருவன் பலீயனாய் கேந்திரத்திலிருக்கப்பாபியுடன்சேர்ந்தபோதிலும் அரிஷ்டபங்கம்

சந்திரன்-௬-ல்-இருந்தாலும் புதகுருசுக்கிரர்களுடைய திரேக்காணமேறி நிற்பினும் சர்ப்பவிஷம் தலைக்கேறினவனை கருடன் எப்படிரக்ஷிப்பானோ அப்படி ரக்ஷிப்பான்.

